பக்கங்கள் : 22+VIII=30

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 1 ஞாயிற்றுக்கிழமை (17.07.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :233

# புலிகள் ஆயுதங்களுடன் வருவதை அனுமதியோம்!

## மீறிவந்தால் உடன்படிக்கைக்கு அமைய நடவடிக்கை என்கிறது படைத்தரப்பு

கொழும்பு,ஜூலை17

**இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் விடுதலைப் புலிகள் ஆயுதபாணிகளாகப் பிரவேசிப்பதை படையினர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். அதையும் மீறி புலிகள் ஆயுதங்களுடன் நுழைய முற்பட்டால் போர்நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க.**

தமது போராளிகளின் பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தும் விடயத்தில் அரசு மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தினால் புலிகள் தமக்கே உரிய வழியில் பயண வழிமுறைகளைக் கைக்கொள்வர் என்ற சாரப்பட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருப்பது தெரிந்ததே.

புலிகளின் இந்த அறிவிப்பைஅடுத்து எழுந்துள்ள நிலைமை குறித்து இராணுவத் தரப்பின் நிலைப்பாடு என்ன என்று கேட்டபோதே இராணுவப் பேச்சாளர் தயா ரத்நாயக்கா மேற்கண்டவாறு பதிலளித்திருக்கிறார்.

இதுதொடர்பாக அவர் கொழும்பு ஊடகம்

(18ஆம் பக்கம் பார்க்க)

### ☛ உள்ளே சூரியகாந்தியில்

* போரைத் திணிக்க முயல்வது தப்புக்கணக்கின் காரணமோ?
* மீண்டும் யுத்தமா? சர்வதேச சமூகம் என்ன செய்யப் போகிறது?
* மாமங்களை விடுவிக்கும் 'ஆழமான மோதல்'!
* வெளிநாட்டுப் பணப்புழக்கத்தால் யாழ்ப்பாணம் இன்று...
* பொது இடங்களில் சுத்தம் பேணுவதில் கரிசனை இல்லையா?

இவற்றுடன் மற்றும் பல அம்சங்கள்...

## கருணா அணியைச் சேர்ந்தவர் சிலாபம் நகரில் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஜூலை17

சிலாபம் நகரப் பகுதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவர் கருணா அணியைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

திருகோணமலையைச் சேர்ந்த ஆறுமுகம் குபேந்திரன்(வயது 27) என்பவரே கொல்லப்பட்டவராவார் என்று இனங்காணப்பட்டுள்ளது.

கருணா அணியைச் சேர்ந்த பிரஸ்தாப இளைஞன் கடை ஒன்றில் வேலை பெறும் நோக்குடன் சிலாபம் பகுதிக்கு கடந்த ஒன்றரை மாதத்துக்கு முன்னர் வந்து அங்கு தங்கியிருந்தார் என்று கூறப்படுகிறது.

நேற்று நண்பகல் அவர் நகரப் பகுதியில் நடமாடிக்கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர் ஒருவர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டார் என்றும் -

(18ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் நேற்று சிப்பாய் சுடப்பட்டு மரணம்!

மட்டக்களப்பு,ஜூலை17

மட்டக்களப்பில் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் - வந்தாறுமூலையில் நேற்று மாலை 5.30 மணியளவில் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொம்மாந்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த லான்ஸ் கோப்ரல் சுஜித்குமார (வயது 25) என்ற சிப்பாயே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வாழைச்சேனை - மட்டக்களப்பு வீதியில் வழமையான வீதிக் கண்காணிப்புப் பணிக்காக பிரஸ்தாப சிப்பாய் சென்றார் என்றும் -

மறைந்திருந்த நபர் ஒருவர் சிப்பாயைச்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பொது அமைப்புகள் நாளை கூடி தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

தற்போதைய நிலைமையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நாளை ஒன்று கூடித் தீர்மானிக்கவுள்ளனர்.

இதற்கான ஒன்றுகூடல் நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறும்.

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் பொது

(18ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் படை உயரதிகாரிகளின் நடமாட்டங்களுக்குக் கட்டுப்பாடு

கொழும்பு,ஜூலை17

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புக்கு பொறுப்பான முப்படைகள் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் தங்கள் நடமாட்டங்களை கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு படை உயர் மட்டத்தில் இருந்து அறிவுறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபட்ட போராளிகளை விடுதலைப் புலிகளின் தலைமை தமது பிரதேசத்துக்குத் திருப்பி அழைத்துள்ள சூழ்நிலையை அடுத்து இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

முப்படைகள் மற்றும் பொலீஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் நடமாட்டங்களைத் தவிர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தக்கூடிய சாத்தியம் இருக்கின்றபடியால் அநாவசியமாக வெளியில் நடமாடுவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் படை உயர்மட்டம் அறிவுறுத்தியுள்ளது எனத் தெரியவந்தது.

இதற்கிடையில் -

முப்படைகளின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று திருகோணமலைக்கு சில தினங்களுக்கு முன்னர் சென்று பாதுகாப்பு நிலைமைகளை மதிப்பிட்டுள்ளது.

(ஐ-3)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு சென்று திரும்ப தனிப் பாதை

### அமைக்கப்படும் என்று படைத் தளபதி உறுதி

யாழ்ப்பாணம்,ஜூலை17

வலி.வடக்கில் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு நோயாளர்களும் பணியாளர்களும் சென்றுவருவதற்கு வசதியாக புதிய பாதை ஒன்று அமைக்கப்படும்.

யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இந்த உறுதிமொழியை படைத் தளபதி தமக்கு வழங்கியிருக்கிறார் என்று வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் சி.ரங்கராஜா நேற்றுத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ரங்கராஜன் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு நோயாளர்கள், பணியாளர்கள் சென்றுவருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும் இதற்கென தனியான ஒரு பாதையை அமைத்து அதன் மூலம் நோயாளர்கள், பணியாளர்கள் சென்றுவரவும் வைத்தியசாலைகளின் செயற்பாடுகளைத் தடங்கல்கள் இன்றி முன்னெடுக்கவும் உதவுவதாக இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் எமக்கு உறுதியளித்துள்ளார்.

- இவ்வாறு ரங்கராஜா மேலும் தெரிவித்தார்.

(ஐ-8-7-51)

## அரசை எவரும் அசைக்கமுடியாது அடித்துக்கூறுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை17



தற்போதுள்ள அரசு அதன் ஆட்சிக்காலம் முடியும் வரை - அதாவது ஐந்து வருடங்களுக்கு - ஆட்சியில் இருக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.


மாத்தளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எமது ஆட்சியில் எம்மோடு சேர்ந்து இருந்தவர்கள் போய் விட்டார்கள். அதையிட்டு நாங்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. யார் என்ன கூத்து நடத்தினாலும் எமது ஆட்சி ஐந்து வருடங்களுக்கு நீடிக்கும் அதில் எந்தவித மாற்றமும் இல்லை.


மக்களுக்கான பணியைத் தொடர்ந்து அரசு மேற்கொள்ளும். மக்கள் விருப்பப்படி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். எவர் எதிர்த்தாலும் அரசு பின்வாங்கப் போவதில்லை - என்றார் அவர்.

(ஐ-3)









தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக் கட்டடமும் நேற்று உயர் பாதுகாப்பு வலயத்தில் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வுக்கு வருகை தந்த வடக்கு -கிழக்கு மாகாண ஆளுநர் வரவேற்கப்படுவதையும், புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்தின் நினைவுக்கல்லை ஆளுநர் திறந்துவைப்பதையும், தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்த்துரை வழங்குவதையும் வைத்திய சாலையின் முகப்புத்தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் :பிரபா)*

# போரை ஒருநாள் நடத்துவதற்குத் தேவையான நிதி ஆஸ்பத்திரியை முழுமையாக இயக்கப் போதுமானது!

## தெல்லிப்பழை வைத்தியசாலை நிகழ்வில் ஆளுநர் டிரோன்

யாழ்ப்பாணம்,ஜூலை17

போரைத் தொடங்குவதும் அதனைத் தொடர்ந்து நடத்துவதும் சுலபமானது. ஆனால், சமாதானத்தைப் பேணுவது என்பது மிகக்கடினமானதாகும். போர் மீண்டும் ஆரம்பித்தால் அந்தப் போரை ஒருநாள் நடத்துவதற்குத் தேவையான செலவு இந்த ஆஸ்பத்திரியை முழுமையாக இயங்கவைப்பதற்குப் போதுமானதாகும்.

- இப்படித் தெரிவித்தார் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை நேற்று உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் ஆரம்பித்துவைத்த பின்னர் ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ அங்கு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இத்திறப்பு விழா நிகழ்வு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுக்காலை 10.45 மணியளவில் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆளுநர் தொடர்ந்து உரையாற்றுப்போது தெரிவித்ததாவது:-

முன்னர் நடைபெற்ற யுத்தம் மீளவும் ஆரம்பிக்கக்கூடாது என்பதே மக்களின் பிரார்த்தனை ஆகும். போரை ஆரம்பிப்பதும் அதனைத் தொடர்ந்து நடத்துவதும் மிகவும் சுலபமாகும். ஆனால், சமாதானத்தைக் கடைப்பிடிப்பது கஷ்டமானதாகும்.



இலங்கையில் சுமார் 2000 பேர் புற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் 500 பேர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளார்கள். எய்ட்ஸைப் போலவே புற்றுநோயும் மிகவும் துக்ககரமான நோயாகும். புற்றுநோயை ஆரம்பத்திலேயே சிகிச்சை மூலம் தடுக்கலாம். புற்றுநோயைத் தடுக்காவிட் டால் போரைப் போலவே அது பரவி அழிக்கக்கூடியது.

யாழ்.மாவட்டத்திலுள்ள புற்றுநோயாளர்கள் கொழும்புக்குச் சென்று பல ஆயிரக்கணக்கான ரூபாக்கள் செலவு செய்து மிகவும் கஷ்டமடைந்ததையறிந்து எமது ஜனாதிபதி வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக நான் பதவியேற்ற மறுநாளே இவ்வைத்தியசாலையைத் துரிதமாகத் திறந்து புற்றுநோய்ப் பிரிவை இயங்கவைக்கவேண்டும் என எனக்குக் கட்டளையிட்டார். 2005 ஜனவரி 10ஆம் திகதி நான் இங்கு வந்து இவ்வைத்தியசாலையின் கட்டட வேலைகளைப் பார்வையிட்டேன். வெவ்வேறு நிறுவனங்கள் எமக்கு நிதியை வழங்கின.

சமாதானத்தை ஏற்படுத்த எவ்வளவோ முட்டுக்கட்டைகள் ஏற்படலாம். முட்டுக்கட்டைகளை நீக்க நாம் முயலவேண்டும். மனித குலத்தின் உயர்ந்த குணம் எவ்வளவு தரம் விழுந்தாலும் எழுந்துவரும் குணமாகும்.எனவே எமது தடைகளை வென்று நாம் எழுந்து எமது பணியைத் தொடரவேண்டும் என்றார். (ஐ-51)

## லயன்ஸ் கழகத்தின் மருத்துவமுகாம்

யாழ். லயன்ஸ் கழகத்தின் மருத்துவ முகாம் ஒன்று நேற்று சனிக்கிழமை முற்பகல் நாவாந்துறை றோ.க.வித்தியாலத்தில் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமில் கண், பொது வைத்தியம், நீரிழிவு நோயாளர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கண்பார்வை குன்றியவர்களுக்கு கண்ணாடியும் இலவசமாக வழங்கப்பட்டன. டாக்டர் சிவச்செல்வன் வழிகாட்டலில் மருத்துவபீட மாணவர் குழு ஒன்று இம்முகாமை நடத்தியது. (ஐ-3)

## இந்து மாநாடு இன்று நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய இந்து மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

நாளைய மூன்றாம் நாள் நிகழ்ச்சிகளும் இன்றைய தினமே நடத்தப்பட்டு இன்றுடன் மாநாடு நிறைவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெறவிருந்த நிகழ்வுகள் திங்கட் கிழமைக்கு ஒத்திவைக்கப்படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. எனினும் அந்த முடிவை மாற்றி திட்டமிட்டபடி இரண்டாம் நாள் நிகழ்வையும், மூன்றாம் நாள் நிகழ்வையும் இன்றைய தினமே நடத்திமுடிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விளையாட்டு விழா

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூ.சங்கத்தின் ஆதரவில் நடத்தப்பட்ட சண்டிலிப்பாய் கல்வளை பாரதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்றுப் பி.ப. 2.30 மணியளவில் சங்கத்தின் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-13)

### புற்றுநோய்க் கதிர்வீச்சு சிகிச்சை:

## யாழ். ஆஸ்பத்திரியில் இருந்தே நோயாளர்கள் செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை17

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் புற்றுநோய்ச்சிகிச்சைப் பிரிவில் கதிர்வீச்சு இயந்திரம் மூலம் சிகிச்சை பெறவேண்டிய நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்தே அங்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

- இவ்வாறு பிரதிமாகாண சுகதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை வைத்தியசாலையின் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு உயர்பாதுகாப்பு வலயத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அங்கு சிகிச்சை பெறச் செல்வோருக்கு எவ்வித ஏற்பாடுகள் செய்துள்ளீர்கள் என்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புற்றுநோயாளர்களில் கதிர்வீச்சு இயந்திரம் மூலம் மாதாந்தம் சிகிச்சை பெறவேண்டியவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு குறிப்பிடப்படும் திகதி அன்று வருகை தரவேண்டும்.

அவர்கள் அங்கிருந்து அம்புலன்ஸ் வண்டி மூலம் தெல்லிப்பழைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-13)

## சிகிச்சை பெற்றுவந்த சிறுவனைக் காணோம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

யாழ். போதனா வைத்தியசாலையில் 28ஆம் வார்ட்டில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த பதினொரு வயதுச் சிறுவனைக் காணவில்லை என்று மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் வடக்கைச் சேர்ந்த மார்க்கண்டு - கிரிபரன்(வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு காணாமற்போயுள்ளார் என்று சிறுவனின் உறவினர் ஒருவர் முறைப்பாட்டினைச் செய்துள்ளார்.

கடந்த மாதம் 18ஆம் திகதி இச்சிறுவன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டான் எனவும் அன்றை தினமே மாலை 6 மணி முதல் அவனைக் காணவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலக காணாமற் போனோர் விசாரணை அதிகாரி ரி.மொறின் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். (ஐ-13)

## சில பகுதிகளில் இன்று மின்தடை

யாழ்ப்பாணம்,ஜூலை17

அவசர பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5.30 மணிவரை சில இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

வலிகாமம் கிழக்கு, நல்லூர், கல்வியங்காடு, பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி, தென்மராட்சிப் பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, உரும்பிராய், கோண்டாவில், காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய பிரதேசங்களில் இன்று மின் தடைப்பட்டிருக்கும் என்றும் -

வேலைகள் நேரகாலத்துடன் முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பாகவே மின்சாரம் வழங்கப்படும் என்றும் இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது. (ஐ-202)

## மின்மாற்றி தீப்பற்றியது

பண்டத்தரிப்பு சந்தைக்குச் சமீபமாக பிரதான வீதிக்கு அருகில் அமைந்திருந்த இலங்கை மின்சார சபையின் மின்மாற்றி ஒன்று நேற்று முற்பகல் 9 .30 மணியளவில் தீப்பற்றி எரிந்தது. அப்போது எழுந்த வெடிச் சத்தங்களால் சுற்றாடலில் வசிக்கும் மக்களும், வீதியில் போக்குவரத்துச் செய்த பலரும் பெரும் பதற்றமடைந்தனர்.

இயந்திரக் கோளாறே இதற்குக் காரணம் என்று மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் இப்பகுதியில் மின் தடையும் ஏற்பட்டது. (ஐ-135)







உலகத் தமிழர் வானொலியும் பிரான்ஸ் தென்றல் அஷோஸியேசனும் இணைந்து பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக நடத்தும் 'மாயாவி - 2005' மாஜாயாலக் காட்சி நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. தென்னிந்தியாவின் பிரபல மாஜாயாலக் கலைஞர் வீர சேகர் மாஜாயாலக் காட்சி நிகழ்த்துவதையும் தென்னிந்தியாவின் பல்குரல்(மிமிகிரி) கலைஞர் குணா மற்றும் நடன விருந்தளிக்கும் குழுவினரையும் படங்களில் காணலாம். இந்தக் காட்சி இன்று மாலையும் நடைபெறவிருக்கின்றது. *(படங்கள் : தமிழினியன்)*

# “....இனியும் இழுபட ஏலாது உடனடியாக முடிவுகாண வேணும்...”

விடுதலைப் போராளிகளின் கிழக்குக்கான பாதுகாப்பான பயண ஏற்பாடுகள் தொடர்பாக அரசு உரிய பதிலை - சுமுகமான ஏற்பாட்டை இன்னும் முன்வைக்கவில்லை. இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் வழங்கிய பதினான்கு நாள் அவகாசம் முடிந்து விட்டது மீண்டும் இத்தகைய சூழ்நிலையில் போர் நிறுத்தம் முறியுமா? போர் மூளுமா? என்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

இது குறித்து குடாநாட்டு மக்களின் பல்வேறு தரப்பினரிடமும் பெறப்பட்ட எண்ணங்களை இங்கு தருகிறோம்.

### சிங்கள அரசின் கீழ் தீர்வு சாத்தியமில்லை

**சி.தவரட்ணம்**

(கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தலைவர்)



ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் கடற்றொழில் சமூகத்தைச் சார்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பாதிப்பிலிருந்து மீட்டு எடுப்பதற்காக பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டது. அதுகூடபல இழுபறிப்பாடுகளுக்கு மத்தியில் தான்இருகிறது. இன்னுமொரு யுத்தம் ஏற்பட்டால் தமிழ் மக்கள், அதிலும் குறிப்பாக கரையோரப்பகுதி மக்கள் மிகவும் மோசமான பாதிப்பை எதிர்கொள்வார்கள்.

ஆனால், அதற்காக எங்களுடைய ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரச்சினைகள் இனியும் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

அரசு இன்றைய நிலைமைகளை உணர்ந்து கொண்டு உளப்பூர்வமான சமாதானத்துக்காகப் பாடுபடுவதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் தமிழர் தரப்பு இனியும் விட்டுக் கொடுக்கமுடியாது. நாங்கள் இவ்வளவு காலமும் விட்டுக்கொடுத்ததால்தான் திருகோணமலையில் இன்று இவ்வளவு அத்துமீறல்களும் அடாவடித்தனங்களும் நடந்துகொண்டிருக்கின்றன.

சிங்கள அரசுகளுக்குக் கீழ் தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்பது ஒரு போதும் நடக்காத காரியம். எனவே, இனியும் அவர்கள் எமக்குச் சமாதானம் தருவார்கள் என்று பார்த்துக்கொண்டிருக்காமல் தமிழர்களாகிய நாங்கள் எல்லோரும் சேர்ந்து எங்களது உரிமைகளை பெற்றுக்கொள்வதுதான் எமது இனத்தின் விடுதலைக்கான ஒரே வழியாக இருக்கும் என்றே நான் கருதுகின்றேன்.

### பொறுமை காப்பது எப்படி?

**கனகலிங்கம்**

(பொது அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர்)



தமிழர்களுடைய தாயகப் பகுதியில் ஸ்ரீலங்கா அரசபடையினரின் அத்துமீறல்களால் பாரிய நெருக்கடி ஒன்று ஏற்பட்டு வருகின்றது.

இன்றைக்கு ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் படையினருடைய அத்துமீறல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலையில் இல்லை.

தமிழ் மக்கள் மீது மீண்டும் போர் ஒன்று திணிக்கப்படுவதாகவே நாங்கள் நினைக்கின்றோம்.

அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சம்பவங்கள் மூலம் இது எமக்குத் தெளிவாகியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்த அரச படைகளின் அராஜகம் பின்னர் அம்பாறைக்கும் அதன் பின்னர் திருகோணமலைக்கும் விரிவடைந்திருக்கிறது.

1948 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலையில் சிங்கள இனத்தைச் சார்ந்தவர்கள் ஒருவர் கூட இருக்கவில்லை.

இது வரலாற்றில் நாங்கள் காணும் உண்மை. ஆனால், இன்றைக்கு திருகோணமலை மாவட்டத்தில் சேருவல என்று சொல்லி சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்பட்டு இன்று பாரிய அளவில் குடியேற்றங்களை உருவாக்கியிருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெறுகின்ற யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் யாழ். குடாநாட்டிற்குள் பரவாது என்று சொல்வதற்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது.

தமிழ் மக்கள் போரை விரும்பவில்லை. திருகோணமலையில் செல்வநாயகபுரத்தில் விடுதலைப் புலிகளின் அலுவலகத்திற்குள் புகுந்து தாக்குதல் நடத்திப் போராளிகளைக் கொன்றுள்ளார்கள்.

இதனூடாகத் தமிழ் மக்கள் மீது போர் திணிக்கப்பட்டுள்ளதாகவே நினைக்கின்றேன்.

கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக புலிகளைச் சீண்டியும் அவர்கள் பொறுமை காத்திருக்கிறார்கள்.

## முறியும் நிலையில் போர் நிறுத்தம் மக்கள் நோக்கில்.....

தமிழ் மக்களுடைய அபிலாஷைகளுக்கு முகங்கொடுத்து ஓர் அமைதியான வழியில் தீர்வுகாண்பதற்கு விரும்பியுள்ளார்கள்.

ஆனால், அதனை இலங்கை அரசு உதாசீனப்படுத்தி வருகிறது.

அரசு யுத்த நிறுத்தத்தை மதித்து நடக்காவிட்டால் விடுதலைப் புலிகள் யுத்தத்திற்குச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை.

### எங்களுக்கென்றொரு நாடு கட்டாயம் தேவை

**திருமதி ஜோசப்**

(குடும்பப் பெண் - பண்டத்தரிப்பு)

இங்குள்ள பெரும்பாலான மக்கள் சண்டைவரும் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கினம். ஏனென்றால் இரண்டு பகுதியினரும் தங்கட தங்கட பலத்தைப் பலப்படுத்திக் கொண்டே போகினம்.

ஆட்பலத்தை, படைப்பலத்தை அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர். அத்துடன், அவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுக்கொண்டு வருகின்றன. அத்துடன், துணைப் படையினருக்கான ஆட்சேர்ப்பும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

மக்கள் மத்தியில் ஒரு நிம்மதியில்லாத நிலையே காணப்படுகின்றது. சனம் குழம்பிக்கொண்டே இருக்கிறது. எப்பொழுது என்ன நடக்குமோ என்ற ஏக்கத்தில் அவர்கள் உள்ளார்கள்.

அத்தோடு, வெளிநாடுகளில் இருந்து வந்த சனம், வருகிற சனங்களிடம் பயத்தைப் பார்க்கமுடிகிறது. சண்டைவரத்தான் வேணுமெண்டாலும் நாங்கள் எங்கே போய் ஒதுங்கிறது என்ற நிலைதான் இப்போது காணப்படுகின்றது.

அங்கேயும் இங்கேயும் ஒருவரை ஒருவர் சுரண்டிச் சுரண்டிக் கொண்டு இருக்கிறதை விட ஒரேடியாக இந்த நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

எங்களுக்கென்று ஒரு நாடு கிடைக்க, நாங்கள் மற்றவையால் சுரண்டப்படாமல் இருக்க சண்டைதான் ஒரே ஒரு தீர்வாக அமையும்; அமைய வேண்டும்.

எத்தனை நாள்களுக்கு நாங்களும் குட்டு வாங்கிக் கொண்டு இருக்கிறது. இனிமேலாவது நிமிர்ந்து நிற்கவேண்டாமா?

இந்த நிலையில் வெளிநாடுகள் சண்டை ஏற்பட முட்டுக்கட்டையாக இருக்குமா? அல்லது அவையும் சந்தர்ப்பம், நிலைமை பார்த்து விலகிவிடுமா என்பதும் சிந்திக்க வேண்டிய விடயம்.

சமாதானமே நோக்கம் என்று சொல்லிக் கொண்டுவந்த வெளிநாடுகள் என்ன செய்யப்போகினம் எண்டு கொஞ்சம் இருந்து பார்ப்பம்.




### மீண்டும் ஒரு போரை எங்கள் நாடு தாங்காது

**திருமதி நவனீதம் ஜெகதீசன்**

(தலைவி, சமூக அபிவிருத்தி மன்றம்)



இப்போது இருக்கும் இந்தச் சூழ்நிலையில் போர் என்ற பேச்சையே எடுக்கக்கூடாது. கடந்த காலத்தில் ஏற்பட்ட போரினால் நாங்கள் இழந்தவை எல்லாம் போதும். இனிமேல் இழப்பதற்கு எதுவுமே இல்லை. கடந்த காலமாகக் காணப்பட்ட சமாதானச் சூழலில் நாம் இழந்தவற்றைப் பெற வும் இல்லை. எதுவுமே இல்லாத நிலையில் நாம் நிம்மதியை மட் டுமே விரும்புகின் றோம். இனியொரு போர் ஏற்பட்டால் அது கூட இல்லாமற்போய் நாம் பைத்தியமாக அலையவேண்டிய நிலைதான் ஏற்படும்.

தற்போது ஏறபட் டுள்ள பொதுக்கட்டமைப்பு மூலம் வெளி நாடுகளிடமிருந்து எமக்குக் கிடைக்கவி ருக்கும் உதவிகளை உதறித்தள்ளிவிட்டு போருக்கு வெளிக்கிட்டால் என்ன நிலை ஏற்படும் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

எமது பிரதேசமே அபிவிருத்தியடையாது தொடர்ந்து பின் தள்ளப்பட்டுக்கொண்டு போகிறது. இதனை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கவனத்திலெடுத்து செயற்படவேண்டும்.

இவற்றையெல்லாம் மீறி இனியும் ஒரு போர் மூளுமானால் கல்வி வளர்ச்சி, அபிவிருத்தி என்பன பாதிக்கப்படும். அதுமட்டுமல்லாது இளைஞர், சிறுவர் என அனைத்து மட்டத்தினரும் பாதிக்கப்படுவார்கள். போரை எதிர்கொள்ளக்கூடிய நிலைப்பாட்டில் தற்போது எமது மக்கள் இல்லை.

**அபிமன்யு, தீபா, கங்கா, மதியழகி**

### தமிழீழமே எமது அவா யுத்தமே அதற்கு வழி

**சு.சங்கீதா**

(மாணவி -நல்லூர்)

யுத்தம் ஒன்றின் மூலமே எமது, இனத்தின், தேசத்தின் விடுதலையைப் பெறமுடியும்.

எமது பூர்வீக இடங்களில் இராணுவத்தினர் குடிகொண்டிருக்கிறார்கள். இதனால், எமது எதிர்காலச் சந்ததிக்கு எமது பூர்வீகம் பற்றித் தெரியாமலே போய்விடும் போன்று உள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இற்றைவரை, எந்தநேரம் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் தான் வாழ்ந்து வருகிறோம். தற்போது வரலாற்றுத் திரிபுகளை ஏற்படுத்தி, எமது மக்களது பூர்வீகத்தை தொலைக்கும் மறைக்கும் முயற்சியை அரசு மேற்கொள்கிறது.

எமதுமண், எங்கள்நிலம் என்ற உரிமையை நாம் நியாயப்படுத்தவேண்டும். அதற்கு எமது நிலத்தை நாம் மீட்கவேண்டும்.

அதற்கு இறுதி வழியுத்தம் ஒன்றுதான்.

அல்லற்பட்டு அடங்கி ஒடுங்கி, எமது தேசத்தில் நாம் இன்னும் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழமுடியாது. சுதந்திரமாகத் தனித் தமிழீழத்தில் தனித்துவமாக வாழவே நாம் விரும்புகிறோம்.

### எங்கட மண்ணிலயிருந்து ஆமியைத் துரத்தவேணும்...

**திருமதி செ.மேரிஅஞ்சலா**

(தலைவி, மகேந்திரபுரம் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கம்)

எமது கிராமம் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக கடந்த 95ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை உள்ளது. இதனால், எமது கிராம மக்கள் இருப்பதற்கு இடமின்றி மாதமொரு வீட்டிலும் மாதம் ஒரு குடிசை போட்டும் வாழ்க்கை நடத்துகின்றனர்.

தற்போது வீட்டின் சொந்தக்காரரும் நாம் குடிசை போட்டுள்ள காணிக்குரியவர்களும் எங்களை விரைவில் வெளியேறுமாறு எமக்கு உத்தரவிட்டுள்ளனர். இந்நிலையில் எமது மக்கள் எங்கே செல்வது; எங்கே வாழ்வது என்று அங்கலாய்த்து நிற்கின்றார்கள்.

இதற்கெல்லாம் காரணம் என்ன எமது கிராமத்தை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதே. இந்நிலை தொடருமானால் நாம் என்ன செய்வது.

இதற்கு ஒரேதீர்வு எமது பிரதேசங்களிலிருந்து இராணுவம் வெளியேறுவதே.

இராணுவத்தை வெளியேறுமாறு நாம் வார்த்தைகளால் கூறினோம்; எழுத்து மூலம் தெரிவித்தோம்; மறியல் போராட்டம் நடத்தினோம். எதற்கும் பலனில்லை.

மறியல் போராட்டம் நடத்தியபோது நாங்கள் பொலீஸிடம் அடிவாங்கியது தான் மிச்சம்.

இந்த நிலையை மாற்றவேண்டும். ஆயுதப் போராட்டம் மட்டுமே தீர்வாக இருக்குமானால் அதையும் எமது மக்கள் வரவேற்பார்கள்.

நாம் போராட்டத்தை விரும்புபவர்கள் அல்லர். ஏனெனில், உயிர்கள், உடைமைகள், வசிப்பிடங்கள் அனைத்தையும் இந்த போராட்டத்தால் இழந்து நிற்கின்றோம்.

ஆனால், நாம் இழந்த வாழ்வை மீட்கவேண்டும். எம் நிலங்களை மீட்கவேண்டும். இராணுவம் தானாக வெளியேறினால் எமக்கேன் சண்டை? அவர்கள் தொடர்ந்தும் எம் இடத்தில் இருக்க விரும்பினால் - நாமாகவே அவர்களை வெளியேற்ற வேண்டி ஏற்பட்டால் - சண்டையைத் தவிர வேறு வழியே இல்லை.

### இழப்பதற்கு இனி எதுவுமேயில்லை

**விஜயா ஆனந்தி**

கோப்பாய்

இதுவரை நாம் யுத்தத்தின் மூலம் இழந்ததுபோதும், இனியும் இழப்பதற்கு எம்மிடம் ஒன்றுமில்லை.

போரினால், பாதிக்கப்பட்டு இப்போது தான் ஓரளவு நல்லநிலைக்கு வந்துள்ளோம். இழப்புகளை மறக்கத் தொடங்கியுள்ளோம். வாழ்வின் மீது எமக்கு ஓரளவு நம்பிக்கை வந்துள்ளது.

இனி ஒரு போர் தொடங்குமாக இருந்தால், எமது இருப்புகளின் சுவடுகள் இல்லாமல் அழிந்துவிடும். ஓடிஓடி உழைத்துச் சேர்த்த பொருள்களைக் கொண்டு ஓரளவு வாழ்வை வளமாக்கியுள்ளோம்.

சமாதானம்தான் எமது மக்களிற்குத் தேவை. இதனை அமைதியான சாத்வீகமான முறையில் பெற்றுக்கொள்வதுதான் எனது விருப்பம்.

அபிவிருத்தியடைந்துவரும் எமது வாழ்க்கைத் தரமும், பிரதேசமும் இன்னொரு போரினால், சோபை இழக்கக்கூடாது; இனியும் இழப்பதற்கு எம்மிடம் எதுவுமில்லை.

போர்தந்த வடுக்களாய் எம்மவர் மத்தியில், எத்தனை விதவைகள், அங்கவீனர்கள் வறுமையான குடும்பங்களை உருவாக்கியுள்ளன.

### விரைவாக முடிவுகாண...

**பி.பிரசன்னா**

(தனியார் நிறுவனப் பணிப் பாளர்)



சண்டை வரப்போகுதெண்டு நினைக்கவே பயமாத்தான் கிடக்கு. ஆனால், திருப்பத்திரும்ப ஒரு தரப்பு அநியாயம் செய்து கொண்டிருக்க மற்றத்தரப்பு தொடர்ந்தும் பொறுமையாத்தான் இருக்க வேணும் எண்டு நினைகேலாது.

இலங்கை அரசோடே ஒண்டுமே செய்யேலாது.

அவர்கள் இந்தப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்திறத்துக்கே இவ்வளவு இழுபறியும் குழப்பமும் நடக்குது.

அப்படியிருக்க எங்கட பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கிற சந்தர்ப்பத்தில எவ்வளவு குழப்பம் நடக்கும் எண்டு நினைச்சே பார்க்க முடியாது.

எப்படியிருந்தாலும் என்னதான் செய்தாலும் எங்களுக்கெண்டு சரியான உரிமை கிடைக்கிற தெண்டா சண்டை மூலம் தான் கிடைக்கும். அது பிறகு வாறதைவிட இப்பவே வந்தா கெதியா ஒரு முடிவைக் கண்டிடலாம்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நஷனல் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (37720)

எம் ரி-90 (Honda), ரக்ரர், (240) மைனர் கார் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: வை. இராஜேஸ்வரன் (அப்புசாமி) அழகியவான் தோட்டம், கோப்பாய் தெற்கு, கோப்பாய். T.P.: 077 6916943. (37742)

தனியார் பாவனையிலிருந்த 17-xxxx தொடர் இலக்கமுடைய (வொக்சமொடல்) நிசான் Sunny Full A/C உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 077 6168337. (37743)

முதிரை மரம் பலகையால் செய்யப்பட்ட, கடைகளுக்குப் பாவிக்கக் கூடிய இரண்டு அலுமாரிகள் விற்பனைக்குண்டு. நீளம் -12அடி, உயரம்- 4 அடி, நீளம் -12-அடி-உயரம்- 3½ அடி. தொடர்பு: நாதன் இல.203, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (37811)

பாவிக்காத 4 அடுப்பு கொண்ட காஸ்குக்கருடன் மின்சார அடுப்பு, மின்சார Avon இணைக்கப்பட்ட Eminent Electronic Cooker (U.K.) விற்பனைக்குண்டு (பெறுமதி ரூபா 25000). தொடர்பு: 0773164251 (37802)

தொலைபேசி விற்பனைக்கு உண்டு (Land Phone). தொடர்பு: இல.941, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (சி.42096)

கிறவுண் England ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். க.யோகலிங்கம், மல்லாகம் ஸ்ரேசன் அருகில், ஏழாலை. (37830)

## காணி விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு வீதியில் அமைதியான சூழலில் 3½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை) தொடர்பு: 077-9116282 (37821)

ஆடியபாதம் வீதியில் (செங்குந்தா சந்தைக்கு அருகில்) 9¾ பரப்பு குடியிருப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 222 6808 (37803)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (37754)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1 Kg 160/- சுத்தம் செய்தது 240/- மொத்தமாகக் கொள்வனவு செய்பவருக்கு விலைக்கழிவு உண்டு. மற்றும் புறொயிலர் குஞ்சு விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K Farm, பெரிய மதவடி, மானிப்பாய் றோட், உடுவில். (37663)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (37756)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் சுத்தம் செய்து மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். மாஸ் வகைகளும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: S. சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (37781)

## புறோயிலர் கோழி விற்பனைக்கு

தரமானதும் நிறை கூடியதுமான கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விசேட குறிப்பு 50 இற்குமேல் தேவைப்படுவோருக்கு வாகன வசதி இலவசம் (கிலோ160) தியேட்டர் ஒழுங்கை, அச்சுவேலி. (37797)

## கடை விற்பனைக்கு

வீதிச் சான்றிதழ் பெற்ற கடை. தொடர்பு: இல. 325, தியாகு கலைக்கூடம்,பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P.: 222 6469. (37535)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

சகல ஆவணங்களுடன் Honda CG 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சியவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (37798)

## கார் விற்பனைக்குண்டு

13 Sri xxx தொடரிலக்கமுள்ள மிற்சுபிசி லான்சர் கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 61, மருதடிவீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-2225638. (37809)

நல்ல நிலையிலுள்ள 17xxxx தொடர் இலக்கமுடைய வெள்ளை நிற Nissan Sunny A/C கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P: 0777 614449. (37785)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராச் சந்திக்கு அண்மித்துள்ள வெள்ளாந்தெருவில் 3¾ பரப்புக் காணியுடன் கூடிய 3 மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.தம்பிப்பிள்ளை, 188 B, மானிப்பாய் வீதி (வைத்தீஸ்வராச் சந்தி), யாழ்ப்பாணம். (37744)

சேச்லேன், மானிப்பாயில் 3 படுக்கை அறைகள், கிணறு, மின்சார வசதியுடன் (2 பரப்பில்) வீடு (உறுதி இல. 10855) விற்பனைக்குண்டு. தரகர் இன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். S.நாகரட்ணம், C/O நாயகம், சேச்லேன், மானிப்பாய். T.P.: 021-222 3278. (37654)

## வாடகைக்கு உண்டு

கோயில் வீதியில் ஏழு படுக்கை அறைகள், இரண்டு சமையலறைகள், 3 குளியல் அறைகள், வாகனத் தரிப்பிட வசதி (பல வாகனங்கள்), நன்னீர் கொண்டுள்ள சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பு: 0212222880, 0713055845. (37344)

இணுவில் வைத்தியசாலைக்கு முன்பாகச் சகல வசதிகளும் கொண்ட 700 சதுர அடி மாடிக் கட்டடம் வாடகைக்குண்டு. காரியாலய உபயோகத்திற்குகந்தது. தொடர்பு: T.P.: 222 6029.(37784)

## வீடு வாடகைக்குத் தேவை

வாகனம் நிறுத்தக்கூடிய வசதியுள்ள அறைகள் அனெக்ஸ் தேவை. தொடர்பு: 021 2225392 0777791623 (37840)

நல்லூர், ஆனைப்பந்தி, கந்தர்மடம், பிறவுண் வீதிப் பகுதியில் 3 அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 0776632919 (37832)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Original Prima Broiler குஞ்சுகள் விலை குறைக்கப்பட்டுள்ளது (விலை ரூபா 40). 18.07.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-42072)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட (Original prima Broiler) குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 18.07.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை. சந்நிதி பாம் - தொண்டைமானாறு. ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி. முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (37755)

## திருமண சேவை

இந்து கிறிஸ்தவ வெளிநாடு, உள்நாடு டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், ஆசிரியர், விரிவுரையாளர்கள், வர்த்தகர், விவசாயி, வங்கிப் பணி, சுயதொழில் புரிபவர்கள், விவாகரத்துப் பெற்றவர்கள், தாரம் இழந்தவர்கள், விதவைகள் போன்றோருக்கான மணமக்கள் தேவைக்கு தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம் (SIMB) 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.: 021 222 7844. (37826)

வேலமுதனின் திருமண ஒப்பேற்று ஒழுங்கு முறை 'இலகு வழி சுய தெரிவை' அடிப்படையாகக் கொண்டதால் ஆண்டுதோறும் பதிவுகளை மீள்பரிசோதனை செய்வதும், புதுப்பித்தலும் மிக முக்கியம்! ஒரு முழு ஆண்டு முடித்தலும், வாடிக்கையாளர் பதிவுகளைப் புதுப்பிக்கக் கேட்கப்படுகின்றனர். திருமணம் நிச்சயமாகும் வேளையே காலம் தாழ்த்தாது வேலமுதனுக்கு அறியத்தந்து, பதிலை ரத்து செய்விக்கவும் வேண்டப்படுகின்றனர்! வேலமுதனின் தொலைபேசி இலக்கங்கள் 2360488, 4514396. (சி/42060)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், U.K குடியுரிமை, 1979 புனர்பூசம், மிதுனராசி, 8இல் செவ்வாய், உயரம் 5 ' 5 ", கிரகபாவம் 32, (Double Degree Maths and Accountant) மணமகளுக்குக் கணக்காளர், பல் வைத்தியர் மணமகன் தேவை (லண்டன் விரும்பத்தக்கது). தொடர்பு: சிவாலயா T.P.: 021 222 7844. (37824)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம்,1961 (தாரம் இழந்தவர்) கார்த்திகை இடபராசி, 12இல் செவ்வாய், கிரகபாவம் 52, உயரம் 5 ' 6 " Charted Accountant Financial controller பதவி வகிக்கும் மணமகனுக்குப் படித்த, அழகான மணமகள் தேவை. தொடர்பு: சிவாலயா, T.P. 021 222 7844 (37825)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 29 வயது, திருவாதிரை நட்சத்திரம், 16½ பாவம், 5'4'' உயரமான மணமகனுக்கும் சதய நட்சத்திரம், 4ஆம் பாதம், 5'2'' உயரம், தனியார் உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கும் 5'3'' உயரம், சதய நட்சத்திரம், 2ஆம் பாதம், உப அஞ்சலதிபர் மணமகனுக்கும் மணமக்கள் தேவை. தொடர்பு: தொலைபேசி: 071 4841069, 077 6059585 (36516)

## தவறிவிட்டது

அரியரத்தினம் கோபாலகிருஷ்ணன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் வாகன அனுமதிப்பத்திரம்,வாகனக் காப்புறுதிப்பத்திரம், வேறு முக்கிய ஆவணங்களும் 27.06.2005 திங்கட்கிழமை யாழ்.தொழில்நுட்பக்கல்லூரிக்கும் யாழ்மக்கள் வங்கி (ஸ்ரான்லி வீதி) இற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்). 518, K.K.S.வீதி, யாழ்ப்பாணம். மேலதிக விவரங்களுக்கு 021-222-5281. (37831).

அளவெட்டி மத்தியைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரி விசுவநாதபிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 436623445V) யும் ஒரு தொகைப்பணமும் அடங்கிய பேர்ஸ் 14.07.2005 வியாழன் அன்று ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அளவெட்டி மத்தி, அளவெட்டியில் அல்லது சானுகா நகைமாடத்தில் ஒப்படைத்துதவவும். (37841)

காந்திஜி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் தியாகராசா விஜயகாந் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.811583073V) மற்றும் சில ஆவணங்களும் யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியு டன் தொடர்பு கொள்ளவும். T.P.: 077 9068230 (37828).

கி.அமிர்தலிங்கம் என்பவருடைய தங்க கைச்சங்கிலி ஒன்று 15.07.2005 (வெள்ளிக்கிழமை) புத்தூருக்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். துர்க்காபுரம், தெல்லிப்பழை. T.P. .077 9068213. (37829)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கஸ்தூரியார் வீதியில் பணத்துடன் கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தயவு செய்து 0776923705 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். அல்லது நவீன சந்தையின் உட்புறத்திலுள்ள அம்பிகாபதி பான்ஸி ரேடேர்ஸ்"க்கு வந்து பெற்றுக்கொள்ளவும். (37820).

**S.L.A.S.** வழிகாட்டல் நூல்

கடந்தகால வினாப்பத்திரம் விடைகளுடன்
By:T. திருமுருகன்
* பொது விவேகம்
* பொது அறிவு
* கட்டுரையும் சுருக்கமும்
விண்ணப்பப்படிவங்கள் இங்கு கிடைக்கும்
திகழ் பதிப்பகம்
K.K.S. வீதி, இணுவில்.
(37822) (24-21-14-15)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.
(சி-42048) **யாழ் போன் சொப்**
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக) யாழ்ப்பாணம்.

## A/L பௌதிகவியல்/ இணைந்த கணிதம்

பல ஆண்டுகளாக மேற்படி பாடங்களைக் கற்பித்து வரும் ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். முழுப்பாடத் திட்டமும் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். ஏராளமான M.C.Q. விவரமான விடைகளுடன்

T.P.No: `077-6648751
**R.பாலசுப்பிரமணியம்**
B.Sc.(Cey.) Dip.in Ed.
17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(37813)(21

## Computer Typing

தட்டெழுத்து, சுருக்கெழுத்து, Ms office, Pagemaker, Coreldraw, Photoshop, Graphic Designing தனிப்பட்ட கவனிப்பு, கற்கையை எக்காலத்திலும் ஆரம்பிக்கலாம்.

STCA (Estd in 1977),
149 (37), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
[வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அண்மையில்].

## S.L.A.S.

### போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: இன்று (17-07-2005) ஞாயிறு (2 மணி)
பயிற்சி நெறியாளர்கள்
பொது உளச்சார்பு - வழமையான ஆசிரியர் (குமார்)
பொது அறிவு - க.குணராஜா
தமிழ் - அ.சண்முகதாஸ்

**புதிய உயர் கல்லூரி,**
(37835) (24- ஆரியகுளம் சந்தி, யாழ்.

ஆடி மாத [illegible]ரடி மலிவு விற்பனை




OCEANICK IMPEX
192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீடியோ டெக், ஓடியோ டப்பிங் டெக், DVD பிளேயர், JVC கெசற் சீடி பிளேயர் செற், ரெக்னிஸ் டெக் செற், 29''Sony TV, நொக்கியா கான்போன் என்பன விற்பனைக்குண்டு.
**ஜெகன் வீடியோ ஓடியோ அன் றெயிலறிங், சட்டநாதர் வீதி,**
திருநெல்வேலி. T.P.: 0776547245

## வேலைக்கு ஆள்கள் தேவை

வெல்டிங், இரும்பு அலுமாரி பொருத்துவதற்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
தொடர்பு:
**இ.கேதீஸ்,**
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
(37815) T.P.: 077 9037203 (21-14-15)

## விற்பனைக்கு

சிறுகுறிஞ்சா இலைப்பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு நோயாளர்களுக்கும் கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சிறந்த மூலிகையாகும். நீரிழிவு நோயாளர்களின் குருதி, குளுக்கோஸ், கொலஸ்ரோல், ரைகிளிசைரைட் ஆகியவற்றைக் குறைத்து நோயைக் குணமாக்கும் சிறந்த உப உணவாகும். (39272)
தொடர்பு: BIO TEC ORIENT (PVT) LTD.
இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P.021 4590907 (விவசாயப் பண்ணைக்கு அருகில்)

## தவறிவிட்டது

எனது பாவனையிலிருந்த NOKIA 1100 (Serial No. 352524008942) Sim உடன் (0776544437) யாழ்நகர் திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட் டது. அவசியமான தகவல் Phone இல் உள்ளபடியால் தயவுசெய்து **விஜேய் றெக்கோடிங் சென்ரர், நல்லூர்** எனும் முகவரியில் அல்லது **நாதன்ஸ் ஆ பலஸ்** இல் ஒப்படைத்துதவவும். கவர்ச்சியான சன்மா னம் தரப்படும். (37823)(21

## மாடிக் கட்டடம் வாடகைக்கு

5 அறைகள், ஒரு மண்டபம், ஒரு குளியலறை கொண்ட மாடிக் கட்டடத் தொகுதி ஒன்று வாடகைக்குண்டு. நிறுவனங்கள், விருந்தாளிகள் தங்குமிட விடுதிகள், களஞ்சியங்கள், குடும்பங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளிற்கு:
**140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
021 222 7085
021 222 8039
077 716 2428
(37847) (21-14-15)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த, U.S.A இல் படித்துக் Ph.D 2nd Year படித்துக் கொண்டிருக்கும் 34 வயதுடைய 8இல் செவ்வாயுள்ள Engineer மணமகனுக்கு ஜாதகம் பொருந்தும் உடைய 27 வயதுக்குட்பட்ட [illegible], Engineer, Professional Qualification உடைய மிக அழகான பெண்ணைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (37842)
தொடர்பு:
விளம்பர இல. 2645 மே/ பா உதயன், யாழ்ப்பாணம்.

## வவுனியா வளாக மாணவருக்கு அழைப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளான கல்வி முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா பகுதி II ஆகியவற்றை வவுனியா கற்கை மையத்தில் கற்கும் அனைத்து மாணவர்களையும் எதிர்வரும் 23ஆம் திகதி முற்பகல்10 மணிக்கு வவுனியா வளாக வியாபார கற்கைகள் பீடத்தில் ஒன்றுகூடுமாறு வியாபாரக் கற்கைகள் பீடப்பீடாதிபதி கேட்டுள்ளார். (எ-202)

## கலந்துரையாடல்

உலக உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சுனாமி உலர்உணவுத் திட்டத்தினைத் துரிதப்படுத்தும் நோக்குடன் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி பி.ப.3 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர், யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், சுனாமி நிவாரண முத்திரை விநியோகிக்கும் கிராம அலுவலர்கள், புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளர்கள், உதவித் திட்டப்பணிப்பாளர்கள், உலக உணவுத் திட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் இக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (எ-117)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## இதுதான் நியாயமான வழி

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக ஆறு மாதங்கள் மிகவும் இக்கட்டான சூழலில் - நீண்ட கலந்துரையாடல்களுக்கு மத்தியில் - தயாரிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்புக்குச் சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது.

உயர் நீதிமன்றம் வழங்கிய இந்த இடைக்காலத் தீர்ப்பால் யாருக்கு லாபம்? யாருக்கு வெற்றி? தமிழர்களுக்கா? அல்லது வழக்குத் தாக்கல் செய்த ஜே.வி.பியினருக்கா? அல்லது அரசுக்கா? அல்லது ஜனாதிபதிக்கா?

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் பொதுக்கட்டமைப்பின் சில ஏற்பாடுகளுக்குத்தான் உயர்நீதிமன்றம் தடை விதித்திருக்கிறது. ஆனால், அந்த ஏற்பாடுகள்தாம் பொதுக்கட்டமைப்பின் சாரமே. அடிநாதமும் அவைதான்.

தமிழரைப் பொறுத்தவரை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நீதிமன்றத்திடமிருந்த அந்தத் தேசத்தின் அரசமைப்பு ஏற்பாடுகளைக் காபந்து பண்ணும் ஒரு தீர்ப்பைத்தான் எதிர்பார்க்கமுடியும். அதற்கு மேல் நியாயத்தை எதிர்பார்ப்பது வெறும் பகல்கனவுதான்.

இந்தத் தீர்ப்பினால் பொதுக்கட்டமைப்பு சாகடிக்கப்படும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ஆழிப்பேரலைப் பாதிப்புக்குள்ளாகி, அதிலிருந்து மீளுவதற்கு உதவிகளை - நிவாரணங்களை - எதிர்பார்த்திருந்த தமிழர்களுக்குப் பெருத்த ஏமாற்றம்தான். ஆனால், இலங்கை நீதிமன்றங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்பதால் இந்த உத்தரவு தமிழர்களைப் பொறுத்தவரை தோல்வியல்ல.

இந்த உத்தரவு குறித்து ஜே.வி.பி. துள்ளிக்குதிக்கிறது. பொதுக்கட்டமைப்பின் செயற்பாட்டுக்குத் தடக்குப் போட்டுவிட்டோம் என்று ஜே.வி.பி. பெருத்த ஆரவாரம் செய்தாலும் அதற்கும்கூட இந்த உத்தரவு பெரும் தோல்விதான்.

பயங்கரவாத இயக்கமான புலிகள் அமைப்போடு இலங்கை அரசு ஓர் உடன்பாடு செய்வது இலங்கையின் இறைமையை மீறிய நடவடிக்கை என்று குரல் எழுப்பிக்கொண்டுதான் உயர்நீதிமன்றத்திடம் ஓடியது ஜே.வி.பி.

ஆனால், உயர் நீதிமன்றம் என்ன செய்திருக்கிறது?

புலிகளுடன் செய்யப்பட்ட இந்தப் பொதுக்கட்டமைப்பு உடன்பாடு சட்டவிரோதமானது அல்ல என்று உறுதிப்படுத்தியிருக்கிறது. அதற்கும் சற்று மேலே போய் ஏற்கனவே, அரசு - புலிகள் செய்துகொண்டுள்ள யுத்தநிறுத்த உடன்பாட்டையும் ஏற்றுக்கொள்வது தவிர்க்கமுடியாதது என்ற பாணியில் கருத்து வெளியிட்டு புலிகளுடன் செய்துகொள்ளப்படுகின்ற ஒப்பந்தங்களுக்கு அங்கீகாரமும், அந்தஸ்தும் கொடுத்திருக்கிறது. இந்தவகையில் ஜே.வி.பிக்கும் தகுந்த அடி கொடுத்திருக்கிறது உயர்நீதிமன்றம்.

அது மட்டுமல்ல, தெரிந்தோ தெரியாமலோ சிங்கள அரசின் நீதிமன்றம் தொடக்கம் அதன் சட்டத்துறை வரை இலங்கையில் இறைமையுள்ள இன்னோர் அரச நிர்வாகக் கட்டமைப்பு இயங்குகின்றது என்ற யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இந்த வழக்கும், அதன் தீர்ப்பும் அமைத்துவிட்டன என்பதும் கவனிக்கத்தக்கது.

கிளிநொச்சியில் பொதுக்கட்டமைப்பின் பிராந்திய சபை நிலை கொள்ளக்கூடாது என இடைக்காலத் தடை விதித்ததன் மூலம், 'இலங்கைத் தீவு முழுவதும் இறைமையுள்ள இலங்கை அரசு' என்ற கோட்பாடு இல்லை என்ற யதார்த்தத்தை இலங்கையில் மிக உச்ச - உயர்ந்த - நீதிமன்றமே ஏற்றுக்கொண்டுவிட்டது. கிளிநொச்சியில் பிராந்திய சபை நிலைகொள்ளமுடியாது என்ற ஜே.வி.பியின் வாதத்தை அரசுத் தரப்பில் ஆஜரான சட்டமா அதிபர் உட்பட எந்த எதிர்மனுதாரர்களும் நீதிமன்றத்தில் எதிர்க்கவேயில்லை அதன் மூலம் கிளிநொச்சியை மையமாகக் கொண்டு மற்றொரு சமாந்தர நிர்வாகக் கட்டமைப்பு இருப்பதை அரசின் சட்டக் கையான சட்டமா அதிபர் திணைக்களமே ஏற்றுக்கொண்டுவிட்டது.

சரி, இந்தத் தீர்ப்பினால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தோல்வியா? இல்லை. வெற்றிதான்.

அவர் என்ன நடக்கவேண்டும் என எதிர்பார்த்தாரோ அது கனகச்சிதமாக நடந்தேறியிருக்கிறது. அவரைப் பொறுத்தவரை 'இது எப்பவோ முடிந்த காரியம்' அவர் 'யாமறியோம்' என்ற நிலை. இதனால்,'ஒரு பொல்லாப்பும் இல்லை' என அவர் திருப்திப்படலாம்.

ஆனால், 'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும்' கலையில் வல்லவரான அவருக்கு இந்த விவகாரங்களை, அந்த வகையில் ஒப்பேற்றுவதில் அவ்வளவு கஷ்டம் ஒன்றும் இருந்திருக்காது. அந்தக் கலை அவருக்கு அத்துப்படி. அதற்காகத்தானே அந்தந்த இடங்களில் அவரவர்களை அவர் அமர்த்தி வைத்திருக்கிறார்?

அவரைப் பொறுத்தவரை புலிகளோடு அவர் செய்த ஒப்பந்தம் சட்டவிரோதமானதல்ல என்பதை உயர் நீதிமன்றமே அங்கீகரித்துவிட்டது. 'நான் புலிகளோடு புனரமைப்புப் பணியைப் பகிரத்தான் விரும்பினேன். ஆனால், நீதிமன்றம்தான் விடவில்லை. நான் என்ன செய்ய?' என்று சர்வதேச உலகுக்குக்காட்டியும் விட்டார்.

அதேநேரம் நீதிமன்றின் உத்தரவின் மூலம் நிதிக் கையாள்கை உட்படச் சகல விடயங்களிலும் தாம் விரும்பியபடி புலிகளை ஓரங்கட்டவும் வைத்துவிட்டார்.

'இனி என்ன? இலங்கையின் அதி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறமுடியாது. எனவே, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியை எனது அரசிடம் தாருங்கள். அதன் மூலம் அப்பணியைச் செய்வதே ஒரே வழி' - என்று சர்வதேச உலகிடம் கூறக்கூடிய நிலைமை அவருக்குச் சார்பாக உருவாக்கப்பட்டுவிட்டது.

சர்வதேச சமூகத்தின் முன்னால் சிவப்புச் சட்டைக்காரர்களான ஜே.வி.பியினரையும், பயங்கரவாதிகளாகப் புலிகளையும் காட்டி, தனது அரசியலைக் கொண்டு நடத்தும் ஜனாதிபதி குமாரதுங்கவின் போக்குக்குச் சார்பான சூழ்நிலை இந்த உத்தரவினால் உருவாகியிருக்கிறது. அவ்வளவே.

இந்த 'நாடகங்களின்' பின்னணியைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும். திரை மறைவில் நடக்கும் சதி வலைகளை அறிந்துகொள்ள எத்தனிக்கவேண்டும்.

அவற்றைச் சர்வதேச சமூகம் தெரிந்து - உணர்ந்து - கொள்ளுமாயின், செத்துப்போகும் நிலையில் - சேடம் இழுக்கும் கட்டத்துக்குப் போயிருக்கும் - பொதுக்கட்டமைப்பு விடயத்தை ஒதுக்கிவிட்டு, ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற தமிழர்களுக்கான நிவாரண உதவிகளை நேரடியாகத் ஈழத் தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகள் ஊடாக மக்களுக்குக் கிடைக்கச்செய்ய'முன்வரும்.

அதுதான் இன்றைய நிலையில் நியாயமாகும்.

# 5ஆம் தர புலமைப் பரிசில் கொடுப்பனவு இனிமேல் ரூபா ஐந்நூறு என்று அறிவிப்பு

ஐந்தாம் தர புலமைப் பரிசில் திட்டக் கொடுப்பனவாக மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த 240 ரூபாவை 500 ரூபாவாக உயர்த்தி வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்றைக் கல்வி அமைச்சு மாகாணக் கல்விச் செயலாளர், கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அந்தச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கும் நோக்குடனும் அவர்களுக்கு பாடசாலை ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் நடத்தப்படுவது ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையாகும். இந்தப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

- இவ்வாறு புலமைப் பரிசில்பெறும் மாணவர்களுக்கு 1983ஆம் ஆண்டு தொடக்கம் வருடத்தில் 10 மாதங்களுக்கு ஆயிரம் ரூபாவும் 1989ஆம் ஆண்டில் இருந்து வருடத்தில் 10 மாதங்களுக்கு இரண்டாயிரத்து 400 ரூபாவும் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது சமூக பொருளாதார நிலைமைக்கு இது போதாது என்பதனால் அந்தக் கொடுப்பனவை அதிகரித்து வழங்குமாறு கல்வி அமைச்சுக்கு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இதனைக் கருத்திற்கொண்டு கல்வி அமைச்சர் 2 ஆயிரத்து 400 ரூபா கொடுப்பனவை 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்க அமைச்சரவைக்கு வழங்கிய யோசனை கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 2005ஆம் ஆண்டு 6ஆம் தரத்திற்குச் சேர்க்கப்படும் புலமைப் பரிசில்தாரர்கள் உட்பட தற்போது 13ஆம் தரம் வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் 5ஆம் தரப் புலமைப் பரிசில்தாரர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்ட 240 ரூபா 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் புதிய கொடுப்பனவு வழங்கலை நடைமுறைப்படுத்தவும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-203-204)

# அராலியில் இருந்து கட்டுடை வரையிலான வழுக்கியாறு பகுதி இவ்வாண்டு புனரமைப்பு

வழுக்கியாறு புனரமைப்பின் முதற்கட்டமாக அராலியில் இருந்து கட்டுடை வரையிலான பகுதிகள் இவ்வருடத்தில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

'நியாப்' திட்டம் IIஇன் கீழ் வழுக்கியாறு புனரமைப்புச் செய்வது தொடர்பாக அப்பகுதிக் கமக்காரர் அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை உடுவில் கம நல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின்போது 'நியாப்' செயற்றிட்டப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பால கிருஷ்ணன் வழுக்கியாறு புனரமைப்பது தொடர்பான விளக்கத்தினை எடுத்துக்கூறினார்.

உடுவில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி வ.ரூபிணி, யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் உட்பட யாழ்ப்பாணம் நீர்ப்பாசனத் திணைக்களத்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள், யாழ். மாவட்ட பொருண்மிய நிறுவனப் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய நிறுவனப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர் பங்குபற்றினர்.

'நியாப்' திட்டத்தின்கீழ் வழுக்கியாறு முழுவதையும் புனரமைப்புச் செய்வதற்காக கடந்த மே மாதத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமைவாக இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக 'நியாப்' திட்டப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

பல்வேறு கட்டங்களாக - நான்கு ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாகப் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளன. இதன் முதற்கட்டமாக அராலியிலிருந்து கட்டுடை வரையான பகுதி இவ்வருடம் புனரமைக்கப்படும் என்றும் -

இம்முதற்கட்ட வேலைகள் பற்றியும் எவ்வாறு அவற்றைச் செயற்படுத்துவது என்பது பற்றியும் கமக்காரர் அமைப்புகளுடன் அவ்வப்போது கலந்தாலோசிக்கப்படும் என்றும் - பிரதித் திட்டப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

தெல்லிப்பழை தொடக்கம் அராலி வரையான வழுக்கியாற்றின் பிரதான பகுதி புனரமைப்புப் பணிகள் யாவும் முடிவடைந்த பின்னர் வழுக்கியாற்றுப் பகுதியும் அதனோடு சம்பந்தப்பட்ட குளங்களும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் என்றும் -

கிராய்குளம், கேலங்காமம் குளம் போன்ற சிறுகுளங்கள் அவற்றுடன் இணைந்த சிறுவாய்க்கால்கள் என்பனவற்றின் பராமரிப்புப் பணிகள் 'நியாப்' திட்டம் ஒன்றில் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கிணங்க செயற்படுத்தப்படும் என்றும் - கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. (எ-152)

# ஆனைக்கோட்டை தாரகா விதவைகள் மைய தலைவியின் பெயரும் நோபல் பரிசுக்கு சிபார்சு

யாழ். மாவட்டத்தில் போரினால் கணவனை இழந்து விதவைகளாக்கப் பட்டவர்களின் மறுமலர்ச்சிக்காக உழைத்துவரும் திருமதி சைலா இதய ராஜா 2005ஆம் ஆண்டின் நோபல் பரிசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை - சாவல்கட்டு பகுதியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கிவரும் ''தாரகா விதவைகள் மலர்வு மையத்தின்'' தலைவியாக இருக்கும் இவர், 1983ஆம் ஆண்டிற்குப் பின்னர் போரினால் பாதிக்கப்பட்ட விதவைப் பெண்களின் அபிவிருத்திக்காவும் அவர்களின் குடும்ப நலனிற்காகவும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து அரச, அரச சார்பற்ற மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவி யுடன் நடைமுறைப் படுத்தி வருகின்றார்.



2005 ஆம் ஆண்டு நோபல் பரிசுக்கு இலங்கையிலிருந்து 12 பெண்களின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. அதில் 2 தமிழர்களில் தாரகா விதவைகள் மலர்வு மையத் தலைவியின் பெயரும் நோபல் பரிசுக்கென சர்வதேச தொண்டு நிறுவனத்தினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - மேற்படி நோபல் பரிசுக்கு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பெயர் நோர்வே அரசினால் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-185)

# சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களை நியமிக்குமாறு அரசஅதிபர் கோரிக்கை

கொக்குவில்,ஜூலை17

துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் சிறுவர் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதேச செயலகங்களுக்கு சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களை நியமிக்குக.

- இவ்வாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறை, சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைத் திணைக்களப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதுவிடயமாக அரச அதிபர் சமூக நலத்துறைப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

15 பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்ட யாழ். மாவட்டத்தில் 3 சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மட்டுமே சேவையிலுள்ளனர்.

துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறுவர் தொடர்பான சட்ட நடவடிக்கை சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களினூடாக மட்டுமே முன்னெடுக்கப்படமுடியும் என்பதைக் கருத்திற்கொண்டு பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-76)

## டிறிபேர்க் மைதானத்தைப் புனரமைப்பதற்கு நிதி

தென்மராட்சி,ஜூலை17

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி விளையாட்டு மைதானம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா,செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

புனரமைப்புக்கான நிதியினை நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.(எ-117)

# பதிவுசெய்யாத சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்

கொக்குவில்,ஜூலை17

யாழ். மாவட்டத்திலுள்ள சிறுவர் இல்லங்களைப் பதிவுசெய்யுமாறு யாழ். அரச அதிபர் க.கணேஷ் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியுள்ளார்.

பதிவுசெய்யப்படாத சிறுவர் இல்லப் பொறுப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களின் நலன்களைப் பேணுமுகமாகவும் அவர்களை அரச அலுவலர்கள் ஆற்றுப்படுத்துமுகமாகவும் ஒவ்வோர் இல்லமும் முறைப்படி சமூக சேவைகள், சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

எனவே, பதிவுசெய்யப்படாத சிறுவர் இல்லப் பொறுப்பாளர்கள் சமூக சேவை அலுவலர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும். அத்துடன், இதுவிடயமாக நடவடிக்கை தொடர்பான அறிக்கை ஒன்றை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும் - என்று உள்ளது. (எ-76)

## நாளை

ஆடி 02
திங்கட்கிழமை
18.07.2005
திதி: துவாதசி
நள்ளிரவு 12.11 வரை
நட்சத்திரம் : அனுஷம்
முற்பகல் : 7.59 வரை
சுபநேரம்: 12.00 - 1.30
ராகுகாலம்: 7.30 - 9.00
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நல்ல நம்பிக்கையில் உருவாகும் கருத்துக்கு என்றும் அழிவில்லை.

- பூவேஸ்டர்

# யாழ் மண்ணிலே முதல் முறையாக..!!

இலங்கையின் கணனித்துறை வரலாற்றின் Multimedia கற்கைநெறிகளில் பல சாதனைகள் படைத்த London Infc Tech இன் இணை நிறுவனமான Yaarl Tech Sys தற்பொழுது யாழ் நகரில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ் மண்ணிலே நிலவிவந்த Multimedia கற்கைநெறிகளுக்கான குறையை நிவர்த்தி செய்யும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரியில், இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்ளவிருப்பதும் இதன் சிறப்பம்சமாகும்.

ROTARACT CLUB

மானிப்பாய் ரோட்டறக்ட் கழகத்தின் அனுசரணையுடன்.

மாபெரும் Multimedia கருத்தரங்கும் CD வெளியீடும்

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலே காலை 10 மணிக்கு ஆரம்பம்.

ஜீலை 21

Ent. Free !

ஆரம்ப விழாவினை முன்னிட்டு வழங்கப்படும் இலவச கற்கை நெறி..

Certificate of Computer Awareness Course (CCAC)

யாழ் நகரின் கணனித்துறை வரலாற்றில் முதல்முறையாக கணனிக் கல்வியை கற்கவிருப்பவர்களுக்கு யாழ் ரெக் கணனிக் கல்வியகத்தின் ஆரம்பத்தினை முன்னிட்டு வழங்கவிருக்கும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு கற்கைநெறி.

இக்கற்கை நெறியானது கணனி பற்றிய பூரண அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டதொன்றாகும். மேலும் இக்கற்கைநெறிக்கு ஆரம்பக்கட்டணம் மட்டுமே அறவிடுவதோடு கற்கைநெறி முடிவில் பரீட்சை நடாத்தப்பட்டு புலமைப்பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன. கொழும்பின் பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில் இயக்கப்படவிருக்கும் இந்நிலையமானது, மாணவர்களின் எதிர்காலத்திற்கேற்ப வேறு பல கற்கைநெறிகளையும் வழங்கவிருக்கின்றது.

காலம் : 3 மாதம்
பதிவுக்கட்டணம்
1250/=
மட்டுமே அறவிடப்படும்

ஏற்பாட்டாளர்கள் : யாழ்.பல்கலைக் கழக வணிகக் கழகம்.

(C/42092)

YTS YAARL TECH SYS

விண்ணப்பங்கள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்படும்

No: 3 Sir Pon Ramanathan Rd, Kaladdy Junction - Jaffna

Tel: 0773 206 207 www.yaarltech.com



## VCare Health Clinic (Pvt) Ltd.
## The only Professional Trichology Centre - in Sri Lanka வில்

# பதவி வெற்றிடம்

இலங்கையிலேயே முதலாவது Hair Clinic Vavuniya வில் 23.03.2005 முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றது.

இலங்கையிலே தலைமுடி சம்பந்தமான பிரச்சினைகள் அனைத்திற்கும் நாடவேண்டிய இடம் இதுவாகும். இது ஒரு அரச அங்கீகாரம் பெற்ற Hair Research & Hair treatment clinic ஆகும்.

- இந்நிறுவனத்திற்கு ஆயுர்வேத சித்த பெண் மருத்துவர் ஒருவருக்கான பதவி வெற்றிடம் காணப்படுகின்றது. இவர் வவுனியாவில் தங்கி பணிபுரிபவராக இருத்தல் வேண்டும்.
- ஆர்வம் உடையவர்கள் நேரில் அல்லது தொலைபேசி மூலம் 20.07.2005 ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளிற்கு:

No 68, 2nd Cross Street, Vavuniya.

VCare

VCARE HEALTH CLINIC (P) LTD

...The Only Professional Trichology Centre in Sri Lanka.

T.P.: 024 4589973

(C/42089)(21.42.17.19)



# இப்பொழுது யாழ் மண்ணில் மல்டிலக்கின் வர்ண வங்கி

வர்ண உலகில் புரட்சி




Coloris France
The Colourbank

பல்லாயிரம் வர்ணங்களை தன்னகத்தே கொண்ட மல்டிலக்கின் வர்ண வங்கிகளில் உங்கள் எண்ணங்களின் தெரிவாய் பல வர்ணங்களைத் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம்

**கனேசன் ஹாட்வெயர்**
பிரதான வீதி, நெல்லியடி.
T.P.: 021 - 226 3290

**கந்தவேலன் ரேடர்ஸ**
இல. 110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021- 222 2822

(C/42094)

COLORIS FRANCE Colourbank

# தகவல் தந்தவரைக் காட்டிக்கொடுக்க மறுத்து சிறை சென்றுள்ள பெண் பத்திரிகையாளர்

'உனது கருத்து எனக்கு உகந்ததாய் இல்லாமல் போகலாம். ஆனால், அந்தக் கருத்தை வெளியிடுவதற்கு உனக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதற்கு நான் எல்லா வகையிலும் போரிடுவேன்' என்று கூறினார் ரூசோவென்ற



ட்ராட்ஸ்கி கொலையில் சம்பந்தப்பட்ட ஆயுதத்தை, விற்க முயலும் பெண்.

அறிஞர்.

இந்த அடிப்படையில் எழுந்ததுதான் மேற்கு நாடுகளில் இன்று பேணப்படுகின்ற கருத்துச் சுதந்திரம். அதுவே பத்திரிகைச் சுதந்திரமாகவும் பரிணமித்தது.

மக்கள் அறியவேண்டிய விடயங்களை வெளிப்படுத்துவதும் அவ்விடயங்கள் தொடர்பாகத் தனது விமர்சனங்களை வெளியிடுவதும், அவசியம் ஏற்படும்போது அக்கருத்துக்கள் தொடர்பான வெகுஜனக் கருத்தை உருவாக்கி வெளிப்படுத்துவதும் இந்தவிதமான பத்திரிகைக் கருத்துச் சுதந்திரத்தில் காணப்படும் அம்சங்கள் ஆகும்.

கருத்து என்று சொல்லும்போது அந்தக் கருத்துக்குரிய செய்தியையே நாம் பத்திரிகைகளின் ஊடாக எதிர்பார்க்கின்றோம். கருத்தை - செய்தியைத் தேடி உருவாக்கி வெளியிடும் உரிமை பத்திரிகைக்கு இருப்பது போலவே அதனை அறிந்துகொள்ள அப்பத்திரிகைகளை வாங்கி வாசிக்கும் வாசகராகிய மக்களுக்கும் உரிமையுண்டு.

எனவே, இந்த உரிமைகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்தவை. அதாவது, செய்தியைத் தேடிப் பிடித்து வெளியிடுவது பத்திரிகையின் உரிமை என்றால் அதனைப்பெற்று வாசித்து விளங்கிக்கொள்வது வாசகர்களின் உரிமையாகின்றது எனலாம்.

- இவ்வாறு செய்திகளையும் கருத்துக்களையும் தனது வாசகர்களுக்கு வழங்குவதற்கு முற்படும்போது பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் எதிர்நோக்குகின்ற இடர்களும் எதிர்ப்புகளும் சஞ்சலங்களும் கொஞ்சமல்ல.

அவ்வாறான ஒரு விடயம்தான் பத்திரிகையாளர்கள் தாம் செய்திகளைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் (Sourees) அல்லது செய்திகளை வழங்கும் நபர்கள் பற்றிய அம்சமாகும். மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய ஒருவிடயத்தை வெளியிடும்போது அந்தவிடயம் எங்கிருந்து கிடைத்தது அல்லது எவர் வழங்கினார் என்பதைப் பொதுவாக எந்தப் பத்திரிகையாளரும் வெளியிட விரும்புவதில்லை. அது அப்பத்திரிகையாளரின் கண்ணியம், கடமை, கடப்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட விடயம்.

செய்தியின் மூலத்தை - அதனை வழங்கியவரின் விவரத்தை வெளியிட மறுப்பதென்பது பத்திரிகையாளர்களின் கடமையாகவே கருதப்பட்டுவந்துள்ளது. தனது விவரம் வெளியிடப்படமாட்டாது என்ற உறுதிமொழி நம்பிக்கையுடன் ஒருவர் வழங்கும் தகவல் வெளியானதன் பின் அந்த நபர் அல்லது மூலம் யார் - எது என்பதை

## உலக வலம்

மேனா

வெளியிடுவது பத்திரிகையாளரின் கண்ணியத்தை இழிவுபடுத்துவது மட்டுமல்ல, நம்பிக்கைத் துரோகமாகவும் கணிக்கப்படவேண்டும் என்று பத்திரிகையாளர்கள் கருதுகிறார்கள்.

*சிறை சென்ற பத்திரிகையாளர்*

அண்மையில் அமெரிக்காவில் நடந்த ஒரு வழக்கில் இவ்வாறு தனக்குச் செய்தி வழங்கியவரின் விவரத்தை வெளியிட மறுத்து சிறைக்குச் சென்றுள்ள பத்திரிகையாளரின் துணிச்சலும் நேர்மையும் பத்திரிகையாளர்களின் பெருமையை மேலும் உயர்த்தியுள்ளது.

அதிபர் புஷ் நிர்வாகத்தின் சி.ஐ.ஏ. இரகசிய அதிகாரி ஒருவரின் பெயரை ஊடகங்களுக்கு யார் வெளியிட்டது என்பது பற்றிய விசார்ணை ஜூரிகளின் முன்னிலையில் அமெரிக்க பிரதம மாவட்ட நீதிபதி தோமஸ் ஹோகன் தலைமையில் நடைபெற்று வுருகிறது.

இந்த விசாரணையில் சாட்சியமளித்த நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் செய்தியாளர் திருமதி ஜூடித் மில்லர் என்பவர் தமக்குச் செய்தி வழங்கியவர் யார் என்பதை வெளியிட மறுத்துவிட்டார். அதனால் அவரை உடனடியாகவே சிறையில் அடைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

செய்தி வழங்கியவர்களுக்குத் தாம் அளித்த உறுதிமொழியை மீறுவதற்கு விரும்பவில்லையென்று அடித்துக் கூறினார்.


நான் ஜெயிலுக்குப் போக விரும்பவில்லை. ஆனால், வேறு வழியில்லை. எனது செய்தி

## ஸ்கொட்லாந்து ஜி-8 உச்சிமாநாடும் பெறுபேறுகளும்

மூலத்தின் அடையாளத்தை நான் காப்பாற்றியாக வேண்டும். இது எனது தனித்துவ மனோதர்மத்தைப் பொறுத்தவிடயம். அதேபோல சுதந்திரமானதும் முனைப்பானதுமான பத்திரிகைத்துறைக்காக நான் ஒரு நிலைப்பாட்டை எடுத்தாக வேண்டியுள்ளது என்று ஜூடித் மில்லர் நீதிபதியிடம் கூறினார்.

தகவல் வெளியிட மறுத்த செய்தியாளர் மில்லரை உடனடியாகவே சிறைக்குக் கொண்டுபோகும்படி உத்தரவிட்ட நீதிபதி, தகவல் வெளியிட இணங்கினாலன்றி ஜூரி சபையின் விசாரணை முடியும் மட்டும் சிறையில் இருக்கவேண்டும் என்றும் கூறினார்.

சட்டத்தை மீறும் ஒருவர் என்முன் நிற்கின்




பத்திரிகை நிருபர் ஜூடித்மில்லர் சிறைக்கு அனுப்பப்பட்டதை ஆட்சேபித்து நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவரான ஜெப் செற்கிளயினும் ஏனைய பத்திரிகையாளர்களும் ஆர்ப்பாட்டம் செய்யும் காட்சி.

றார். நீதியைத் தடைசெய்வதாக அவர் நடத்தையுள்ளது என்று கூறிய நீதிபதி இவரைப் போக விட்டால் இனிவரும் ஒரு பத்திரிகையாளரும் தன்னை விடுவிக்கும்படியாக எதிர்பார்க்கக்கூடும். அப்பொழுது நாம் ஒரு வழுக்கல் பாறையில் நடப்பவர்களாகி விடுவோம் செய்தி மூலத்தைக் காப்பாற்றுவதற்கான முழுமையான உரிமையைப் பத்திரிகை நிருபர்கள் கொண்டிருக்கவில்லை - என்றார்.

இதற்கு 1973 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பொன்றையும் அவர் மேற்கோள் காட்டினார்.

முன்னதாக ஜூடித் மில்லர் நீதிபதி முன் தனது கருத்தை வெளியிடுகையில், இரகசியங்களைப் பத்திரிகையாளர்களால் காப்பாற்றமுடியாவிட்டால் அவர்களால் பணியாற்றவே முடியாமல் போய்விடும். அதனால், சுதந்திரமான பத்திரிகைத்துறையும் இருக்கமுடியாது - என்றார்.

நீதிமன்றம் பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. பத்திரிகைகளின் உயர்மட்ட ஆசிரியர்களும் பத்திரிகையாளர்களும் கணவர் மில்லரும் அங்கு இருந்தனர்.

டைம் சஞ்சிகையின் நிருபர் மத்யூ கூப்பர் என்பவர் தொடர்பாக இன்னொரு வழக்கில் தமக்குத் தகவல் தந்தவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு சம்மதம் தந்துள்ளார் என்று அறிவித்ததைத் தொடர்ந்து சிறைக்கு அனுப்பப்படுவதிலிருந்து தப்பிவிட்டார்.

ஜூடித் மில்லரை சிறையில் அடைக்கும்படி நீதிபதி ஹோகன் உத்தரவிட்டபோது அப்பெண் பத்திரிகையாளர் எதுவித உணர்ச்சியையும் வெளியிடவில்லை.

சிறைக்குப் போகாமலிருப்பதற்காக நான் கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்கவிடமுடியாது. எனது நோக்கும் நேர்மையானது. நான் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றியாக வேண்டும். இல்லையென்றால், பத்திரிகையாளர் தனது நம்பகத்தன்மையை இழந்துவிடுவார். பொதுமக்களின் நம்பிக்கையும் போய்விடும். இறுதியில் துன்பந்தான் மிஞ்சும் - என்று அவர் கூறினார்.

செய்திகளின் மூலங்களைப் புனைபெயர்களில் வெளியிடுவதானது பத்திரிகையாளர்களின் செய்தி வெளியீடுகளுக்கு ஓர் அடிப்படையான அம்சம். குறிப்பாக, அரச தரப்பு மற்றும் பொது நிறுவனங்களின் ஊழல்களை வெளியிடும்போது இது அவசியமாகின்றது. அதிபர் நிச்சர்ட் நிக்ஸனின் ஆட்சி கவிழக் காரணமாய் இருந்த வோட்டர் கேட் ஊழல் போன்றவற்றை வெளியிடுவதற்குச் செய்தியாளர்கள் புனைபெயர்களையே தமது செய்தி வழங்குநர்களாகக் குறிப்பிடவேண்டியிருந்தது.

மில்லர் ஒரு புலனாய்வுச் செய்தியாளர். அமெரிக்கத் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான விடயங்களை ஆழமாக அலசும் நிருபர் ஆவார்.

பத்திரிகையாளர் என்றால், சட்டத்துக்கும் மேலானவர் என்ற மனப்பான்மை அவரிடமில்லை. என்றாலும், நீதிமன்றில் எவ்வாறான நிலைப்பாட்டைத் தாம் எடுக்கவேண்டும் என்பதை மிக ஆழமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் 2003ஆம் ஆண்டு அமெரிக்கக் குற்றவியல் புலனாய்வுக்கழகத்தின் (சி.ஐ.ஏ.) இரகசியப் பணியாளரான வாலரி பிறேம் என்பவரின் பெயரை ஊடகங்களுக்கு புஷ் நிர்வாகத்தைச் சேர்ந்த எவர் கசியவிட்டார் என்பதையும், இதில் சட்டங்கள் ஏதாகிலும் மீறப்பட்டுள்ளதா என்பது பற்றியும் கண்டுபிடிப்பதற்காக நீதித்துறைத் திணைக்களத்தின் விசேட சட்ட நிபுணர் பெட்றிக் பிற் ஜெரால்ட் மூலமாக ஜூரி சபையின் முன்னிலையில் ஆராயப்பட்டு வருகின்றது.

இவ்வாறு செய்தி மூலங்களை வெளியிட மறுத்துள்ள மேலும் 30 அமெரிக்க பத்திரிகையாளர்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியேற்படலாம் என்று செய்திகள் கூறுகின்றன.

*பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் சட்டம் வரும்?*

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் செய்தியா ளர் ஜூடித் மில்லர் டைம் சஞ்சிகையின்

## 20 ஆண்டுகளுக்குப்பின் கிடைத்துள்ள ட்ராட்ஸ்கிரி கொலை ஆயுதம்

செய்தியாளர் மத்தியூ, கூப்பர் ஆகியவர்கள் தொடர்பான இந்த வழக்கு அமெரிக்காவிலும் வேறு நாடுகளிலும் பத்திரிகைத்துறையினரால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வந்துள்ளது.

பத்திரிகையாளர்கள் தமது செய்தி மூலங்களை வெளியிடும்படி நிர்ப்பந்திக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பளிக்கும் விதத்தில் சட்டம் ஒன்றைக் காங்கிரஸ் சபையில் நிறைவேற்றுவது பற்றி அமெரிக்க ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் ஆலோசித்துவருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை நிருபர் ஜூடித் மில்லரின் சிறைவாசம் அந்நாட்டின் பத்திரிகையாளர்களுக்கு மேலும் ஓர் உரிமையைப் பெற்றுத்தர உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

* * *

*ட்ராட்ஸ்கியைக் கொன்ற ஆயுதம்*

ரஷ்யப் புரட்சியாளர் ட்ராட்ஸ்கியைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் 'ஐஸ்பிக்' (ICEPICK) என்ற பனிக்கட்டிகளை உடைத்து நொறுக்கும் ஆயுதம் சுமார் 2 தசாப்தங்களுக்குப் பிறகு மீண்டும் வெளியில் வந்துள்ளது.

1917ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சியை முன்னின்று நடத்தியவர்களில் லியோன் ட்ராஸ்கியும் ஒருவர். பின்னர் ரஷ்ய சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலினுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ரஷ்யாவிலிருந்து 1937ஆம் ஆண்டு தப்பியோடி மெக்ஸிக்கோவில் வாழ்ந்து வந்தார். ரஷ்யப் புரட்சிக்கு ஸ்டாலின் துரோகம் இழைத்துவிட்டதாக அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

ட்ராட்ஸ்கியின் அனுதாபிபோன்று செயற்பட்டட ஓர் இளைஞன் 'ஐஸ்பிக்' ஆயுதத்தை அவரது தலையில் செலுத்தி 1940ஆம் ஆண்டு கொலைசெய்தான். இந்தக் கொலையை ரஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினே திட்டமிட்டுச் செய்வித்தார் என்று பொதுவாக நம்பப்பட்டது.

ஐஸ் உடைக்கும் இந்த ஆயுதம் கடந்த 20 வருடங்களுக்கு மேல் காணாமற்போய் இருந்தது. வரும் ஒகஸ்ட் 20ஆம்திகதி ட்ராட்ஸ்கியின் 65ஆவது நினைவுதினம் வருகின்ற வேளையில் இந்த ஆயுதம் மீண்டும் வெளிப்பட்டிருக்கின்றது.

என்றாலும், இந்த ஆயுதம்தான் அவரைக் கொலைசெய்யப் பயன்படுத்தப்பட்ட உண்மையான ஆயுதம் என்பதை ஆய்வுசெய்து முடிவெடுப்பது இதன் உரிமையாளர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள தகராறு காரணமாகத் தாமதமடைந்துள்ளது.

இந்தக் கருவி அல்லது ஆயுதம் தற்பொழுது அனா அலிஸியா சலாஸ் என்ற பெண்ணிடமிருக்கிறது. இவரது தந்தை 1940 ஆம் ஆண்டு



ஜி-8 நாடுகளின் தலைவர்களில் சிலர்.

காலத்தில் இரகசிய பொலீஸ் தளபதியாகப் பணிபுரிந்தபோது தடயப்பொருள்கள் வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து எடுத்துச்சென்று மறைத்துவைத்துள்ளார். இப்பொழுது இந்த ஆயுதத்தை இந்தப் பெண் விற்பதற்கு முயற்சி செய்கிறார். ஓர் அடி நீளமுள்ள ஐஸ் உடைக்கும் ஆயுதம் என்ன விலைபெறும் என்பது அவருக்குத் தெரியவில்லை. அவரது வசிப்பிடத்துக்குச் சில கட்டடங்கள் தள்ளி ட்ராட்ஸ்கியின் பேரன் வாழ்ந்து வருகின்றார். ட்ராட்ஸ்கியின் இல்லத்தை இவர் ஓர் அரும்பொருள் காட்சியகமாகப் பேணிவருவதாகவும் அங்கு இந்த ஆயுதத்தையும் சேர்த்துக்கொள்ளவிரும்புவதாகவும் அறிவித்துள்ளார்.

சலாஸிடமுள்ள ஐஸ்பிக் ஆயுதத்தில் இன்னமும் இரத்தக்கறை காணப்படுகின்றது. சிவப்பும் மண்ணிறமாகவும் காணப்படும் இந்தக் கறை ட்ராட்ஸ்கியின் இரத்தக்கறைதானா என்பது அவரது பேரனான ஈஸ்டபன் வொல்கோவின் இரத்த மரபணுக்களுடன் பொருத்தி ஆய்வுசெய்தால்தான் கண்டுபிடிக்கமுடியும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

* * *

*வெறுப்பைப் பரப்பினால் கடும் நடவடிக்கை*

பிரிட்டனில் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வுகளைப் பரப்புகிறவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கான சட்டம் ஒன்று கொண்டுவரப்படவிருப்பதாக பிரதமர் ரொனி பிளேயர் அறிவித்துள்ளார்.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடத் திட்டமிடுபவர்களைப் பிடிப்பதற்கு பொலீஸாருக்கு மேலதிக அதிகாரங்கள் தேவையானால் அதற்கான சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்குத் தயாராய் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தொடர் குண்டுவெடிப்பினால் மரணமானவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு வரும் அதேவேளை, இம்மாதிரியான பயங்கர செயல்களில் இறங்குபவர்களுக்கு இரக்கம் காட்டப்படக்கூடாதென்ற கருத்து பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் பரவிவருகின்றது.

மக்கள் மத்தியில் வெறுப்பைப் பரப்பும் வகையில் பிரசாரங்களில் ஈடுபடும் முஸ்லிம் மதத்தலைவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகவும் பிளேயர் கூறினார். லண்டனில் வெடித்த குண்டுகள் கடந்த வருடம் மட்றிட்டில் நடந்த சம்பவத்தில் தொடர்புடைய ஆள்களைப் போன்றவர்களால்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குண்டுகள் இஸ்லாமியத் தீவிர பயங்கரவாதிகளால் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளனவென்று அவர் கூறியுள்ளார்.

* * *

*ஜி-8 உச்சி மாநாடும் அதன் பயன்பாடுகளும்*

ஸ்கொட்லாந்தில் நடைபெற்று முடிந்த ஜி-8 நாடுகளின் உச்சி மாநாடு முன்னர் எப்போதும் போலன்றி இம்முறை நல்ல சில முடிவுகளுடன் நிறைவுபெற்றிருப்பதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். முன்னர் நடைபெற்றுள்ள ஜி-8 உச்சிமாநாடுகளைவிட இம்முறை நல்லபெறுபேறுகள் கிடைக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

(13 ஆம் பக்கம் பார்க்க)

## திருமணக் கார் (குளிரூட்டியது)

### வாடகைக்கு



- திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467 (C/43631)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## SPOKEN ENGLISH WITH GRAMMER

**BY: BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்:
செவ்வாய், வெள்ளி வகுப்புகள்
ஆரம்பம்: **19.07.2005**
நேரம்: 4.00 மணி
இடம்: கொக்குவில் ஞானபண்டித பாடசாலை அருகில்

(37736)(42.15.19)

## ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்

### பண்டிதர் நரசிம்ம நாயுடு

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர்.
இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்து கொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன்** அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 077 9122836.

(37618) (42-14-19)

## மணமகன் தேவை

யாழ்/ இந்து கௌரவ சைவ போசன குடும்பம், அரச சார்பற்ற நிறுவனமொன்றில் வேலை பார்க்கும் விஞ்ஞானப் பட்டதாரி, M.Sc. (பயிலுநர்), வயது 26, நட்சத்திரம் மிருகசீரிடம், 4ஆம் பாதம் தோசமற்ற 7இல் செவ்வாய் கிரகபாவம் (24) மணமகளுக்குக் கூடிய தராதரமுள்ள சைவபோசன மணமகன் தேவை. வயதெல்லை 28/32 (பொறியியல் பட்டதாரி / CIMA கணக்காளர்/ பல்கலை விரிவுரையாளர், உள்நாட்டில் வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது).

விளம்பர இலக்கம்: ***2639*** (37203) (24.15.19.42)
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

## ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

(C-43109)

## மூன்றாம் ஆண்டு நினைந்துருகல்



கண் மலர்வு 1936 - 09 - 03

கண் உதிர்வு 2002 - 07 - 19

நயினை அமரர்

### இராமநாதன் கோபாலபிள்ளை

திதி: ஆடிப்பூர்வபட்ச ஏகாதசி (2005-07-17)

அறிவோடு அன்பை அமுதோடு
ஊட்டி எம்மை வளர்த்தெடுத்த ஐயா!
தெளிவோடு வாழ்ந்து வாழுறையும்
தெய்வத்துள் புகுந்த எம் ஐயாவை
மூன்றாண்டு நினைவில் இன்று கைகூப்பி
வணங்கி நினைவு கூருகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

2/1, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (37783)(42.19.15)

## இசைக் கருவிகள்



சகலவிதமான இசைக்கருவிகளையும், அவற்றின் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

### சாயி சங்கீதா

UG53, பீபள்ஸ் பார்க்,
கேஸ்வேர்க் வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி: 2384222, 2445102
பக்ஸ்: 2445102 ஈ-மெயில்: saimusic@sltnet.lk

Talent Media

## இயந்திர மூலம் குழாய்க்கிணறு அமைத்தல்

இயந்திர மூலம் 6" விட்டமான குழாய்க்கிணறு 3 மணித்தியாலத்தில் அமைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**ந. பாலகிருஷ்ணன்**
கலைவாணி மில் ஒழுங்கை
(Farm School Lane),
கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.
T.P:- 0777290266, 0777512943

(36937) (54-

## மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 17

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லை திரு ஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.


சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உபஅதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனின் தலைமையில் இடம்பெறும்.

ப.பத்மராஜின் புல்லாங்குழல் இசைக்கு அணிசெய் கலைஞர்களாக வயலின் - கிருஷ்ணவேணி மயில்வாகனம், மிருதங்கம் - எஸ்துரை ராஜா, கடம் - ஏ.செல்வரத்தினம் ஆகியோர் பங்குபற்றுவர்.

செல்வி சி.சிவரஞ்சினியின் இசைக் கச்சேரிக்கு வயலின் - ப.சியாம்கிருஷ்ணா, மிருதங்கம் - வ. ரமணா ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

(ஐ-202)

## 102 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




### திரு.வே.அருணாசலம் தில்லையம்பலம்

17.07.2005

*ஸ்ரீ வல்வை வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி துணையுடனும்,*
*வல்வை முத்துமாரி அம்மன் அருளுடனும்*
*இன்று போல என்றும் நீடுழி வாழ்க*
*என வாழ்த்துகிறோம்.*

(37745)(42.15.19)

*வாழ்த்துபவர்கள்:*
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

ஷஆனந்தபவான்
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

# Study in India

## இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாக (Graduate) வாய்ப்பு

**A/L சித்தியடைந்த மாணவர்களும், 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்**

- Garden City College Affiliated to Bangalore University
- SSM College of Engineering affiliated to Anna Engineering University
- Muthayammal Art and Science College affiliated to Periyar University
- Bishop Heber College affiliated to Bharathidasan University

### Courses

- B.E. Information Technology, • B.E. Computer Science and Engineering,
- B.E. Electronics and Communication Engineering, • B.E. Mechanical Engineering,
- B.Sc. Information Technology, • B.Sc. Computer Technology,
- B.Sc. Apparel and Fashion Technology, • M.S.C. Information Technology
- B.Sc. (Computer Science), • B.Sc. (Fashion & Apparel Design),
- B.Sc. (Microbiology), • B.Sc. (Genetics), • B.Sc. (Biotechnology),
- BCA. (Bachelor of Computer Applicants), • BBM. (Bachelor of Business Management),
- BHM. (Bachelor of Hotel Management), • B.A. (Journalism), • B.Com (Computers) • B.Sc. Maths,
- B.Sc. Phys • B.Sc. Electronics • B.Sc. Chemistry • B.Sc. Computer Science

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

எமது நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான மாணவர்கள் தற்பொழுது இந்தியாவில் கல்விபயில்கின்றனர்.

- ஆண்கள் - பெண்களிற்கு தனியான விடுதி வசதிகள்
- Student Visa எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும்
- கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

2005ல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் Pending Results உடன் இவ்வருடமே கல்லூரிகளில் சேர்ந்து பாடநெறிகளை தொடர முடியும். இதனால் மாணவர்கள் ஒரு வருடத்தை சேமிக்க முடியும்

அனேகமான கல்லூரிகள் யூலைமாதம் இரண்டாம் கிழமை தமது பாடநெறிகளை தொடக்கவிருப்பதால், உடனடியாக தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**MBBS** இலங்கை Medical Council இனால் அங்கீகரிக்கப்பட்ட Crimea Medical Institute - University (Ukraine) இல் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படுகின்றது - A/L, O/L சித்தியடைந்த மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு **Call 0777 - 767818 / (011) 4512591**

**SCHOLARS INFORMATION CENTER**
**2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo-06.**

SKAds&Print's

## புத்தக வெளியீட்டு அழைப்பு



**ஜோவல் இராஜசேகரம்பிள்ளை ஆனல்ட்**
(ஆனல்ட் சதாசிவம்பிள்ளை)
அவர்களின் குடும்பத்தினர் நடத்தும் வெளியீட்டு விழா

**22.07.2005** (வெள்ளிக்கிழமை) **மாலை 2.00 மணி**

சிறப்புரைகள்
தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை,
கலாநிதி S. சிவலிங்கராஜா
கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றில் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை
பேராயர் கலாநிதி S. ஜெபநேசன்

உடுவில் மகளிர் கல்லூரி
மண்டபத்தில் நடைபெறும்.
அன்னாரின் நூல் தொகுப்புக்களின் புதிய வெளியீட்டில்
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குருமனை,
உடுவில்,
சுன்னாகம்.

அருட்திரு. S.C. ஆனல்ட்
அமைப்பாளர்.

# ...இடப்பெயர்வு இன்னல் தீர முன்னர் ஆழிப் பேரலையால் நிர்க்கதியானோம்...!

ஆழிப்பேரலையால் பாதிப்புற்றவர்களின் பாதிப்புக்களை நாம் பலரைப்பார்த்தும், கேட்டும், வாசித்தும் அறிந்திருக்கின்றோம். ஆனால், வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து சுனாமியால் பாதிப்புற்ற இவர்களைப் பார்த்தபோது எமது வேதனை உச்சத்தை அடையும்.

1990ஆம் ஆண்டு அரச படையினரின் ஆக்கிரமிப்பால் உற்றார், உறவினர்கள் வலிகாமத்திலிருந்து உடைமைகளை இழந்து அநாதைகளாக அடைக்கலம்கோரி வடமராட்சி மண்ணில் காலடி எடுத்துவைத்தார்கள். இங்கிருந்து மீண்டும் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பிற்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் பட்ட கஷ்டங்கள் சொல்லில் அடங்கா. சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மீண்டும் வடமராட்சி வந்தார்கள். அப்போது எஞ்சியிருந்த நகை மற்றும் பொருள்களை விற்று தனியார் காணிகளில் சிறு குடிசைகள் அமைத்துக்கொண்டு வாழ்ந்தார்கள். சிறு மூலதனத்தை முதலீடாகக் கொண்டு கட்டுமரம், வலை போன்றவற்றின் உதவியுடன் கடற்றொழிலை ஆரம்பித்தனர். கொஞ்சம் வசதியுள்ளவர்கள் பிளாஸ்ரிக் படகின் மூலம் கடற்றொழிலை ஆரம்பித்தனர்.

இந்நிலையில்தான் ஆழிப்பேரலை வந்து அவர்களது ஒட்டுமொத்தமான உடைமைகளையும் அள்ளிச் சென்றது.

அவர்கள் மீண்டும் பாதிப்புற்று அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களுக்குப் பொது நிறுவனங்கள் பல உதவிக்கு வந்தபோதும் இவர்களுக்கென சொந்த நிலம், பணம் போன்றவை இல்லாமையால் இவர்கள் மீண்டும் பெருந்துன்பங்கள் மத்தியில் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களை நாம் நேரில் கண்ட போது அவர்கள் தெரிவித்த துன்பங்கள், துயரங்கள் போன்றவற்றை உங்கள் முன் வைக்கின்றோம்.

**அருணாசலம் சதாசிவம்** (சித்தப்பா - வயது-55)



**ஐந்து பிள்ளைகளின் தந்தை. கடற்றொழில்**
**சொந்த இடம் மயிலிட்டி திருப்பூர். தற்காலிக இடம் பொலிகண்டி.**

1990 ஆம் ஆண்டு மயிலிட்டியில் நான் இழந்த உடைமைகளின் மதிப்பீடு 4 கோடி ரூபா. வசதியாக வாழ்ந்து பலருக்கு தொழில் வாய்ப்புகளும் கொடுத்து உதவிய நான் இன்று மிகக் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். மீண்டும் கஷ்ரப்பட்டுச் சேர்த்த உடைமைகள், பொருள்கள், நகை, பணம் முதலாகப் பதினொருலட்சம் ரூபா பெறுமதியானவற்றை சுனாமியால் இழந்துவிட்டேன். இடம்பெயர்ந்து தற்போது பொலிகண்டி இடைத்தங்கல் முகாமில் வாழ்கின்றேன்.

எனக்கு இரண்டு பிளாஸ்டிக் படகுகள் கடலில் நின்றன. அதற்கு எவ்வித சேதமும் இல்லை. போட்டு எஞ்சின்கள் பெரும் சேதம். வலைகள், வாகனங்கள், வீடு என்பவை முற்றாகச் சேதமடைந்துவிட்டன.

எனது பிளாஸ்டிக் படகுகளில் ஒன்றின் அடிப்பகுதியில் ஒரு அடி நீளத்திற்கு சிறு உடைவுகள் உள்ள இந்த திருத்தவேலையை ஒரு மணித்தியாலத்திற்குள் செய்து முடிக்கமுடியும். இதற்காக எனது வீட்டில் இருந்து சுமார் 300 மீற்றர் தொலைவிலுள்ள சுனாமி பாதிப்புற்ற படகு திருத்தும் தொழிற்சாலையில் தெரிவித்தபோது, அவர்கள் படகை வாகனத்தில் தொழிற்சாலைக்குக் கொண்டு வரும்படி தெரிவித்தார்கள். படகை ஏற்றிப்பறிப்பதற்குச் செலவாகும் தொகை சுமார் 5ஆயிரம் ரூபா திருத்தச் செலவு கிட்டத்தட்ட 300 ரூபா வரும். இந்நிலையில், பாதிப்புற்றவர்களுக்கு மேற்படி உதவியாளர்களின் செயல் வேதனையாகவுள்ளது.

உலர் உணவுப் பொருள்களில் கோதுமை மா மனித உபயோகத்திற்கு உதவாது. அதனால் அவற்றை மக்கள் கிலோ 15ரூபா வீதம் விற்றுவிட்டு விலை கூடிய மாவையோ வேறு பொருள்களையோ வாங்குகின்றார்கள். தண்ணீர் வசதிகள் பவுஸர்கள் மூலந்தான் கிடைக்கின்றன. சுத்தம் பற்றிச் சொல்ல முடியாது. எங்கோ ஒரு கிணற்றில் எடுத்துவந்து தருகின்றார்கள். நாம்தான் சுகாதார முறைப்படி பயன்படுத்தவேண்டும். 15 வீடுகளுக்கு ஒரு மலசலகூடம் உள்ளது. இதையும் அதிகளவில் முகாமில் உள்ளவர்கள்தான் சுகாதார முறையில் பயன்படுத்துகின்றார்கள்.

அடுத்து, சொந்த வீடுகள் கட்டுவதற்குச் சொந்தக் காணி வேண்டும் என்றார்கள். ஒருசில வசதியானவர்கள் அதிக விலை கொடுத்து நிலம் வாங்கியுள்ளார்கள். அவர்களுக்குச் சில இடங்களில் சொந்த வீடு கட்டும் திட்டம் ஆரம்பமாகியுள்ளது. மேலும் பணவசதி அற்றவர்கள் பெரும் கஷ்டத்துடன்தான் வாழ்ந்து வருகின்றார்கள். காரணம், தற்காலிக வீடுகள் அமைந்துள்ள காணிகள் காணிச் சொந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில்தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது நாம் உள்ள தற்காலிக முகாம்கள் ஓரளவு எமது கடற்றொழிலுக்கு ஏற்ற தூரத்தைக் கொண்டுள்ளன. ஆனால், வசதிகள் இன்மையால் கடற்கரையில் இருந்து சுமார் மூன்று மைல் தொலைவிலுள்ள கற்கோவளம் புனிதநகர் அரச காணிகளில் நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதை அதிகளவிலான சுனாமியால் பாதிப்புற்ற கடற்றொழிலாளர்கள் இப்போதே புறக்கணிக்கத் தொடங்கியுள்ளார்கள். காரணம் தூரம். கடற்றொழில் உபகரணங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு செல்லமுடியாத நிலை. கடற்றொழிலுக்குச் செல்லும் நேரங்கள், மீன்களை விற்பனை செய்யும் இடங்கள் போன்ற காரணங்கள்தான் உண்மையான காரணங்கள்.

தற்போது நாம் தங்கியுள்ள தற்காலிக முகாம்களைக் கியூமெடிக்கா, ஹரித்தாஸ் போன்ற தொண்டர் நிறுவனங்கள்தான் இணைந்து செய்து உதவியுள்ளன. இவைகளை எமது பாதிப்புற்ற கடற்றொழிலாளர் சமூகம் என்றும் மறக்க முடியாது. எமது அரசு செய்ய வேண்டிய உதவிகளை மனித நேய அடிப்படையில் முன்வந்து உதவிய இவைகளுக்கு நாம் என்றும் நன்றிக்கடன்பட்டவர்கள்.

**ஆறுமுகம் சந்திரலிங்கம்** (வயது 34)



**3 பிள்ளைகள், சொந்த இடம் சேந்தான்குளம், இளவாலை. தற்போதைய இடம் திக்கம் இடைத்தங்கல் முகாம். வியாபாரம், ஷெல் தாக்குதலில் ஒரு காலை இழந்து செயற்கைக்கால் பொருத்தியுள்ளார்.**

வன்னியில் இடம்பெயர்ந்து இருந்தபோது ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினால் ஒருகாலை இழந்தேன். அதற்குமுன் நானும் கடற்றொழில்தான் செய்தேன்.

அனர்த்தத்தின்போது என்னால் திக்கம் பிரதான வீதியில் நடத்தப்பட்ட வர்த்தக நிலையம் அடித்துச் செல்லப்பட்டதில் சுமார் 3 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

தற்போது கடற்றொழில் செய்யும் இடம் பெயர்ந்தவர்களான எனது உறவினர்களுக்கு கடற்றொழில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. கால் ஏலாத - தொழில் பாதிப்புற்ற - வர்த்தகம் செய்யும் எனக்கு இதுவரை தொழில் செய்வதற்கான எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

சில நிறுவனங்கள் பாத்திரங்கள், உணவுப்பொருள்கள், தளபாடங்களை அளித்தபோதும் இதனால் நான் என்குடும்பத்தைக் கொண்டுநடத்தமுடியவில்லை. வங்கிகளில் வர்த்தகக்கடன் கேட்டுப்போனால் வர்த்தக சங்கங்களில் அங்கத்தவர்க்கான பதிவட்டையும் இரு பிணையாளர்களும் வேண்டும் என்று தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை, சுனாமியால் பாதிப்புற்ற வர்த்தகர்களுக்கு வர்த்தக அங்கத்தவர் அட்டையின்றியே கடன்களை வங்கிகள் வழங்கி வருகின்றன.

நிவாரணத்திற்கென வரும் பலபொது நிறுவனங்களிடம் என் உடல் நிலை, குடும்ப நிலை குறித்தும் பல மகஜர்கள் கையளித்தும் உள்ளேன், இதுவரை எவ்வித பலனும் ஏற்படவில்லை. எனது பிள்ளைகளின் கல்விச் செலவிற்கான பணம் என்னிடம் தற்போது இல்லை. எங்களிடம் இருந்த எஞ்சியுள்ள நகைகளை விற்று ஒரு சிறு கடையை எமது தற்காலிக வீட்டில் போடும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளேன்.

## சி.சுந்தரலிங்கம்

இங்கு மிக நெருக்கமாகத் 55 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. குடிதண்ணீர் வசதி கஷ்டம். 55 வீட்டிற்கு 6 கிணறுகள் தான் கட்டப்பட்டுள்ளன. இதனால் பாதிப்புற்றவர்கள் அவசர தேவைகள் நிமிர்த்தம் குளிக்கவோ கழுவவோ பெரும் கஷ்டப்படவேண்டியுள்ளது.

எமக்கு நிரந்தர வீடுகள் கடற்கரையில் இருந்து 7 மைல் தொலைவில் கற்கோவளத்தில் தருவதற்கான முயற்சிகளில் சில நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. வலிகாமம் வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர் அங்கு செல்ல விரும்பவில்லை. அதேபோல் தான் அவ்விடத்திற்கு நானும் செல்லமாட்டேன்.

**சிங்கராசா அன்ரன் ஜீவா** (வயது - 40)



**6 பிள்ளைகள், கடற்றொழில், சொந்த இடம் சேந்தான்குழம், இளவாலை தற்காலிக இடம் திக்கம் இடைத்தங்கல் முகாம்**

பல்வேறு இடப்பெயர்வுகளையும் இன்னல்களையும் சந்தித்து தற்போது திக்கம் இடைத்தங்கல் முகாமில் உள்ளோம். இதுவரை 20 தற்காலிக வீடுகளில் வாழ்ந்துள்ளோம். கடந்த வருட இறுதியில் ஆழிப்பேரலையின் அனர்த்தத்தினால் எனது கடற்றொழில் எஞ்சின் மோட்டர் உபகரணங்கள் உட்பட 3 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை இழந்துள்ளேன்.

ரூபா 2500 அரசநிவாரணம் ஒரு தடைவையும் ரூபா 5000 இரு தடைவையும் தந்துள்ளார்கள். மேலும் எமது நிவாரண முத்திரைகளில் 4000 ரூபா பெறுமதியான முத்திரை வெட்டியுள்ளார்கள். அதற்கான நிவாரணம் தரப்படவில்லை. நாமும் நிவாரணத்துக்காக எமது பகுதிக் கிராம சேவகர், உதவி அரச அதிபர் முதல் திரிந்ததுதான் மிச்சம். அதற்கான பதிலும் இல்லை; நிவாணரமும் இல்லை. எமது நிலையில் இப்படியும் நடக்கின்றது.

தற்போது உள்ள இந்த இடைத்தங்கல் முகாம் ஆறு மாதம் தானாம். அதனால் எம்மால் எந்தவித திருத்தங்களும் செய்யமுடியவில்லை. மண்ணிற்குள்ளும் புழுதிக்குள்ளும்தான் காலந்தள்ள வேண்டியுள்ளது. சொந்தக் காணி உள்ளவர்களுக்குத்தான் நிரந்தர வீடுகள் கட்டித் தருவார்களாம். எம் போன்ற முகாமில் உள்ளவர்களிடம் சொந்தக் காணி வாங்கும் அளவிற்குக் காசு இல்லை. எப்படித்தான் வாழப்போகின்றோமோ தெரியவில்லை.

இடைத்தங்கல் முகாமில் சுகாதார வசதிகள் இல்லை. எந்தச் சுகாதார அதிகாரிகளும் எமது வீட்டுச்சூழலைப் பார்வையிடுவதில்லை. பாம்புப்புற்று, நுளம்பு, கொசு போன்ற சுகாதாரச் சீர்கேட்டுடன் தான் வாழ்கின்றோம்.

தற்போது ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற ஒவ்வொரு வீடுகளிலும் போதிய தளபாடங்கள், போதிய உலர் உணவுகள், போதிய உடுபுடைவைகள் வீட்டில் வைக்க முடியாத அளவிற்குக் குவிந்துள்ளன. ஆனால், பாதிப்புற்ற மக்களிடம் தங்கள் கையில் காசுதான் இல்லை.

நான் கட்டுமரத்தில்தான் கடற்றொழில் செய்து வந்தேன். கடற்றொழில் சேத விவரப்பட்டியலில் என் பெயரும் உள்ளது. ஆனால், இதுவரை எனக்கு கடற்றொழில் உபகரணங்கள் எதுவும் கிடைக்கவில்லை. எனது கட்டுமரம் சேதமடையவில்லை. ஆனால், உபகரணங்கள் இல்லாமையால் நான் கடற்றொழில் செய்யமுடியவில்லை.

எனது பிள்ளைகளைப் படிப்பிக்க விரும்பி பாடசாலைகளுக்கு அனுப்பிவருகின்றேன். ஒருவரை இளவாலையில் உள்ள ஹென்றியரசர் பாடசாலையில் சேர்த்துள்ளேன். அவருக்கு ஒரு மாதம் போடிங், சாப்பாடு, கைச்செலவு உட்பட 3000 ரூபா கட்டவேண்டும். இது கட்டத் தற்போது என்னிடம் பண வசதியில்லை. எனவே, அவரை நாம் அப்பாடசாலையில் இருந்து வெளியே எடுக்கப் போகின்றோம். பிள்ளைகளுக்குப் பாடசாலை செல்ல சைக்கிள் வசதிகள் இல்லை. நாம் கஷ்டப்பட்டும் பிள்ளைக்குக் கல்வி கற்பிக்கவே விரும்புகின்றோம். எல்லா நிறுவனங்களும் பொருள்கள், உலர் உணவுப் பொருள்களாகவே தருகின்றனர். பாதிப்புற்றவர்களின் நிலைக்கேற்றவாறு பொருளோ பணமோ கொடுத்து உதவினால்தான் பாதிப்புற்றோர் பயனடைவார்கள் என்பது என் அபிப்பிராயம். தற்போது மீனவ நிவாரண முத்திரை நிறுத்தப்பட்டுள்ளது எமக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தொழிலுக்கு ஏற்றவாறான இடத்தில்தான் நிரந்தர வீடு அமையவேண்டும். தற்போது நிறுவனங்கள் கற்கோவளம் புனித நகரில் அமைக்கவுள்ள நிரந்தர முகாம் எமக்கோ எமது தொழிலுக்கோ ஏற்றதல்ல.

எனவே, இதைத் தவிர்த்து, உயர்பாதுகாப்பு வலயத்திற்குச் சமீபமாக உள்ள வலிகாமப் பிரிவில் உள்ள சித்திரமேழி என்னும் கிராமத்தில் போதிய தனியார் காணிகள் உள்ளன. அவைகளை நாம் கடன்பட்டாவது விலை கொடுத்து வாங்கத் தயார். அவ் விடங்களில் இந்த நிறுவனங்கள் எமக்கு நிரந்தர வீடு கட்டித்தந்தால் எமது தொழிலுக்கும் எமது அபிவிருத்திக்கும் பேருதவியாக இருக்கும்.

இதன்மூலம் வலிகாமத்தில் இருந்து இங்கு வந்துள்ள மக்களுக்கு மீண்டும் தமது சொந்த இடங்களில் இருக்கின்றோம் என்ற சந்தோஷமும் சொந்த வீட்டில் இருக்கின்றோம் என்ற நிம்மதியும் ஏற்படும்.

**எம்.பி .பயஸ் லோகதாஸ்**



**(தலைவர் வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவின் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்)**

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வடமராட்சி கடற்கரையோரப் பிரதேசத்தில் வசித்து வந்தோம். பின்பு 1996 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றோம். பின்பு அங்கிருந்து வந்து வடமராட்சிப் பகுதியில் மீண்டும் சிறிய குடிசை நாமாகவே அமைத்து வசித்து வந்தோம். அவ்வேளை தொழில் எதும் இன்றிப் பெரும் கஷ்டத்தின் மத்தியில் தரும் சிறு நிவாரணத்துடன் வாழ்ந்து வந்தோம்.

அப்படியான நேரத்தில் திடீர் என்று கடல் அனர்த்தத்தால் நாம் வசித்து வந்த குடிசை முதல் யாவும் அழிந்து, இருக்க இடம் இன்றி உறவினர் வீடுகளிலும் பாடசாலைகளிலும் இந்தோம். பின்பு சிறிய காணியில் இடைத்தங்கல் முகாம் அமைத்து வசிக்கிறோம். அங்கு வீடுகள் நெருக்கடியாக உள்ளதால் சுகாதார வசதியில்லை. படிப்பதற்கு வசதியில்லை. கிணறு வசதியில்லை.

இவ்வாறான பல சிரமங்களின் மத்தியில் நாம் வசிக்கின்றோம். அத்துடன் கிடைக்கும் நிவாரணப் பொருள்கள் பற்றாக்குறையாகவும் உள்ளன. கடற்றொழில் உபகரணங்கள் யாவும் அழிந்துள்ளதால் வருமானம் இன்றி மிகவும் துன்பமான நிலையாக உள்ளது. தொழில் செய்வதற்கு உபகரணம் கிடைக்காதவர்கள் மிகவும் கஷ்ரப் படுகிறார்கள்.

நாம் நிரந்தர வீடு அமைப்பதற்கு எமக்குச் சொந்தமான காணியில்லை. இரவல் காணியில் நிரந்தர வீடு அமைக்க முடியாது உள்ளது. எனவே, நாங்கள் நிரந்தர கடற்றொழிலுக்கு ஏற்ற இடத்தில் வீட்டை அமைத்து இருப்பதற்கு எமக்கு புனிதநகர் மற்றும் காற்றாடிப் பகுதியில் ஒழுங்கமைத்து அங்கு குடியமர்த்துவது நல்லது.



**solidar** ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH | Norwegian People's Aid

**An INGO consortium including NPA, SAH and ASB**

The Solidar Group is an alliance of Humanitarian NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB Sri Lanka, a German-based rehabilitation and development INGO, is committed to rebuilding seven villages in the North-East in the districts of Jaffna and Mullaitivu as part of its Phase III Post-Tsunami Reconstruction Plan.

Solidar is now recruiting for a range of positions to assist in the administrative and organisational responsibilities that must necessarily form an integral part of such large-scale rehabilitation work. We are currently seeking experienced individuals for the following positions:

**OFFICE MANAGER:**

Reporting to the Head of office, this position is responsible for all aspects of the day to day management of the ASB/ SOLIDAR offices in Kilinochchi, including administration, finance and personnel departments. This position would suit a highly qualified professional with significant previous experience and a proven track record of managing office systems and staff in a busy NGO environment. In addition the successful candidate will be expected to take the lead in implementing new office procedures and routines aimed at strengthening the overall efficiency and performance of the office. Fluent written spoken Tamil and English language is essential as is advanced IT skills including knowledge of MS Access, Excel and Word.

**HEAD OF ADMINISTRATION:**

Reporting to the Office Manager, this position is responsible for all aspects of the day to day running of the administration department, including responsibility for all administrative and secretarial support, dealing with the public, vehicle passes, staff rosta, duty list, staff management, database management, etc.This position would suit an experienced administrator Fluent written and spoken Tamil and English Language is essential as is knowledge of MS Access, Excel and Word.

**ADMINISTRATION OFFICER:**

Reporting to the head of Administration, this position provides general support to the smooth functioning of the Administration Department. Duties include: managing correspondence, dealing with public enquiries, managing filing, photocopying and other general activities. This position would suit a young motivated individual seeking to gain practical experience of working in a rapidly expanding office/INGO environment. Fluent knowledge of written and spoken Tamil and English and good IT skills, including Word and Excel are required.

**IT/ NETWORK ADMINISTRATOR:**

Reporting to the head of Administration, this position provides general IT support for the smooth functioning of the office and all aspects of the IT systems and the IT network. This position would suit a highly qualified professional with significant previous experience and a proven track record of managing IT & network systems in a busy NGO/ comercial environment. Duties include installation, configuration and management of server and operating systems, problem solving & trouble - shooting of IT systems, providing database and network solutions, and imparting information/ training of end users. Fluent written spoken Tamil and English language is essential as are the appropriate qualifications and experience.

**DEADLINE FOR APPLICATIONS IS JULY 25TH 2005.**

**Interested candidates should kindly submit CVs by email to: stevedurrant2003@yahoo.co.uk**

**Alternatively, please submit applications by mail to: Mrs.Chandra Jesudason, 156, Jaffna Road, Paranthan, Kilinochchi.**

(C/42083)

---

## Immediate Vacancy

**Translator and research assistant (female)**

Swiss Labour Assistance

Applications are requested from experienced women in the field of social sciences. Research and translation.

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in SriLanka comprises of three international NGOs -Arbeiter Samariter Bund(ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assisance (SAH).

The position is based in Kilinochchi. The selected candidate will assist an anthropologist in her research on the conditions of women and related gender issues.

**Other duties will include:**

- Take down minutes of the meetings with women groups and personal interviews.
- Maintain contact with women organizations.

**Required qualifications:**

- Experience in social researches
- Computer skills
- Should be fluent in English and Tamil (Knowledge of Italian or French would be an added advantage).

**Period of contract**

Initially for a period of two months. Extension will be considered based on the performance and the requirement at the time.

Cover letter and curriculum vitae should be addressed to:
Ms.Cristiana Natali, Swiss Labour Assistance,
No.156, Jaffna Road, Paranthan, Kilinochchi.
Deadline for application is 20th July 2005. (C/42078)

**solidar**
**An INGO consortium including NPA, SAH And ASB**

---

ஓம்
ஸ்ரீ ராமஜெயம்

*யாழ்ப்பாணம் - வண்ணை*

ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

ஏகாதசி உற்சவம்

நிகழும் பார்த்திப வருடம் ஆடி மாதம் முதலாம் திகதி இன்று (17-07-2005) ஞாயிறு மாலை 5.15 மணிக்கு ஆலயத்தில் ஏகாதசி உற்சவம் நடைபெறும்.

அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமத் நாராயணன் அருள்பெற்று, ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

*பெருமாள் கோயில்,*
*யாழ்ப்பாணம்.* (சி/42073) (24-18-16) **- ஆதீன மகா சபை.**

---

## *யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்*

### நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2005

**நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் பின்வரும் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலங்களைத் தற்காலிக குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

| | |
|---|---|
| 01. கச்சான் கடைகள் | 05. ஐஸ்கிறீம் கடைகள் |
| 02. மணிக்காப்புக் கடைகள் | 06. ஐஸ்கிறீம் வாகன நிலையங்கள் |
| 03. இனிப்புக் கடைகள் | 07. துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் |
| 04. இதர கடைகள் | 08. விளம்பர முகவர் நிலையங்கள் |

**இதற்கான கேள்வி விண்ணப்பப்படிவங்கள் 18-07-2005 தொடக்கம் 01-08-2005 நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.**

கேள்வி ஏற்றுக்கோள்ளல் 01-08-2005 பிற்பகல் 2.30 மணிவரை.
கேள்வி திறத்தல் 01-08-2005 பிற்பகல் 3 மணி
மீளளிக்கமுடியாத கேள்வி விண்ணப்பப்படிவக் கட்டணம் ரூபா 300.00 (வற் நீங்கலாக)
மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ஐஸ்கிறீம் கடைகள் ரூபா 10,000.00, ஏனைய கடைகள் ரூபா 1,000.00

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் வியாபாரத்தின் தன்மை குறிப்பிடப்பட்டு **மாநகர ஆணையாளர், மாநகராட்சிமன்றம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் / நானாவித இறைவரிப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும்.

கேள்விகள் திறக்கப்படும்போது உரிமையாளர் அல்லது பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்கலாம்.

மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிக்கிளையில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்வதுடன், கடைகளுக்கான வரைபடத்தையும் நேரில் பார்வையிடலாம்.

குறிப்பு: *மேற்படி சபையால் வழங்கப்படும் தற்காலிக கடைகளைத் தவிர, எதிர்வரும் 09-08-2005ஆம் திகதிக்கு முன் விண்ணப்பித்து சபையின் அனுமதி பெற்றிராத எந்தத் தற்காலிக வியாபாரமும் திருவிழாக் காலத்தில் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.*

மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்.
(சி/42082) (24-18-16)

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

---

# STUDY IN LONDON
## MALAYSIA & INDIA

**Why COLLEGEVIEW?**

- மும்மொழிகளிலுமான இலவச ஆலோசனை சேவைகள்
- ஆண்டு முழுவதுமான விண்ணப்ப நடைமுறைகள்
- விரைவான பல்கலைக்கழக அனுமதி • நூற்றுக்குமதிகமான தரமான பல்கலைக்கழகத் தெரிவுகள • பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு வசதிகள் • பதிவு செய்யும் சகல மாணவர்களுக்கும் இலவச ஆங்கில வகுப்புக்கள் • வெளியிட மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் • சர்வதேச தரத்திலான ஆலோசனை சேவைகள்
- பகுதிநேர வேலைவாய்ப்புகளுக்கான ஏற்பாடுகள் மேலும் பல சேவைகள்.......

**Basic Qualifications G.C.E. (O/L) Pending A/L results also may apply**

**1000 £ Scholarship for UK University**



***Available Courses***

*Management, Business Ad. (BBA, MBA, Phds), Marketing, HRM, Accounting, Finance, Economics, Law, Computer Science, IT Networking, Pattern Designing & Textile, Hotel Management, Travel & Tourism, Engineering (Aerospace, Electrical & Electronical etc..,) Medicine, Dental, Fine Arts, Beauty Culture, Shipping Courses, Nursing ...*
**All Courses are available in any field.**

September Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**COLLEGEVIEW International**
*(Professional Overseas Educational Consultants & Promoters)*
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo 06, Sri Lanka.
Tel : 0094 114 512175 Fax : 0094 112 732294
E-mail : collegeview@visualnet.lk
Mr. A.R.M.Mubarack:0773 113156 Mr. Hassan Mubarak:0714 90967
*Yes, we show you the path*
(Next to Wellawatta Police Station)

# தமிழர் பிரதேசத்தின் வீழ்த்தப்படும் கல்வி – 2

# வரலாற்றுப் பாட நூல்களில் தமிழர் வரலாறு இருட்டடிப்பு!

## தமிழின அடையாளத்தை வேரறுக்கும் திட்டமிட்ட சதி என்கிறார் இளங்குமரன்



*இந்த நாட்டில் காலத்துக்கு காலம் ஆட்சிப்பீடம் ஏறிய அரசுகள் தமிழர் கல்வியை திட்டமிட்ட முறையில் புறக்கணித்தே வந்திருக்கின்றன.*

*இவ்வாறான அரசுகளின் கல்விப்புறக்கணிப்புத் தொடர்பாக ஒருசில செயற்பாடுகளே நேரடியாக வெளித்தெரிந்தன. ஆனால், தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஆப்பு வைக்கின்ற பல செயற்பாடுகளை மறைமுகமாக - வெளித்தெரியாத வகையில் - சிங்கள அரசுகள் மேற்கொண்டு வந்திருக்கின்றன; இப்போதும் மேற்கொள்கின்றன.*

*இந்த நிலையில் தமிழர் கல்வி எந்தெந்த வகையில் புறக்கணிக்கப்படுகிறது, ஒடுக்கப்படுகிறது என்ற விடயங்கள் தொடர்பாக தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் உதயனுக்கு வழங்கிய சிறப்புச்செவ்வி இது.*

*தமிழர் தாயகத்தின் கல்விநிலை விழ்ச்சியடைந்து கொண்டு செல்வதற்கான காரணங்களை தகுந்த ஆதாரங்களுடன் - புள்ளி விவரங்களுடன் விவரிக்கிறார் இளங்குமரன். இவரது செவ்வியின் முற்பகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயனில் வெளியாகியிருந்தது.*

**கேள்வி:-** ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய கல்விசார் துறைகளில் தமிழர்கள் போதியளவில் இருக்கிறார்களா...?

**பதில்:-** ஆசிரியர் நியமனங்களில் மட்டுமல்ல கல்விப்புலம் சார்ந்த ஏனைய அதிகாரிகள், அலுவலர்கள் மட்டத்திலான நியமனங்களில்கூட தமிழினம் அரசுகளினால் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றது.

இலங்கை பூராவும் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பது கல்வி அமைச்சுதான். மத்திய கல்வி அமைச்சின் கீழ்தான் தமிழர் தாயகம் உட்பட நாட்டின் சகல பகுதிகளுக்குமான கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அந்த மத்திய கல்வியமைச்சுக்குக் கீழ் பணியாற்றுகின்ற அலுவலர்கள், அதிகாரிகள் என ஆயிரத்து 200 பேர் இருக்கின்றனர். அவர்களில் ஆயிரத்து 150 பேர் சிங்களவர்கள். மிகுதி 50 பேரில் 30 பேர் முஸ்லிம்கள். 20 பேர்மட்டுமே தமிழர். இதனை வீதாசார அடிப்படையில் பார்த்தால் 96 வீதம் சிங்களவர். 2.5 வீதம் முஸ்லிம்கள். 1.6 வீதம் தமிழர்கள். கல்விசார்ந்த சகல விடயங்களும் மத்திய அமைச்சின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்ததால் தமிழ் ஆசிரியர்களோ, அலுவலர்களோ அங்குசென்று தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய சந்தர்ப்பம் - சூழ்நிலை அங்கு இருக்கவில்லை.

கல்வி நிர்வாக சேவை அலுவலர்களைப் பொறுத்தவரையில் (S.L.E.A.S) அந்தச் சேவைப் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்தே எங்களுக்குப் பற்றாக்குறைதான் நிலவுகிறது.

மாகாணக் கல்வித் திணைக்களங்கள், மாகாணக் கல்வி அமைச்சுகள், வலயக் கல்விப் பணிமனைகள், கோட்டக் கல்விப் பணிமனைகள் போன்றவற்றை நிர்வகிப்பவர்கள் கல்வி நிர்வாக சேவை அலுவலர்கள்தான்.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரையில் கல்வி நிர்வாக சேவை தரம் I இல் 31 பேர் தேவையாக இருக்கின்றனர். ஆனால், ஒருவர் மட்டுமே இருக்கிறார். தரம் II இல் 125 பேர் தேவை; 49 பேர் இருக்கின்றார்கள். தரம் III இல் 460 பேர் தேவை. 77 பேர் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக 618 பேர் தேவையாக இருக்கின்றபோது 127 பேர் இருக்கின்றார்கள். இது ஏறக்குறைய 80 வீதப் பற்றாக்குறை.

**கேள்வி:-** கல்வி நிர்வாக சேவை அலுவலர்களின் பற்றாக்குறை பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளை எவ்வாறு பாதிக்கும் என்று கூறுவீர்களா?

**பதில்:-** கல்வி நிர்வாக சேவை நிர்வாகங்களில் எங்கு பற்றாக்குறை இருந்தாலும் அது ஒட்டுமொத்த கல்விச் செயற்பாட்டைப் பாதிக்கும். மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித்திணைக்களம், மேலதிக மாகாணக் கல்வித் திணைக்களம், கல்வி வலயங்கள் போன்றவற்றில் இருக்கின்ற பணிப்பாளர்கள், நிர்வாகப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர், திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் முக்கிய பாடங்களுக்கான பணிப்பாளர்கள் போன்றோர் கல்வி நிர்வாக சேவை அலுவலர்களாகவே இருக்க வேண்டும்.

அப்படியிருக்க, தமிழர் பகுதிகளில் இத்தகைய அதிகாரிகள், அலுவலர்கள் போதியளவில் நியமிக்கப்படவில்லை.

உதாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தில் 15 பேர் வரையில் தேவையாக இருக்கின்ற போதிலும் தரம் III ஐச் சேர்ந்த ஒருவர் மட்டுமே அங்கு இருக்கிறார்.

அப்படியான வெற்றிடங்களுக்கு பாடசாலை அதிபர்களே நிறைவேற்று அலுவலர்களாகக் கடமையாற்றுகின்றார்கள்.

அவர்களுக்கு உரிய பயிற்சியோ அனுபவமோ இல்லாத நிலை இருக்கிறது.

அதனால் இங்கு நிர்வாகம் திறைமையாக இயங்க முடியாமல் இருக்கின்றது. இதுஒருபுறமிருக்க அனுபவமிக்க அதிபர்கள் கல்வி வலயங்களுக்கு அதிகாரிகளாகச் சென்று விடுவதால் அந்தப் பாடசாலைகளில் உரிய தகைமையற்றவர்கள் அதிபர்களாக நியமிக்கப்படும்போது பாடசாலைச் செயற்பாடுகளும் மந்தமடைகின்றன.

சேவைக்கால ஆலோசகர்கள் போதியளவில் இல்லாததால் பாடரீதியாக பாடசாலை ஆசிரியர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள், பயிற்சிகள் என்பவற்றை வழங்கமுடியாமல் இருக்கிறது.

இதனால் எமது கல்வி நிலைமை மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்து செல்கிறது. கல்வி அமைச்சின் பத்தரமுல்லையிலுள்ள அலுவலகத்தில் 374 பேர் கடமையாற்றுகின்றனர். அவர்களில் 338 பேர் சிங்களவர். 25 பேர் முஸ்லிம்கள். 13 பேர் தமிழர்.

இப்படித்தான் கல்விப்புலம் சார்ந்த பிரதான அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஆளணி நியமனம் அமைந்திருக்கிறது.

### தேசிய கல்வி நிறுவகத்திலும் போதியளவு தமிழர் இல்லை

**கேள்வி:-** தேசியக் கல்வி நிறுவகத்திலுள்ள குறைபாடுகளால் தமிழ் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைகிறது என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. இதுதொடர்பாக நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:-** கல்விசார்ந்த செயற்பாடுகளில் தேசியக் கல்வி நிறுவகமும் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது. பாடத்திட்டத் திட்டங்களைத் தயாரித்தல், பாடநூல்களைத் தயாரித்தல், கல்விச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருதல், ஆசிரியர்களுக்கான கைநூல்களை வெளியிடுதல், பயிற்சி வழங்கல் போன்ற செயற்பாடுகளைத் தேசியக் கல்வி நிறுவகமே மேற்கொண்டு வருகிறது.

1985 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தேசிய கல்வி நிறுவகம் செயற்பட்டு வருகிறது.அன்றிலிருந்து அந்தக்கல்வி நிறுவகத்திலும் தமிழ்மொழி மூலமான ஆளணிப்பற்றாக்குறை நிலவுகின்றது.

கல்வி சார்ந்த அதிகாரிகள் 300 பேர் அங்கு இருக்கிறனர்; அவர்களில் 24 பேர் மட்டுமே தமிழர்கள். உண்மையில் அங்கு தேவையின் அடிப்படையில் பார்த்தால் குறைந்தது 70 தமிழராவது இருக்கவேண்டும்.

அங்கு பாடத்திட்டங்கள், பாடநூல்கள் எல்லாம் சிங்களவர்களாலேயே தயாரிக்கப்படுகின்றன.

சிங்களவர்களின் பிரதேச, மொழி சார்ந்த சூழலுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்படுகின்ற புத்தகங்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்படுகின்ற போது அந்தப் புத்தகங்களிலும் சிங்களக் கலாசாரத்தின் தாக்கம் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், அங்கு பாடநூல்களை சிங்களத்திலிருந்து மொழி பெயர்ப்பவர்கள் குறிப்பிட்ட பாடங்களுடன் தொடர்பற்றவர்களாக - அந்தப் பாடம் சம்பந்தமான அறிவு அற்றவர்களாக - இருப்பதனால் புத்தகத்தில் பொருத்தமற்ற விளக்கங்களும் மயக்கமான கருத்துகளும் இடம்பெற்று விடுகின்றன. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் பெரிதும் குழப்பமடைகின்றனர்.

இந்தக்குறைபாடுகள் ஒருபுறம் இருக்க தேசியக் கல்வி நிறுவகத்தில் கல்விசாரா அலுவலர்களாக கடமையாற்றும் 300 பேரில் ஆக 6 பேர் மட்டுமே தமிழர்களாக இருக்கின்றனர். இது வெறும் 2 வீதம் மட்டுமே. தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் பயிற்சிச் சான்றிதழ்கள் உரியமுறையில் நேரகாலத்துடன் அங்கிருந்து அனுப்பி வைக்கப்படுவதில்லை. இதனால் ஆசிரியர்கள் சம்பள உயர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கின்றார்கள்.

*1971 - 1979 காலப் பகுதியில் வழங்கப்பட்ட 59 ஆயிரத்து 92 ஆசிரியர்கள் நியமனங்களில் 4 ஆயிரத்து 596 பேர் மட்டுமே தமிழர்கள். இது வெறும் 7.7 வீதம் மட்டுமே.

*சிங்களப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்க தமிழ்ப் பிரதேச பாடசாலைகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

*மத்திய கல்வி அமைச்சில் பணியாற்றும் ஆயிரத்து 200 அலுவலர்களில் 20 பேர் மட்டுமே தமிழர். 1150 பேர் சிங்களவர், 30 பேர் முஸ்லிம்கள்.

*வடக்கு - கிழக்கில் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் 618 பேர் தேவை. 127 பேரே இருக்கின்றனர். இதில் 80 வீதப் பற்றாக்குறை நிலவுகிறது.

*பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சு அலுவலகத்தில் 374 பேர் கடமையாற்றுகின்றனர். அவர்களில் 13 பேர் மட்டுமே தமிழர்கள். 338 பேர் சிங்களவர், 25 பேர் முஸ்லிம்கள்.

*தேசிய கல்வி நிறுவகத்தில் 600 பேர் கடமையாற்றுகின்றனர். இவர்களில் தமிழர் 30 பேர் மட்டுமே.

*67 பக்கங்கள் கொண்ட வரலாற்றுப் புத்தகத்தில் 667 பிழைகளும், 48 பக்கங்கள் கொண்ட புவியியல் புத்தகத்தில் 319 பிழைகளும், 40 பக்கங்கள் கொண்ட குடியுரிமைக் கல்விப் புத்தகத்தில் 231 பிழைகளும் உள்ளன.

### பாடப் புத்தகங்களில் பிழைகள் தாராளம்!

**கேள்வி:-** பாடநூல்களில் தவறுகள் இடம் பெறுகின்றன என்கிறீர்கள். எத்தகைய தவறுகள் என்று குறிப்பிட்டுக் கூறமுடியுமா?

**பதில்:-** பெரும்பாலான பாடப் புத்தங்களில் ஏராளமான பிழைகள் இடம்பெற்றிருந்தன. குறிப்பாக இந்த வருடம் சமூகக்கல்விப் பாடப் புத்தகத்துக்குப் பதிலாக புவியியல், வரலாறு, குடியியல் போன்ற பாடங்கள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பாடங்களுக்கென புதிதாக வெளியிடப்பட்டிருக்கின்ற புத்தகங்களில் பல தவறுகள் உள்ளன. பாடங்களுக்குப் பிழையான - பொருத்தமற்ற நிறங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

மொழிசார்ந்த வழுக்கள், எழுத்துப்பிழைகள், ஒலிப்பேதங்கள் அனுசரிக்கப்படாமை, புணர்ச்சி வழுக்கள், புணர்ச்சி விதிகள் பின்பற்றப்படாமை, திணை பால் எண் இடவழுக்கள், வாக்கிய இயல்புகள் பின்பற்றப்படாமை, சொற்களுக்கிடையிலான இடைவெளிகள் பொருத்தமுற அமையாமை, அசைப்பிரிப்புமுறை அனுசரித்து எழுதப்படாமை, நிறுத்தல் குறியீடுகள் பயன்படுத்தப்படாமை, நிறுத்தற்குறிப்புகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமை மொழிச் செழுமையின்மை, கருத்து மயக்கம் தரும்வாக்கியங்கள் என பல்வேறு வகையான பிழைகள் நூல்களில் உள்ளன.

இவற்றைவிட பெயர்கள் தவறாகப்பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக தரம் 7 வரலாற்றுப் புத்தகத்தில் மன்னர்களின் பெயர்கள் ஒரேஅலகில் ஒரே பக்கத்திலேயே தவறாக - வேறுபட்டதாக - அமைந்திருக்கின்றன.

67 பக்கங்கள் கொண்ட தரம் 7 வரலாறு புத்தகத்தில் 667பிழைகளும் 48 பக்கங் கொண்ட புவியியல் புத்தகத்தில் ...பிழைகளும் 40 பக்கங்கள் கொண்ட குடியுரிமைக் கல்விப் புத்தகத்தில் 231 பிழைகளும் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றைவிட படங்களும் அவற்றுக்கான குறிப்புகள், குறியீடுகள் என்பனவும் தமிழ்ப்புத்தகங்களிலும் சிங்களப்புத்தகங்களிலும் வித்தியாசமான அளவுகளில் போடப் பட்டிருக்கின்றன.

உதாரணமாக, சிங்களப் புத்தகத்தில் முழுப்பக்கத்தில் போடப்பட்டு அவற்றின் விளக்கங்கள் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கின்ற படங்கள் தமிழ்ப்புத்தகத்தில் மிகவும் சிறிய இடத்தில் - 8 மடங்கு சிறியதாக போடப்பட்டுள்ளன. அந்தச் சிறிய இடத்துக்குள் போடப்பட்டு படவிளக்கங்கள் மிகக் குறுகிய எழுத்தில் - மாணவர்களால் மட்டுமன்றி ஆசிரியர்களாலும் கூட வாசித்து அறிய முடியாத நிலையில் - எழுதப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு தரம் 9 வரலாறுப் புத்தகத்தில் இத்தகைய 56 படங்கள் சிங்களப் புத்தகத்திலும் தமிழ்ப் புத்தகத்திலும் மாறுபாடாக அமைந்திருக்கின்றன. இந்தத் தவறுகள் எல்லாம் தவறுதலாக - தெரியாத்தனமாக - இடம் பெற்றவையல்ல. மாறாக, தமிழ்ப்பிள்ளைகளின் கல்வியை வேண்டுமென்றே பாழடிக்க வேண்டும் என்பதற்காக - திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

### வரலாற்றுப் பாட நூல்களில் தமிழர் வரலாறு இருட்டடிப்பு!

**கேள்வி:-** வரலாற்றுப் பாட நூல்களில் இடம்பெறுகின்ற பூர்வீக வரலாறுகளில் - சான்றாதாரங்களில் ஏதேனும் பிழைகள் இருக்கின்றனவா?

**பதில்:-** ஆம், ஏராளமாக இருக்கின்றன. வரலாற்று நூல்களில் தமிழர் வரலாறு திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கிறது; மாற்றி எழுதப்பட்டிருக்கின்றது. மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு - இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தம் என்பதைக் காட்டுவதற்காக - தங்களுடைய வரலாற்றை மையப்படுத்தி, தமிழர்களின் வரலாற்றை மறைத்து வரலாற்றுப் பாடநூல் எழுதப்பட்டிருக்கிறது. தமிழர் வரலாறுகள் உயர்வாக வரக்கூடிய பகுதிகள் பாடத்திட்டத்துக்குள் வருவதே கிடையாது. எந்த வரலாற்றுப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாலும் 2 ஆயிரத்து 500 ஆண்டு கால வரலாற்றைப் பற்றி எழுதப்பட்டிருந்தால் அந்தக் காலங்களைப் பற்றி முழுமையான தகவல்கள் வராது. சிங்கள மன்னர்கள் ஆளுமையுடன் இருந்த காலங்களைப் பற்றித்தான் வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பாண்டுகாபயன், தேவநம்பியதீசன், துட்டகைமுனு, காசியப்பன், தாதுசேனன் போன்ற மன்னர்களைப் பற்றி விட்டு விட்டு வரலாறு தரப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 500 ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான மன்னர்கள் இலங்கையை ஆண்டிருக்கிறார்கள். அவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரது வரலாறுகளே இடம்பெற்றிருக்கின்றன.

அவர்களின் வரலாறுகளிலும் சில தகவல்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக முதலாம் பராக்கிரமபாகு ஒரு தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவன். அந்தச் செய்திகள் எல்லாம் பாடப் புத்தகங்களில் வரவில்லை.

தமிழருக்கு இந்த மண்ணில் உரிமையில்லை.அவர்களுக்கு வரலாறே கிடையாது என்ற தமது பொய்ப் பிரசாரத்தை ஆதாரப்படுத்துவதற்காகவே சிங்களவர்கள் இத்தகைய வரலாற்று நூல்களை எழுதியுள்ளனர்.

தேரவாத பௌத்த கருத்துக்களே வரலாறாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவை உண்மைக்கு முற்றிலும் மாறானவை.

**செவ்வி - அற்புதன்**

2500 ஆண்டுகால இலங்கை வரலாற்றில் அனுராதபுர வரலாற்றைப் பற்றியே அதிகம் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அனுராதபுரம் இலங்கை முழுவதற்கும் சேர்ந்த அரசல்ல. அனுராதபுர காலத்தில் நாகதீபத்திலும் (யாழ்ப்பாணம்), மாந்தையிலும் றோகனத்திலும், களனியிலும் தனித்தனி அரசுகள் இருந்திருக்கின்றன. ஆனால், அந்த அரசுகளைப் பற்றிய தகவல்களை விளக்கமாகச் சொல்லப்படவில்லை. அந்தப் பகுதிகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, இதனை இலங்கை வரலாறு என்று சொல்லமுடியாது. இது உள்நோக்கத்துடன் எழுதப்பட்டது.

தமிழர்களிடமிருந்து தாதுசேனன் ஆட்சியைக் கைப்பற்றிய காலத்திலேயே மகாவம்சம் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் காலத்தில் நூலை எழுதியவர்கள் தங்களுடைய உணர்வுகளை மையமாகக் கொண்டு- சிங்கள, தமிழ் வேறுபாடுகள் ஏற்படுகின்ற வகையிலேயே எழுதியிருக்கின்றார்கள். தேரவாத பௌத்தத்தைப் பற்றிய கருத்தே அதில் இடம்பெறுகிறது. எனவே, அது வரலாறாக வரும்போது இனமுரண்பாட்டை வளர்ப்பதற்கும் அதுவே ஏதுவாக இருந்து விடுகிறது.

(வளரும்)

solidar ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. Swiss Labour Assistance SAH Norwegian People's Aid

**An INGO consortium including NPA, SAH and ASB**

The Solidar Group is an alliance of Humanitarian NGOs, including Norwegian People's Aid (NPA), Swiss Labor Assistance (SAH) and ASB Sri Lanka, a German-based rehabilitation and development INGO, is committed to rebuilding seven villages in the North-East in the districts of Jaffna and Mullaitivu as part of its Phase III Post-Tsunami Reconstruction Plan.

Solidar is now recruiting for a range of positions to assist in the socio-economic mobilization and community development activity that must necessarily form an integral part of such large-scale rehabilitation work. We are currently seeking experienced individuals for the following positions:

**Project manager for Agriculture /Natural resources**

**Overall responsibilities:**

Develop and incorporate strategies in the overall program to ensure that aspects of food/nutritional security and environmental sustainability are fully addressed.

**Specific duties:**

Home garden/Nutritional security

- Supervise, monitor and analyse the Nutritional Security / Home garden Projects conducted by TECH and RRI.
- If appropriate develop strategies to improve and expand the Nutritional Security / Home garden Projects to a wider public as well as analyzing the opportunities to expand to landscape gardening and environmentally valuable plants (greenbelt for physical protection, firewood, nitrogen fixing plants).

Other aspects of food security and natural resource management

- In close cooperation with the community development expert ensure that food security and environmental aspects are incorporated in the overall community development planning.
- Exploit opportunities for income generation through village based nurseries in non-tsunami areas promoting a balanced approach. Identify other opportunities to develop the agricultural sector in relevant communities (Gardening, livestock, forest resources) based on the PNA.
- Analyze and explore opportunities for improved natural resource management, including improved waste management and alternative energies.
- Identify training needs at partner organizations and develop proposals how to address these. Provide continuous on-the-job-training in technical aspects as well as methodology.
- Provide monthly progress reports.

**Community Development Officers**

Experienced personnel are required to help take the lead in the planning, implementation and management of Solidar's social mobilization, community development and capacity building activities with the local tsunami-affected population and their community and village-based groups.

A proven track record of working with local communities in the North-East is required, as is an ability to speak fluent Tamil and English Language.

**Social and Economic Mobilization Officers**

Experienced personnel are required to undertake the day-to-day village based community planning, awareness raising and livelihoods development activity as well as enabling the successful village participation in the physical reconstruction process itself.

Experience in the areas of fishing, sustainable livelihoods, gender enterprise development and cooperatives development is sought. Experience of working with local communities in the North-East is required, as is an ability to speak fluent Tamil and English Language.

**Monitoring & Evaluation officer**

Main responsibility: Design and maintain the Solidar database to be used as effective management tool throughout the project cycle (Management Information System).

**Specific duties:**

- Developing a computerized database based on the needs of the respective programs/ sectors. The system should include
  - o baseline data for planning
  - o set-out targets (indicators) to measure project progress
  - o activity details (e.g. individual housing MOU's – details, training courses, participants, allocation of loans or other livelihood support etc..)
  - o Indicators to assess impact (negative or positive) of project interventions.
- Develop data collection sheets/forms.
- Train and guide field officers in the use of forms and updating the database as well as how to obtain information from it.
- Provide monthly reports providing the relevant information on the project progress.

**DEADLINE FOR APPLICATIONS IS JULY 25TH 2005.**

Please contact: stevedurrant2003@yahoo.co.uk

**Alternatively please send to:**

**Harshi Gunawardena**
**Solidar- Office**
**2 Jawatta Ave**
**Colombo 07**

or

**Mrs. Chandra Jesudason**
**Solidar – Office**
**156 Jaffna Road**
**Paranthan - Kilinochchi**



## தேவை

யாழ்.நகர்ப்புறத்திற்கு அண்மையில்
800-1200 சதுரஅடி பரப்பளவுடைய கட்டடம்
அல்லது 3 அறைகள் உள்ள வீடு, தனியார்
நிறுவனமொன்றுக்கு வாடகைக்குத் தேவை.

(37814) தொடர்பு: 0777 250904 (39-21-16-18)



## மதினாஸ் (Medinas)

(வெளிநாட்டு வேலைவாய்ப்பு)
வீட்டுப் பணிப்பெண்கள்
அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்
சவூதி அரேபியா
குவைத் – டுபாய்
லெபனான் – யோர்தான் – கட்டார்
சிங்கப்பூர் – மலேசியா (இன்னும் பல நாடுகள்)

பாஸ்போட் இல்லாதவர்களுக்கு பாஸ்போட் எடுப்பதற்குரிய செலவுகள் கொடுக்கப்படும்.

வெளியிடங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடவசதி, சாப்பாடு வசதிகள் இலவசமக செய்து கொடுக்கப்படும்

மற்றும் மெடிக்கல், ரெயினிங் இலவசம்
தமிழ் பேசும் எங்கள் உத்தியோகத்தர்கள் உங்களுக்கு தேவையான உதவிகள் செய்ய காத்திருக்கிறார்கள்
மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**Medinas.**
**57, Galle Road,**
**Bambalabitiya , Co-4**
(பாஸ்போட் அலுவலகத்திற்கு முன்பாக)
**T.P: 5365833/4**
**0777236333**
**0722244785**
E.Mail: rohan@lgo.lk


## 15ஆம் நாள் நினைவினில்...

| பிறந்தது | | மறைந்தது |
|---|---|---|
| 13 - 07 - 1930 |  | 03 - 07 - 2005 |

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த
**அமரர் சின்னப்பு கதிரிப்பிள்ளை**
(முன்னாள் சாரதி, காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம்)

என் வாழ்வின் அத்திபாரமாய்
கண்கண்ட தெய்வமாய் நீங்களும்
அன்னையாய் மாமியும் மகளாக என்னை
எடுத்து கல்வி புகட்டி மணமும்
புரிந்து வைத்தீர்- உங்கள் ஆவி
பிரிந்த செய்தி அறிந்தும் கலங்கி
நினைவிழந்தோம் மாமா உடனிருந்து
ஒரு வார்த்தை கேளாத தூரத்தில்
தனி இருந்து கலங்குகிறோம் -இனி
எப்போ காண்போம் மாமா?

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்:
மனோ, தேவா, மதனிகா
(சுவிஸ்)

அச்செழு,
நீர்வேலி.
(37796)(39-21-16-18)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நவரத்தினம் (குட்டி)



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முடமாவடியில் வசித்து தற்போது கனடாவில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி நவரத்தினம் (குட்டி) அவர்கள் 14.07.2005 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும் குணபாலன், தனபாலன், தனலஷ்மி, மேரிலைலா, கீர்த்தி சிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கமலகுமாரி, செல்வமணி, சுந்தரலிங்கம், சேவியர், சாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சித்திரா, பவித்திரா, சமித்திரா, டயான், இந்துஜா, பிரதீபா, லக்னேஸ், கபில்யா, ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.07.2005) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (37836)

முடமாவடி, நல்லூர். (21-16-18-24)

தகவல்:
மக்கள் - மருமக்கள்.

# போரைத் தொடங்கும் பழியை புலிகள் மீது சுமத்த ஸ்ரீலங்கா அரசு முயற்சிக்கின்றது

## புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,ஜுலை17

சிங்கள அரசு போரைத் தொடங்கும் பழியைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலையில் சுமத்தும் வகையில் செயற்படத் தொடங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளரும் மூத்த தளபதியுமான ச.பொட்டம்மான் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் தளபதியான லெப்டினன்ட் சீலனின் இருபத்தியிரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு போராளிகள் மத்தியில் சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

லெப்டினன்ட் சீலனின் நினைவுநாள் எமது விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு தாக்கங்களை நிகழ்த்திய, பல்வேறு வெற்றிகளைப் பெற்றுத்தந்த, படையணியின் எழுச்சி நாளாகவும் இடம்பெறுகிறது. இந்த வேளையிலே எமது விடுதலைப் போராட்டம் எத்தகையதொரு தளபதியைக் கொண்டிருந்தது என்பதை நினைவுகொள்ளும் நாளாகவும் இன்றைய நாள் அமைகிறது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாள்களிலே தலைவருக்கு எதிராக நிகழ்ந்த பல்வேறு சதிகளை வெல்வதற்குத் தளபதி சீலன் எவ்வளவு முனைப்புடன் செயற்பட்டான். அத்துடன், தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவதிலும் உறுதியுடன் நின்றான்.

அண்மையில் எமது விடுதலைப் போராட்டம் சந்தித்த மிகக் கசப்பான பக்கங்களான துரோகங்கள் பற்றிய விடயங்களைத் தலைவருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது தலைவர் கூறினார், இன்று நாம் கருணா என்ற துரோகியின் பக்கத்தைப் பார்க்கிறோம். இந்தத் துரோகங்களுக்கெல்லாம் சிகரம் வைத்த பல துரோகங்களை எமது விடுதலைப் போராட்டம் சந்தித்துள்ளது.

இன்று விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்த நிலையில் எமது இயக்கம் ஒரு மரபு வழி இராணுவமாக முதிர்ச்சியடைந்த நிலைவரம், நாம் முழுத்தாயகத்திலும் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சியடைந்த நிலைமை. ஆனால், வளர்ச்சியையே சந்தித்திருக்காத விடுதலைப் போராட்டம் முகிழ்த்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் துரோகங்கள் நிகழ்ந்தன.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பத்தில் துரோகங்கள் வென்றிருந்தால் முழு விடுதலைப் போராட்டமும் அழிந்திருக்கும் வாய்ப்பிருந்தது. ஆனால், இன்று துரோகங்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியளவிற்கு இருக்கலாமே தவிர, துரோகங்களை எதிர்கொள்வதற்கும் வெல்வதற்குமான வலிமையை எங்கள் இயக்கம் பெற்றுவிட்டது.

இந்தநிலையிலே, இயக்கம் ஆரம்பித்த வேளையில் எமது பலம் நிரூபிக்கப்படாத காலத்திலே - மக்கள் மத்தியில் விடுதலைப் போராட்டம் நம்பிக்கை ஏற்படுத்தாத காலத்திலே - நிகழ்ந்த துரோகங்கள் முழு இயக்கத்தையும் விடுதலைப் போராட்டத்தையும் அழித்துவிடும் நிலைமையைக் கொண்டிருந்தன.

அந்தவேளையிலே, தலைமையின் மீதும் விடுதலையின் மீதும் அவாக்கொண்டு கைகொடுத்த - தோள்கொடுத்த - ஒருவனாக நான் சீலனைப் பார்ப்பேன் என்று தலைவர் கூறினார்.

விடுதலைப் போராட்டம் மக்கள் மத்தியில் பெருத்த நம்பிக்கையை ஏற்படுத்தாத அந்தக் காலத்திலே - தனிமனிதர்களாக சிலர் இணைந்து செயற்பட்ட காலத்திலே - விடுதலைப் போராட்டத்துக்குள்ளேயே துரோகங்கள் சார்ந்த அவநம்பிக்கைகள் வந்த வேளையிலே - துரோகத்தை எதிர்க்கத் துணியாமல் பலரும் ஒதுங்கமுற்பட்டவேளையிலே - சீலன் தலைவருக்குத் தோள்கொடுத்த அந்த உறுதிதான் இன்று எமது விடுதலைப் போராட்டமாக வளர்ந்து நிற்பதைக் காண்கிறோம்.

தலைவர் சாள்ஸ் அன்ரனியின் பெயரிலே படைப்பிரிவொன்றை உருவாக்கும் அளவிற்கு, அதுவும் முதலாவது படைப்பிரிவை சாள்ஸ் அன்ரனியின் பெயரிலேயே தொடங்கும் அளவிற்கு சாள்ஸ் அன்ரனியின் உணர்வை அவர் இதயத்திலே வைத்திருந்தார் என்று கூறினால், அது தனியே சாள்ஸ் அன்ரனியின் இராணுவத் திறனுக்காக மட்டுமாக இருக்காதோ என்ற எண்ணம் எமக்கு ஏற்படும்.

எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப் போராட்டமே அழிந்துவிடும் நிலையில், நம்பியிருந்தவர்கள் எல்லோருமே கைவிட்ட நிலையில், தலைவருக்கு உறுதியாகத் தோள் கொடுப்பவராக சாள்ஸ் அன்ரனி நின்றார். அந்தவேளையிலே, அவர் கொடுத்த உணர்வின் பலம் தலைவர் அவர்களை சோர்ந்து போகவிடாமல் தடுத்ததுடன், விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு வழிகோலியது.

இன்று உலகமே வியந்து நிற்கும் அளவிற்கு எமது விடுதலைப் போராட்டம் சிறப்புப் பெறுவதற்கு சீலனின் அர்ப்பணிப்பே முதன்மையாக அமைந்தது. அதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது மரபுவழிப் படையணியை தலைவர் சீலனின் பெயரிலே ஆரம்பித்தார்.

இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு திருப்பம் அல்லது கேள்வி அல்லது நாளை என்ன நடக்கும் என்ற வினாவின் நிலையில் நிற்பதை நாம் அறிவோம். நாளை நடக்கப் போவதை யாரும் அறியார். ஆனால், நாளை மட்டுமல்ல அதற்கு மறுநாளும் மறுநாளுக்கு மறுநாளும் நடக்கப்போவதை எம்மால் கூற முடியும். அது என்னவென்றால், எமது விடுதலையென்பது அல்லது மக்களின் நல்வாழ்வு என்பது சிங்களவர்களின் கருணையினாலோ சிறிலங்கா அரசின் பெருந்தன்மையினாலோ விளையப்போவதில்லை என்பது மட்டும் இன்றும் நாளையும் அதற்கு மறுநாளும் உறுதியாகக் கூறக்கூடியதாக இருக்கும்.

"எமது பலம், தமிழர்களின் பலம்". அந்த பலமே எமக்குரிய விடுதலையை, எமது மக்களுக்குரிய நல்வாழ்வைப் பெற்றுத்தரும் என்பதே நாம் என்றென்றும் மனதில் வைக்க வேண்டிய - எம்மனதில் கொள்ளவேண்டிய - உறுதியான செய்தி.

நாளை யுத்தம் வெடிக்கலாம் அல்லது அது ஒரு வாரம் செல்லலாம். அல்லது உடனடியாகவே அதற்குரிய சூழல்கள் நிகழலாம். அரசியல் போக்குகள் எவ்வாறும் அமையலாம். இன்றைய அரசியல் சூழலை போராளிகளாகிய நீங்கள் அறியும் ஆவலில் இருப்பீர்கள். அந்த அரசியற் சூழல் ஒன்றே ஒன்றுதான். நேரடியாகக் கூறுவதாக இருந்தால் சிங்கள அரசு போரைத் தொடங்கும் பழியை எமது தலையில் போடும் வகையிலே செயற்பாடுகளை ஆற்றி வருகிறது. சிறிலங்காப் படையினர் நேரடியாகவே ஈடுபட்டு தமது செயற்பாடுகளை நடத்திவருகின்றனர். எவ்வாறேனும் எங்களைச் சீண்டி யுத்தத்துக்கான அறிவித்தலை நாங்கள் கொடுக்க



லெப். சீலனின் 22 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் கலந்துகொண்ட புலிகளின் தளபதிகளான - லெப். கேணல் கோபால், தளபதி மணிவண்ணன், லெப்.கேணல் நகுலன், கேணல் கடாபி, கேணல் றமேஸ், கேணல் தீபன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், கேணல் ஜெயம்.

வேண்டும் என்ற நிலையிலே அரசுப் படைகள் நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எதிரிகள் போருக்கான சூழலை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். எமது போராளிகள் மீதும் பொறுப்பாளர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. யுத்தம் எந்த நிலையிலும் வெடிக்கக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகிவருகின்றன. அந்தவகையிலே, போராளிகளாகிய நாம் இன்று செய்யவேண்டியது எம்மைப் பலப்படுத்தி நாங்கள் எங்கள் பலத்தை நிரூபிக்கக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். எம்மைப் பலப்படுத்துவதன் மூலம் எமது இயக்கத்தைப் பலப்படுத்தி எமது தேசத்தையும் பலப்படுத்துகின்றோம். எமது பலமே எமக்கு விடுதலையைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன் பலத்தைப் பெருக்கிக் கொள்வதில் காலத்தைப் பயனுள்ளதாக்குவோம் என்று கூறி அதுவே நாம் சீலனின் அன்றைய கனவை நனவாக்கும் - என்றார்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மைச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை வடமுனைத்தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.

லெப்டினன்ட் சீலனின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரினை கட்டளைத் தளபதி கேணல் ரமேஸ் ஏற்றிவைத்தார்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியில் இருந்து வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான



வெற்றிபெற்ற போராளி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுகிறது

பொதுவுருவப்படத்துக்கான ஈகச்சுடரினை கேணல் ஆதவன் ஏற்றிவைத்தார்.

மலர்மாலைகளை கிட்டுப்பீரங்கிப் படையணி சிறப்புத்தளபதி மணிவண்ணன் , குட்டிசிறி மோட்டார் படையணியின் தளபதி கோபால், பொன்னம்மான் கண்ணிவெடி படையணியின் சிறப்புத் தளபதி அஸ்வினி, தமிழீழ மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் அணிவித்தனர்.

அரங்கில் போட்டிகளில் வெற்றியீட்டிய போராளிகளுக்கான பரிசில்களை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், கண்ணிவெடிப் படையணியின் தளபதி உமையாள் , கடற்புலிகளின் தளபதி மங்களேஸ், குட்டிசிறி மோட்டார் படையணியின் மகளிர் தளபதி அமுதா, சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி புஸ்பநாதன் ஆகியோர் வழங்கினர்.

இந்நினைவு நாளையொட்டி வெளியிடப்பட்ட ஒலிநாடா உருவாக்கத்தில் பங்களித்த கலைஞர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ)

## தகவல் தந்தவரை....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டை முன்னின்று நடத்தியவர் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர். ஒலிம்பிக் விளையாட்டை 2012ஆம் ஆண்டில் பிரிட்டனில் நடத்துவதற்கான உறுதிமொழியைப் பெற்று பிரிட்டன் பொதுமக்களைக் குதூகலத்தில் ஆழ்த்தியிருந்த பிளேயர் ஜி-8 உச்சிமாநாட்டையும் அதே குதூகலத்துடன் நடத்திக் கொண்டிருந்த வேளையில் லண்டனில் தீவிரவாதிகளின் தொடர் குண்டுவெடிப்புகள் இடம்பெற்று அந்த மகிழ்ச்சியைச் சிதறடித்துவிட்டன. ஜி-8 மாநாட்டிலிருந்து உடனடியாகவே புறப்பட்டு லண்டனுக்கு விரைந்து லண்டன் மக்களின் துன்பத்தில் கலந்துகொண்டார் பிளேயர். அவசரமாக மேற்கொள்ளவேண்டிய காரியங்களைக் கவனித்தார்.

பிரிட்டிஷ் மக்கள் எதிர்கொண்ட துன்பத்தில் தீர்க்கமாகவும் தேசியத் தலைமைத்துவத்துடனும் பிரதமர் நடந்துகொண்டுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் மைக்கல் ஹோவார்ட் உட்பட பலர் நாடாளுமன்றத்திலேயே பாராட்டியுள்ளார்கள்.

லண்டன் குண்டுவெடிப்பின் அதிர்ச்சி எவ்வாறு இருந்தபோதிலும் ஜி-8 மாநாடு வெற்றிகரமாக முடிந்துள்ளமை பிரிட்டிஷ் பிரதமருக்கும் ஏனைய தலைவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. காலநிலை மாற்றங்களைத் தடுப்பது தொடர்பாகவும் ஆபிரிக்காவில் நிலவும் கடும் வறுமையை ஒழிப்பதற்காகவும் அவர்கள் எடுத்துள்ள முடிவுகள் செயல் உருப்பெற்று பலன் தரவேண்டும் என்பதே நோக்கர்களின் விருப்பம் - இந்த உயர் தொழில் வளர்ச்சிநாடுகள் தமது உறுதிமொழிகளை நிறைவேற்றுவார்களா? என்பது அவர்களின் கேள்வியாகவிருக்கின்றது.

இந்த மாநாட்டில் ரொனி பிளேயர் பேசிய போது, "பயங்கரவாதத்தின் பின்னணியில் இருந்துகொண்டு நாம் இன்று பேசுகின்றோம். ஆனால், நாம் எதற்காக வந்தோமோ அதை மறந்துவிடமுடியாது. பின்தள்ளிவிட முடியாது" என்று கூறினார். கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷ்யா மற்றும் அமெரிக்கத் தலைவர்கள் உடன் இருந்தனர். ஆபிரிக்காவின் வறுமையை நீக்க உதவிகள் வர்த்தகம் மற்றும் கடன் தள்ளுபடி போன்ற முறைகளில் ஆதரவு அளிப்பது தொடர்பான அறிக்கையில் ஜி-8 நாடுகளின் தலைவர்கள் வெள்ளியினாலான பேனைகளால் கையெழுத்திட்டனர்.

பூமி வெப்பமடைவது தொடர்பான விடயத்தில் கருத்து வேறுபாடுகள் மிகக் கசப்பானவையாக இருந்தபோதிலும், வளர்ந்துவரும் கைத்தொழில் நாடுகளான சீனா - இந்தியா போன்றவற்றுடன் வாயு வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்துவது, குறைப்பது பற்றிப் பேச்சுக்கள் நடத்துவது என்று முடிவு எடுத்தனர்.

இந்த மாநாட்டில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தலைவர்கள் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். ❖

# புண்ணியதினங்களுக்கு கட்டியம்கூறும் ஆடிப்பிறப்பு

இன்று ஆடிப்பிறப்பு. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

இந்து மதத்தவரின் வாழ்க்கை முறையில் திருவிழாக்கள் மற்றும் பண்டிகைகள் பெரும் முக்கியத்துவம் பெறுவன. அந்தவகையில், இந்து சமயப் பண்டிகைகள்கூட உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்களால் திருவிழாக்கள் போன்றே பக்திசிரத்தையுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன. 'பண்டு' என்ற சொல் பழைமை மிக்கது எனப் பொருள்படும். இந்து மதத்தவர்களால் திருவிழாக்கள் யாவும் ஆன்மீகம் சார் கொண்டாட்டங்களாகக் கருதப்படும் அதேவேளை, பண்டிகைகள் யாவும் இன, மத, கலாசார வெளிப்பாடுகளாகக் கருதும் வகையில் கொண்டாடப்படுகின்றன. தமிழ் மக்களது கலாசார பண்டிகைகள் பெரும்பாலும் பருவகாலங்களை அடிப்படையாகக் கொண்டமைவது கண்கூடாகும்.

சித்திரை மாதம் பிறந்தது முதல் பங்குனி மாதம் ஈறான தமிழ் ஆண்டின் சகல மாதங்களிலும் இந்து மதத்தவரிடையே பெரும்பாலும் ஆகக்குறைந்தது ஒரு முக்கிய பண்டிகையாவது இருந்து வருவதை அவதானிக்க முடியும். அத்துடன், ஒவ்வொரு பண்டிகைக்கும் ஏதேனுமோர் அடிப்படைச் சிறப்பும் முக்கியத்துவமும் இருப்பதையும் அவதானிக்க இயலும்.

அந்தவகையில், இன்று கொண்டாடப்படும் ஆடிப்பிறப்பும் சைவமதத்தவர் மத்தியில் முக்கியத்துவம் மிக்கதொரு கொண்டாட்டமாக அமைந்துள்ளது.

சூரியன் தெட்சணாயத்துக்கு வரும் முதல் நாளே ஆடிப்பிறப்பாகும். தை மாதம் முதல் ஆனி மாதம் வரையான உத்தராயணம் முடிவடைந்தது. வருடத்தின் பின்பாதியான தெட்சணாயம் இன்று ஆரம்பமாகிறது. தெட்சணாயனத்தின் ஆரம்பமான ஆடி மாதமே கார் காலத்தின் முதல் மாதமெனக் கொள்ளப்படும். 'ஆடி விதை தேடி விதை' என்ற முதுமொழி இதையொட்டியே வழக்கில் இருந்து வருகிறது.

விவசாய முயற்சிகளுக்குக் கார்காலம் முக்கியத்துவம் மிக்கதாகும். விவசாயத்தையே தமது பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்த நம்முன்னோர் ஆடிப்பிறப்பை வரவேற்கும் வகையில் பக்திபூர்வமாய் ஆசாரசீலத்துடன் அன்றைய தினத்தைத் தமது முக்கிய பண்டிகைகளில் ஒன்றாகக் கருதிக் கொண்டாடி மகிழ்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இன்றும் அவ்வழக்கம் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்து வருகிறது. நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் -

"ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை<br>
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே<br>
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்"<br>
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

என்ற பழைய பாடல் இத்தனை ஆண்டுகள் கழித்தும் ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் குறித்து எமது நினைவுகளை இரைமீட்டும் வகையில் அமைந்த காலத்தால் அழியாததொரு பாடலாகும்.

**பொன்வேலன்**

அதுமட்டுமன்றி, ஆடிப் பிறந்ததைத் தொடர்ந்து அதேமாதத்தில் அடுத்தடுத்து வரும் ஆடிப்பூரம், ஆடி அமாவாசை என்பனவும் சைவமதத்தவர் வாழ்க்கையில் தனிச் சிறப்பும் முக்கியத்துவமும் கொண்டவை. இவை புண்ணியதினங்களும்கூட. இந்த ஆடி மாதப் பிறப்பு அவற்றுக்கெல்லாம் கட்டியம்கூறும் வகையில் சிறப்புப்பெற்றுத் திகழ்கிறது.

பரபரப்பு மிக்க இன்றைய உலக வாழ்க்கையில் சைவமதத்தினரான எமது மதத்துக்கும் எமது இனத்துக்கும் இத்தகைய பாரம்பரியம் மிக்க பண்டிகைகளும் விழாக்களுமே எமது கலாசார விழுமியங்கள் பற்றறுந்து போய்விடா வண்ணம் கட்டிக்காப்பதற்கு உறுதுணை புரிகின்றன என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கே இடமில்லை. ✸

உ



அனலைதீவு அருள்மிகு ஸ்ரீ அரிஹர புத்திர
ஐயனார் கோயில்
**தேர்த்திருவிழா**



ஐயனார் அடியார்களே!

**இவ்வாலயத்தில் எதிர்வரும் (20.07.2005) புதன்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெற்று வசந்த மண்டபப் பூசையாகி 10 மணிக்கு ஐயனார் திருத்தேரில் ஆரோகணித்து எழுந்தருளுவார்.**

ஐயன் அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து
அருள் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கண்ணகை அம்மன் கோயிலடியிலிருந்து அனலைதீவுக்கு போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(37845) (39-18-16) **-ஆலய பரிபாலன சபையினர்.**


## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி

**2003 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் தெரிவானவர்களுக்கும், 2004ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி அடைந்தவர்களுக்குமான நன்கொடை வழங்கல்- 2005**

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக எல் லைக் குட்பட்ட பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெற்றோர்களின் அல்லது பாதுகாவலரின் பராமரிப்பில் வாழ்ந்து வரும், 2004ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், 2003 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கும் நன்கொடை வழங்குவதற்கு இச் சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தகைமையைக் கொண்டுள்ள மாணவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, போதிய ஆதாரங்களுடன் தங்கள் விண்ணப்பங்களை, 29.07.2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொன்னையா வைரமுத்து,
*செயலாளர்,*
*நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி.*
*17.07.2005*

(சி.42081) (39-18-16)

## மரண அறிவித்தல்



### கந்தையா முத்துலிங்கம்

திருநெல்வேலி தெற்கு, தாழையடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மாரியம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முத்துலிங்கம் நேற்று (16.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை- சின்னம்மா தம்பதியரின்அன்பு மருமகனும் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் அமரர்களான சிவலிங்கம், சரஸ்வதி, இராசமணி ஆகியோரின் பாசமுள்ள சகோதரனும் கலாமோகன் (ஜேர்மனி), சிவகுமாரன் (லண்டன்), உதயகுமாரன் (கனடா), நந்தினி (லண்டன்), சுதாகரன் (கனடா), கமலினி, மாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாகினி, கற்பகவல்லி, குமுதினி, ஆனந்தஜோதி, சிவதர்சினி, ஆனந்தராசா (சக்தி ரேடேர்ஸ், பரமேஸ்வராச்சந்தி) ஆகியோரின் மாமனாரும் நாகம்மா, கோவிந்தபிள்ளை, விசாலாட்சி, பொன்னுத்துரை, செல்லம்மா, நல்ல தம்பி, யோகாம்பிகை, சிதம்பரம், அமரர் நடராசா மற்றும் பூலோகம் ஆகியோ ரின் மைத்துனரும் ஜனனி, பிரியா, சந்துரு, சகானா, கீதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

34/10, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

*தகவல்:*
மனைவி.

(37852) (39-16-18)





# அற்லஸ்

**உங்களில் ஒருவன்**

more Mobitel

**வாடிக்கையாளர்களே!**

அற்லஸ்சின் புதிய பார்வை உங்கள் மீது! வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஒரே கூரையின் கீழ் தனது சேவையை மேலும் விஸ்தரித்துள்ளது. குளிரூட்டிய, குளிரூட்டப்படாத சொகுசு பஸ், வான் சேவை. உங்கள் சௌகரியமான பயணத்திற்கு நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் **"ATLAS TRAVELS"** உங்கள் தேவையை Atlas சேவையூடாக நல்ல பயனைப் பெற ஓர் அரிய சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம் ⇄ கொழும்பு

**சொகுசு பஸ் புறப்படும் நேர அட்டவணை**

| | யாழ் - கொழும்பு | கொழும்பு - யாழ் |
|---|---|---|
| முதலாவது பஸ் | காலை 7.30 | இரவு 9.30 |
| இரண்டாவது பஸ் | காலை 8.00 | இரவு 10.00 |

இரண்டாவது பஸ் காலை 8.00 மணிக்குப் புறப்பட்டு நெல்லியடி, பருத்தித்துறை கொடிகாமம் ஊடாக கொழும்பைச் சென்றடையும்

வான் சேவையானது பிரயாணிகளின் நலன் கருதி அவரவரது வீடு களில்ஏற்றி அவரது வீடுகளில் இறக்கப்படுவர். (குறிப்பிட்டதூரம் 5km)

**362,** ATLAS TRAVELS & TOURS
காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
Tel: 2363 030, 4520 651, 2362 525

**01,** ATLAS Communication
A-9 வீதி, கொடிகாமம்
A-9:- 021-22 63400, 021-22 63411

**77,** ATLAS Communication
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
Tel: 021-222 2557, 021-222 5464

**412,** Atlas Telecom
Hospital Road, Jaffna.
T.P:- 021-222 2990, 021-222 2031

**அற்லஸ் வழங்கும் விசேட விலைக்கழிவு**

| More Card | | Kid Card |
|---|---|---|
| 1000\- | Card | 100\- |
| 350\- | | 400\- |
| Pre Paid Sim | | 1000\- |
| Post Paid Sim | | |
| Group Package | | |

கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் இணைப்புக்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**NOTE:-**
பிரயாணத்தின் போது தங்களுக்கு ஏதேனும் அசௌகரி யங்கள் ஏற்படின் தொடர்புகளுக்கு:- 0777744863

**அற்லஸ் தொலைத்தொடர்பகம்**
இல.77, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 222 2557, 2225464

**அற்லஸ் தொலைத்தொடர்பகம்**
இல.1.A9 வீதி, கொடிகாமம்.
தொ.பே.: 226 3400, 226 3411

**அற்லஸ் ரெலிகொம்**
இல.412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2990, 2031.

அற்லஸ் முகவர்கள்:
**குகன் ஸ்ரோர்ஸ்**
இல.180, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:2767

**த போன் சொப்**
பிரதான வீதி, நெல்லியடி.
T.P.:021 226-3770,
0777570110.

**கணேசா ஏஜென்சி**
இல.329B, பிரதான வீதி.
பருத்தித்துறை.
T.P.:021 2263928

**ஸ்ரீ அம்பாள் கொமினிக்கேசன்**
சாவகச்சேரி றோட் சிலையடி.
மந்திகை-புலோலி
T.P.:021 2263111

ஞாயிறு தினங்களிலும் பஸ்நிலையத்திற்கு முன்பாக உள்ள எமது Atlas Telecom வாடிக்கையாளர் நன்மைகருதி பஸ், வான் பிரயாண பதிவுகளுக்காக காலை 9மணி தொடக்கம் மாலை 6 மணிவரை திறக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.


*If you are 18 and above and have completed your A/L's...*

*Have a Good command of both spoken and written English ...*

*Opportunities to join a Global Leader in the Banking Sector await you.....*

Rush your credentials with contact details of two non-related referees to reach us within **10 days** of this advertisement. Please quote MSL Ref 4401 in your application.

*Our client is a multinational company, requiring the services of dynamic, self motivated individuals with team spirit, to be a part of its Global Services Center, based in Sri Lanka.*

## *Customer Service Executives (CSE)* *msl 4401*

With a strong customer focus, the CSE will need to work towards specific volume and quality targets.

- A high level of accuracy and speed
- good analytical skills
- the ability to work together with a team,
- your pleasing personality,
- telephone etiquette *and*
- the ability to confidently liaise with the customers will ensure your success in this role.

**Successful candidates will have the opportunity to be a part of a first class multi cultural and diverse work environment and will be rewarded with an attractive and negotiable remuneration package.**


**MSL** Management Systems Ltd.
201, De Saram Place, P.O Box 1800, Colombo 10,
E-mail—mslr@eysl.lk Fax - 2697369


**We thank all applicants for their interest. Only short-listed candidates will be notified.**

# அடுத்த கணத்தில் என்ன நடக்குமோ என்ற மனநிலையில் திருமலை மக்கள்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஒருவார காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் மீண்டும் ஒரு யுத்த சூழலை உருவாக்கி விடுமோ என்ற நிலையினை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அளவுக்கு இந்த மாவட்டத்தின் இயல்புநிலை சீர்குலைந்திருக்கின்றது அடுத்த கணம்என்ன நடக்குமோ என்ற நிச்சமற்ற நிலையே இங்கு நிலவிவருகின்றது.

இதற்கான தீர்வு என்ன அதனை எவ்வாறு உருவாக்க முடியும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.கடந்த ஞாயிறன்று செல்வநாயகபுரத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் தாக்கப்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்பைச சோந்த இருவர் உட்பட நால்வர் பலியாகினர்.

இத்தகைய சம்பவம் மக்களிடையே பெரும் பதற்றத்தினையும் பரபரப்பினையும் உருவாக்கியது. மாவட்டத்தில் சமாதான சூழலில் அரசியல் பணிகளை மேற்கொள்ள வந்தவர்களுக்கு நேர்ந்த இத்தகைய அவலம் தமிழ் மக்களைப் பெரிதும் ஆத்திரப்பட வைத்தது. இதனைத் தொடர்ந்து ஹர்த்தால், கடை அடைப்பு என்பன இடம்பெற்றன. அன்றாட வாழ்வும் சீர்குலைந்தது. இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை 'பனையாலை விழுந்தவனை மாடேறி மிதித்த கதை'யாக யுத்தத்தினால் தங்கள் உடன் பிறப்புகளை இழந்து உடைமைகளை இழந்து, நிர்க்கதியானநிலையில் உள்ள மக்களை கடலரக்கன் காவு கொள்ள விரக்தியின் விளிம்பிற்கே இந்த மக்கள் சென்றுவிட்டனர். இந்த நிலையில் தான் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆனால், பேரினவாதிகளோ கடற்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளைக் கூடச் செய்யவிடாத வகையில் தம்மால் முடிந்த அத்தனை இடையூறுகளையும் செய்து வருகின்றார்கள்.

இத்தகைய சாதகமான நிலையினைப் பயனபடுத்தி அமெரிக்க அரசும் பயங்கரவாதிகளின் கரங்களுக்கு தங்கள் பணம் செல்ல விரும்பவில்லை என வெடிகுண்டு ஒன்றினை தூக்கிப் போட பொதுக்கட்டமைப்பு இன்றோ பேரனவாதிகளின் கரங்களில் சிக்கித் தவிக்கின்றது. இனிமேல் அரசு இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறது என்பதும் கேள்விக்குரிய விடயமாகிவிட்டது. இதற்கிடையே திருகோணமலை நகரின் மையப் பகுதியில் எவரின் அனுமதியுமின்றி நள்ளிரவில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக, திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினா் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைய ஒரு வாரகால அவகாசம

## தமிழர்களை நிவாரண உதவிகள் சென்றடையக் கூடாது என்பதில் விடாப்பிடியாக நிற்கும் பேரினவாதிகள்

வழங்கியிருந்தார்கள். ஆனால், கௌரவமான முறையில் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைய வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்து ஒரு வாரகாலம் கடந்துவிட்ட நிலையில் இதற்கான தீர்வு என்ன என்பது கேள்விக் குறியாக மாறியுள்ளது. இந்த விடயம் கிடப்பில் போட்ட விடயமாக மாறிவிட்டதோ என இந்த மாவட்ட மக்கள் சந்தேகம் கொள்ளும் நிலையினை உருவாக்கியுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளின் தற்போதைய நிலைகூட இன்றும் கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது. இன்றும் கூட ஆழிப்பேரலைப் பேரலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பெருமளவிலான குடும்பங்கள் எந்தவித வசதிகளுமற்ற நிலையில் தற்காலிக கூடாரங்களில் வாழ்ந்து வருகின்றனர். தற்பொழுது இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை மாரிகாலம் ஆரம்பமாகத் தொடங்கி விட்டது. இந்தநிலையில் தற்காலிக கூடாரங்களில் இந்த மக்கள் வாழமுடியுமா என்ற நிலையும் உருவாகத் தொடங்கியுள்ளது

சில தினங்களின் முன்னர் மாவட்ட அரச அதிபரின் கூற்றின் பிரகாரம் 2300இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிக கூடாரங்களில் வாழ்ந்து வருவதாகத் தெரியவருகின்றது.

இத்தனைக்கும் மேலாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிரந்தர வீடு ஒன்றுகூட அமைத்துக் கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான காணிகளைத் தெரிவுசெய்வதில் அரசுக்கு சங்கடம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தின் பூகோள நிலையைக் கவனித்தால் அரசின் கடல் எல்லை வரையறைக்கு அப்பால் பாதிக்கப்பட்ட மக்களைக் குடியேற்றுவது என்பது இலகுவில் முடிக்கக்கூடிய காரியமல்ல.

ஆழிப்பேரலையாலும் போர்க்கால சூழலாலும் பாதிக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை மாரிகாலத்தின் முன்னர் இந்த மக்களுக்கான தற்காலிக வீடுகளாவது அமைத்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லை என்றே எண்ணத் தோன்றகின்றது

பிரச்சினைகளை உருவாக்கி இந்த மாவட்ட மக்களின் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகள் மற்றும் போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான பணிகளை முறியடிப்பதில் பேரினவாத சக்திகள் தம்மால் முடிந்தவரை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.கடல்எல்லை தொடர்பான பிரச்சினையால் உரிய காணிகளைப் பெறமுடியாவிட்டால் இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதனை அரசு தீவிரமாக ஆராயவேண்டும்.

ஆனால், நடப்பது என்ன பிரச்சினைகள் ஏற்படும் போதெல்லாம் சமாதான மாநாடுகள் சமயத் தலைவர்களின் சந்திப்புகள் எனக் கூறி பிரச்சினைகளை மென்மேலும் உருவாக்கிக் கொண்டு போனால் எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகளை எந்தவகையிலும் தீர்த்துகொள்ள முடியாதநிலை அரசுக்கு உருவாகலாம்.

பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்கக கூடிய சாதகமான நிலைகள் உருவாகியிருந்த காலகட்டங்களில் எல்லாம் இந்த நாடடின் அரசியல் தலைவர்களும் அரசியல் வாதிகளும் திட்டமிட்ட அடிப்படையில் பேச்சுக்கள், பாதயாத்திரைகள் என்றெல்லாம் மேற் கொண்டதனால்தான் இந்த நாடு அழிவின் விளிம்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

ஒரு காலத்தில் சிங்கப்பூர் மக்கள் இலங்கையைப் போல் வரவேண்டும் என்று கனவு கணடார்கள். ஆனால், அரசுகளின் நிலையற்ற போக்குகளினால் இன்று விலைவாசிகள் விசம போல் ஏறிவிட்டன. பிரச்சினைகளும் தீர்க்க முடியாத வகையில் ஒன்றன் மேல் ஒன்றாக

**திருமலையிலிருந்து சங்கீத்**

அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதற்கான சகல தீர்வுகளையும் காண்பதறகான சகல நடவடிக்கைளையும் அரசும் அரசு சார்நதவர்களும் மேற்கொள்ளவேண்டும். அல்லாத பட்சத்தில் இந்த நாடு அழிவின் விளிம்பை நோக்கிச் செல்வதனை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதனைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். ◆

# '...சொந்த ஊருக்குப் போக விட்டால் எந்த உதவியும் எங்களுக்கு வேண்டாம்...'

இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்! 4

யுத்தம் நடைபெற்ற காலங்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் தமது வாழ்விடங்களைத் தொலைத்து உறவுகளைப் பறிகொடுத்து உடைமைகளையும் கைவிட்டு உடுத்த உடுப்புடன் உயிர்களைக் கையில் பிடித்துக் கொண்டு நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற மக்களின் அவல வாழ்வு சமாதான காலத்திலும் சீர் செய்யப்படாமல் உள்ளது.

இவர்களின் சொந்த ஊர்கள், அவர்கள் வாழ்ந்த வளமான - வனப்பான காணிகள் இன்று பாலைவனமாக உயர்பாதுகாப்பு வலயமென்ற தோரணையில் முடக்கப்பட்டுள்ளது.

இதனால், இவர்களின் வாழ்வியல் 15 வருடங்களாக அகதிமுகாம்களில் முடங்கியுள்ளது. இத்தகைய மக்களின் இன்றைய அவல நிலையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டுவரும் நோக்கில் 'உதயன்' தனது மகத்தான பணியான "இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!!" எனும் தொனிப்பொருளில் விசேட பார்வையினை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் நோக்குகிறான்.

அந்தவகையில் இந்தவாரம் சண்டிலிப்பாயிலுள்ள 'ஐயனார் நலன் புரி நிலையத்தில்' வாழுகின்ற மக்களின் துயரங்களையும் அவர்களின் இன்றைய அவல வாழ்வியலையும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் எதுவென்பதையும் அங்குள்ள மக்களோடு அளவளாவி அவர்களின் சொல்லொனாத் துயரங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்.

இங்கு 34 குடும்பங்களைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட மக்கள் தமது வாழ்க்கையை நகர்த்துகின்றார்கள்.

இவர்கள் அனைவரும் காரைநகர் தோப்புக்காடு எனும் இடத்திலிருந்து 1990களில் இடம்பெயர்ந்து 15 வருடமாக அகதிவாழ்வை வாழ்ந்துவருகின்றார்கள். இவர்களின் வளமான ஊர் உயர்பாதுகாப்பு வலயமென்ற போர்வையில் சிறிலங்காப் படைகளின் கால்களுக்குள் அகப்பட்டுள்ளது. இவர்கள் இதுவரைகாலமும் பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்து, 4 வருடங்களுக்கு முன்புதான் சண்டிலிப்பாயில் வந்து குடியேறியுள்ளனர்.

### இங்கும் மனிதர்கள் குடியிருக்கிறார்களா?

இவர்களின் இந்த முகாமைப் பார்க்கின்ற போது, இங்கும் மனிதர்கள் குடியிருக்கிறார்களா? என்ற ஆச்சரியக்குறியைப் போட்டுக் கொண்டது. சுற்றிவர அடர்ந்தபற்றைகள், ஓங்கி வளர்ந்துள்ள அடர்ந்த பனைமரங்கள் இத்தனைக்கும் மத்தியில் தொடராக அமைக்கப்பட்டுள்ள ஓலைக்குடிசைகள்.... எப்படித்தான் இதற்குள் வாழ்க்கை நடத்துகின்றார்கள் என்று என்னுள்ளே மனம் நொந்தபடி வெந்துபோயுள்ள அங்குள்ள மக்களோடு மனம்விட்டுக்கதைப்பதற்கு முன்னர்... என்னை நோக்கி ஓடிவந்த - நான் யாரென்று அறியாத - வயோதிப பாட்டி ஒருவர் 'தம்பி.... தம்பி.... என்ன பேனைகள், பயில் மட்டையெல்லாம் கொண்டுவந்து பதியுறியள். எங்களுக்கு ஏதாவது தரப்போறியளா? இப்படி எத்தனை பேர் வந்து பதிஞ்சிட்டுப் போட்டினம் ஒருத்தரும் ஒன்றும் தாறதாக் காணேல' என்று தன்னுடைய எதிர்பார்ப்பைக் கொட்டித் தீர்த்தார்...

பின்னர் நான் யார் என்பதை அந்த வயோதிபப் பெண் அறிந்துகொண்டு

'சரி தம்பி எங்கட துன்பத்தை உங்கட பேப்பரில் எழுதியாவது இந்த அரசின் அதிகாரிகளின்ர பார்வை எங்கட இந்த அகதிமுகாம் மீது படட்டும். அதுக்குப் பின்னெண்டாலும் எங்களுக்கு ஒளி கிடைக்கட்டும்.



சண்டிலிப்பாய் ஐயனார் நலன்புரி நிலையத்தின் குடிசைகள்

### இவர்களின் தேவைதான் என்ன?

15 வருடமாய் அகதிவாழ்வில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவரும் இவர்கள், அன்றாடம் உழைத்து வயிறு நிரப்புபவர்கள்.இங்குள்ள ஒவ்வொருவரும் தம்முடைய குறைகளைச் சொல்ல முண்டியடித்து முன்வருகிறார்கள்.

முதலில் குறைகளை முன்மொழிந்த ஒரு நடுத்தர வயதுடைய பெண்மணி இப்படிச் சொல்கிறார்....

'எங்களுக்கு இதுவரைக்கும் ஒரு மலசல கூடம் கூட யாரும் கட்டித்தரேல்ல. இப்பதான் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் மூன்று மலசலகூடம் கட்டித்தருகினம். அதுவும் இன்னும் வேலைமுடியல்ல.

மறைவான இடங்களில்தான் இஞ்ச இருக்கிறவையள் மலசலம் கழிக்கிறவை. ஒரு கிணறு கூட இஞ்சை இல்லை குளிக்கிறதுக்கு வயல் கிணற்றுக்குப் போவம்... குடிதண்ணீருக்கு நீண்டதூரம் போய்த்தான் தண்ணி எடுப்பம்.

இதால தொற்றுநோய் அடிக்கடி எங்கட பிள்ளையளுக்கு வரும். ஆஸ்பத்திரியும் - நாங்களும் தான் மருந்தும் - கையளுமாய் திரியுறம்.

சுகாதார சீர்கேடு இஞ்ச தாராளம்' என்று தன்னுடைய ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

எங்களுக்கு வேறொருகாணிதாங்கோவென்று - அரச அதிகாரிகளிட்ட பல தடவை போய்க் கேட்டுட்டம். அவர்கள் கை விரிச்சுப் போட்டினம். காணிகள் இப்ப ஒரிடமும் இல்லை. கொஞ்சக் காலம் இதுக்க இருங்கோ பார்ப்பம் என்கிறார்கள்...

வீட்டைச் சுற்றி பற்றைக் காணிகள் இருக்கிறதால இரவில் பாம்பு வருமோ விஷப் பூச்சிகள் வருமோ என்று ஏக்கத்தோடதான் நித்திரைக்குப் போவோம்...

இன்னும் சொல்லப் போனால் எங்கட இந்த அகதி வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடிகளையும் போராட்டத்தோடுதான் நகர்த்துகிறோம். இதுக்கெல்லாம் எப்ப விடிவு பிறக்கப்போகுது என்று எண்ணி ஒவ்வொரு நாளையும் ஓட்டிக்கொண்டிருக்கிறோம்' என்று அவர் தன் சுமைகளைக் கூறிமுடித்தார்.

### கல்வி நிலை எந்தக் கட்டத்தில்?

இங்கு 32 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ஆனால், அவர்கள் கற்பதற்குரிய வசதி வாய்ப்புகள் எதுவுமில்லை என்பதை இங்குள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தர மாணவர் ஒருவர் இப்படிச்சொல்கிறார்.

'எங்கட வீடுகளோ குசினி, விறாந்தை எல்லாம் ஒரே மாதிரியானது. ஒரு வீட்டில ஐந்து பேரேன்றால் நீட்டி நிமிர்ந்து படுப்பதற்குக் கூட வசதியில்லாத கொட்டில்கள். எல்லாரும் விறாந்தையில்தான்இருப்போம். இப்படியென்றால் எப்படி சுமுகமான கல்வி சாத்தியப்படும். படிப்பதென்றால் அமைதியான சூழல் தேவை. குப்பி விளக்கிலதான் படிக்கிறம். அது கூடப் பரவாயில்லை. ஆனால் சத்தம் சந்தடியில்லாத ஒரு அமைதியான திட காத்திரமான சூழல் தேவை. அது கூட இங்கில்லையே' என்று மிகவும். மனவேதனையுடன் கூறினார் அந்த மாணவன்.

அத்துடன், இங்கு 25இற்கு மேற்பட்ட முன்பள்ளி மாணவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கற்பதற்கு ஒரு முன்பள்ளி இல்லையென்று அங்குள்ளவர்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

ஏதாவது, அரச நிறுவனமோ? அல்லது அரச சார்பற்ற நிறுவனமோ இங்கு ஒரு முன்பள்ளியை அமைக்க முன்வருவார்களா? என்று இவர்கள் ஏங்குகிறார்கள்.

இந்த மாணவர்களின் எதிர்கால வாழ்வினை ஒளியேற்ற எந்தத்தரப்பினராவது முன்வரவேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இறுதியாக அங்குள்ள வயோதிபர் ஒருவருடன் கதைத்தேன் அவரின் உள்ளக் குமுறல் என்ன தெரியுமா?

'இந்த எம்.பிமார்கள் சரி, அரச நிறுவனங்கள்சரி, கலாசாரமண்டபம் அமைக்க வேண்டும் கோயில் கட்டவேண்டும், வாசிகசாலை கட்டவேண்டும் கோடிக்கணக்கில் நிதி ஒதுக்குகிறார்கள் என்று ஒவ்வொரு நாளும் பேப்பரில படிக்கிறம் அப்படி அதையெல்லாம் பார்க்கேக்க எங்கட மனம் என்ன பாடுபடுகுது தெரியுமா தம்பி. ஏனென்றால் நாங்கள் பகலில் வேர்வை சிந்தி உழைச்சிட்டு இரவில வீட்டில நிம்மதியாய்படுக்க முடியேல்ல நீட்டி - நிமிர்ந்து ஆறுதலாக படுக்க ஒரு வீடு இல்லையே எங்களுக்கு யாரும் நிதி ஒதுக்கவேண்டாம் எங்கட ஊருக்கு விட்டால் போதும் பிறகு நாங்கள் எங்களுக்குரிய நிதியை எங்கட சொந்த ஊரில உழைச்சு நாங்களே தேடிக்கொள்வோம்' என்று மிகவும் மனவேதனையுடனும் ஆத்திரத்துடனும் கூறினார்.

### அதிகாரிகள் கவனத்திற்கு!

அதிகாரிகளே! இவர்களின் அவல வாழ்வைப் பார்த்தீர்களா? அவர்களுக்குரிய பாதுகாப்பான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து நிர்க்கதியாய் நிற்கும் அவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுங்கள்.

அவர்களும் இந்த சமூகத்தின் மனிதர்களாக வாழ்வதற்கு வழிகாட்டுங் கள். அவர்கள் ஊர்போய்ச் சேரும் வரைக்கும் இந்தப் புனித கைங்கரியத்தைத் தொடருங்கள். ❋

**அபிமானன்**

**வேலையாள்கள் தேவை**

எமது ஸ்தாபனத்தில் வேலை செய்வதற்கு சிற்றூழியர்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது).
நேரில் வரவும்.

**40, கண்டிவீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.**

(378??) (42-16) (இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக)

**WANTED**

A REPUTED ORGANI ATION REQUIRES
*I. ADMINISTRATIVE SECRETARY (FEMALE)*
*II. STORE KEEPER*

**OLD PARK RESTAURANT (PVT.) LTD
40, KANDY RD.,
CHUNDIKULUI.**

(37833) (42-16)

## காற்றாடிகள் அன்பளிப்பு

தென்மராட்சிஜூலை17 சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு ஐந்து மின்சாரக் காற்றாடிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

(எ-117)

## 104 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



கோப்பாய் மத்தியைச் சேர்ந்தவரான

திருமதி மு. சுவாமிநாதன் (மனேச்சர்) வள்ளியம்மைப்பிள்ளை

அவர்கள் தனது 104 ஆவது பிறந்த தினத்தை இன்று (17.07.2005) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் அமைதியாகக் கொண்டாடுகிறார்.

இவரை அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு நீடூழிவாழ்க என்று மனமார வாழ்த்துகின்றார்கள்.

முதலியார் வளவு,
கோப்பாய்.

(37711) (54-15-45)

**குடும்பத்தினர்.**

## நெடுந்தீவு பிரதேசசபை

## கேள்வி அறிவித்தல் - 2005 இற்கானது

*கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட (இக்ராட்) ஒப்பந்தகாரரிட மிருந்தும் உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் ஒப்பந்த வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப் படுகின்றன.*

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை *செயலாளர், பிரதேச சபை நெடுந்தீவு* என்னும் முகவரிக்கும் இணைப்பிரதியை *பிரா.உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 28.07.2005 ஆம் திகதி அன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

நெடுந்தீவுப் பிரதேச சபை அலுவலகத்தில் -
கேள்விப் பத்திரங்கள் 26.07.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.
கேள்விப்பத்திரங்கள் 27.07.2005 ஆம் திகதி பிற்பகல் 4 மணிவரை ஏற்றுக்கொள்ளப் படும்.
கேள்விப்பத்திரங்கள் 28.07.2005 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்பட்டு பரி சீலிக்கப்படும்.
குறித்த நேரத்தில் ஒப்பந்தகாரர் சமுகமளித்திருக்கலாம்.
மேலதிக விவரங்கள் பிரதேசசபையில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம். கேள்வி கோரப்படும் வேலைகளின் விவரம்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணைப் பணம் | வற் வரி |
|---|---|---|---|---|
| 1. | பொதுச் சந்தைவளவில் கடை அமைத்தல் | 350/= | 3500/= | |
| 2. | பொதுச்சந்தையில் மரக்கறிச்சந்தை அமைத்தல் | 250/= | 1250/= | |
| 3. | சாறாப்பிட்டி குடிதண்ணீர் திட்ட அறை திருத்தம் | 250/= | 1000/= | |
| 4. | நீர்த்தாங்கி திருத்தம் | 250/= | 1500/= | |
| 5. | குடிதண்ணீர் கிணறும் வடிகாலும் திருத்தம் | 250/= | 1000/= | |
| 6. | கோட்டைக்காடு பனங்காணி வீதி வேலை | 500/= | 4500/= | |

நெடுந்தீவு பிரதேசசபை,
நெடுந்தீவு.
15.07.2005

**வி.எஸ்.பி. - தில்லைநாதன்**
செயலாளர்
பிரதேசசபை - நெடுந்தீவு.

(சி/42088)(42-18-19)

## மாநகரசபை யாழ்ப்பாணம்

### கட்டட நிர்மாண, வீதி அமைப்பு வேலைக்குத் தேவையான மூலப்பொருள்களை விரைவாக வழங்கக்கூடியவர்களைக் கோருதல்

2005ஆம் ஆண்டுக்கான மாநகரசபையின் அவசர வேலைத் திட்டங்களுக்குத் தேவையான கீழ்க்காணும் மூலப்பொருள்களை விரைவாக மாநகரசபைக் களஞ்சியத்திற்குக் கொண்டுவந்து ஒப்படைக்கக்கூடிய மூலப் பொருள்களின் அளவும் ஒரு கியூப் கல், மணல் விலையையும் கொண்டதாக படிவ அமைப்பில் தயாரித்து 25.07.2005 ஆம் திகதி மு.ப.11 மணிக்கு முன் மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் நேரில் ஒப்படைக்குமாறும், அதனைத் தொடர்ந்து மு.ப.11 மணிக்கு இடம் பெறும் கலந்துரையாடலிலும் பங்குபற்றுமாறும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

1. 4" கல், 6"-9" கண்டகல் - ஒவ்வொரு கியூப்பின் விலை குறிப்பிடவும்.
2. நாகர் கோயில் மணல் - ஒரு கியூப்பின் விலை
3. ஒரு மாத காலத்தில் வழங்கக்கூடிய பொருள்களின் அளவினைக் குறிப்பிடவும்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

**கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.**

(சி-42080)(42-18-19)

**NIIT**

northumbria UNIVERSITY

# End of School days
# Beginning of Something better



ஆசியாவின் மிகப்பெரிய கணனிப்பயிற்சி நிறுவனமாக விளங்கும் NIIT உங்கள் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு சிறந்த கற்கைநெறிகளை வழங்குகின்றது. உலகில் 3891க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு 2.5 மில்லியன் மாணவர்களுக்கு கணனிக் கற்கைகளை வழங்கும் நாங்கள் உங்களையும் இணைத்து உங்கள் முன்னேற்றத்திற்கென கணனிக் கற்கைகளை சர்வதேச சான்றிதழ்களுடன் வழங்குகின்றோம்.

**Futurz**
Professional Diploma in Information Technology (DNIT)
(Direct Entry to the Final Year at B. Sc. (Hons) Degree at Northumbria

**CATS**
Ready for the next level?
VB.NET & ASP.NET
JAVA & J2EE
C++ & Linux
XML & DHTML

**SWIFT**
Certificate in MS Office XP
Certificate in Web Designing
Macromedia Flash
Macromedia Dreamweaver

**NIIT Branches**

| | | | |
|---|---|---|---|
| Union Place | 011 4 720790 | Gampaha | 033 4 673222 |
| Nugegoda | 011 4 408770 | Anuradhapura | 025 4 581003 |
| Kurunegala | 037 4 691000 | Bambalapitiya | 011 4 519111 |
| Kandy | 081 4 470900 | Trincomalee | 026 2 227767 |
| Jaffna | 021 2 227250 | Tissamaharama | 047 4 328930 |

**NIIT**
347- 2/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**Most Advanced IT Curriculum Currently Available In Sri Lanka.**



உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீக குரு

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி யின்

## வாழும் கலைப் பயிற்சி

(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்சன்கிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடங்கியது)

* மனஇறுக்கம், மனஉளைச்சல் நீங்கி தெளிந்த மனம், அமைதி, தன்னம்பிக்கை வளர
* இரத்தக் கொதிப்பு, ஆஸ்துமா, நீரிழிவு, ஒற்றைத் தலைவலி போன்றவற்றை நீக்கி உடல் ஆரோக்கியம் பெற
* தன் சக்தி அறிந்து, உள் உணர்ந்து ஆன்மீக வழியில் வளர்ந்து உற்சாகமும் ஊக்கமும் கொண்டு செவ்வனே பணி செய்ய அனைவரும் மேற்கொள்ள வேண்டிய பயிற்சி

### இலவச அறிமுக உரை

யாழ்ப்பாணத்தில்... சைவபரிபாலனசபை

நாள் :- 18.07.2005 திங்கட்கிழமை மாலை 6 மணி

இடம் :- சைவபரிபாலனசபை
நாவலர் ஆச்சிரம மண்டபம்
நீராவியடி.

பயிற்சி நாள்கள் :- 19.07.2005 செவ்வாய்க்கிழமை முதல் 24.07.2005 ஞாயிற்றுக்கிழமை வரை

பயிற்சி நேரம் :- காலை 6 மணிமுதல் 8 மணிவரை
அல்லது
மாலை 6 மணிமுதல் 8 மணிவரை

*அன்பில் மலருங்கள்* *உங்களை உணருங்கள்*

*அனைவரும் வருக!*

*மேலும் விவரங்களுக்கு:—*

வாழும் கலைஅற நிறுவனம், யாழ்ப்பாண மையம்.
தொ.பே. 077 9059 549, 077 9059 544. 222 6048, 0777 078349
(37849)(38-11-18) www.artofliving.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வன்னித்தம்பி பொன்னுப்பிள்ளை



மாவிட்டபுரம், சாயுடையை பிறப்பிடமாகவும் பெரியவிளான் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வன்னித்தம்பி பொன்னுப்பிள்ளை அவர்கள் நேற்று (16.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வன்னித்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி செல்லாச்சி மற்றும் வயிரவப்பிள்ளை (சமாதான நீதிவான்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பொன்னுத்துரை, திருமதி கனகம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிவபாலசிங்கம் மற்றும் சிவலிங்கம், திரவியம், விமலாதேவி, குலவீரசிங்கம், அமிர்தலிங்கம் (ஆசிரியர், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை), கலைவாணி (ஆசிரியை, அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஈவினை), இசைவாணி (ஜேர்மனி), தேவகி (சுவிஸ்), கலைக்குமரன் (கெயர்), கயல்விழி (லண்டன்), பாலசுப்பிரமணியம், வேலாயுதம், சௌதாம்பிகை, குணேஸ்வரி, மாலினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜெகதீசன் சுகந்தினி, ரவிச்சந்திரன், அஜந்தினி, கிருசாந்தன், தணிகா, பிரியங்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2005)திங்கட்கிழமை முற்பகல்10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பெரியவிளான் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-
வ.வயிரவப்பிள்ளை (மகன்- சமாதான நீதிவான்).
பெரியவிளான்,
இளவாலை. (37868) (39-11-12)

## திருமதி இராசா அன்னப்பிள்ளை (மணி)



விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசா அன்னப்பிள்ளை (மணி) நேற்று (16.07.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விடத்தற்பளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (37858) (39-11-12)

தகவல்:
இராசா குடும்பத்தினர்.
விடத்தற்பளை, மிருசுவில்.

## திருமதி சின்னம்மா - வீரசிங்கம்



### (இணுவில் மேற்கு, இணுவில்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி வீரசிங்கம் சின்னம்மா 16.07.2005 சனிக்கிழமை மதியம் சிவப்பேறடைந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் - பார்வதி ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருமதி கார்த்திகேசு நன்னிப்பிள்ளை, காலஞ்சென்ற அம்பலவாணர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குமாரலிங்கம் (ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்), திருமதி சாரதாதேவி சண்முகசுந்தரம், நாகேஸ்வரி மற்றும் கணேசமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி பாக்கியலக்சுமி, காலஞ்சென்ற சண்முகசுந்தரம் (தபால் அலுவலகம், மல்லாகம்) மற்றும் திருமதி நித்தியகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தவத்தழகன் (லண்டன்), திருமதி தமிழ்ச்செல்வி (லண்டன்), திருமதி கிருஸ்ணகுமார்,அசோகன் (சுவிஸ்), நிமலன் (லண்டன்), பாலகுமாரி (மாணவி சப்பிரகமுவா பல்கலைக்கழகம்),அனுஷா,கஜனி (மாணவிகள், யா.இணுவில் இந்துக்கல்லூரி), திருமதி மகேந்திரன் வளர்மதி (சுவிஸ்), இந்துமதி (சுவிஸ்),லதீசன், நிலான், சுபான், சஜீவன் (லண்டன்) மற்றும் காலஞ்சென்ற ஆதித்தன்,உதயகுமார், சுதாமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் , சானுயன்,ஆருஷன், டிலக்ஷன் (லண்டன்), வியாசன் (சுவிஸ்), முகிலன், மாதுமை (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் திருமதி செல்லம்மா அம்பலவாணர், திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (ஆசிரியை) ஆகியோரின் அருமை மச்சாளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (18.07.2005) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் மாலை 4 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.சு.ஸ்ரீராமச்சந்திரன் (பேறாமகன்).
கோகுலம்
பரராஜசேகரப் பிள்ளையாரடி,
இணுவில். (37870) (39-11-12)

## ஆசிரியர் தேவை

தமிழ்,சமூகக்கல்வி,கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்க ஆசிரியர் தேவை மற்றும் English Medium சமூகக்கல்வி கற்பிக்கக்கூடியவரும் தேவை.

கற்சுமி கல்வி நிறுவனம்
166,நாவலர் வீதி, யாழ்.
T.P.: - 0776510149, 0776510149 (37874)(38-11-18)

## அறிவித்தல்

அளவெட்டி பிரசித்த நொத்தாரிஸ் வ.தம்பிப்பிள்ளை அவர்களுடன் உறுதிகள் சம்பந்தமாக தொடர்புகொள்ள இருப்பவர்கள் அவரை அவரது அளவெட்டி வீட்டில் வந்து உரிய விவரங்களுடன் சந்திக்கவும். இருகிழமைகளுக்கு இவ்விடம் இருப்பார்.

வ.தம்பிப்பிள்ளை, பிரசித்த நொத்தாரிஸ், மலைவேம்படி, அளவெட்டி. (37853)(38-11-18)

## CHEMISTRY CENTRE

Temple Rd. (Green Park முன்னே)

ORGANIC
Mon., Wed., Fri. - 6 - 7 P.M.

INORGANIC
Mon., Wed., Fri. - 7 - 8 P.M.

By:- அன்பழகன் B.Sc. (37871)(38-11-18)

## பில் கிளாக் தேவை

எமது கடைக்கு பில் எழுதுவதற்கு (45 வயதுக்கு மேல்) கிளாக் ஒருவர் தேவை. உடனே நேரில் வரவும்.

சரஸ்வதி விலாஸ்,
195, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (37865)(38-11-18)



உ
சிவமயம்
சுதுமலை வடக்கு ஈஞ்சடி
ஞான வைரவர் தேவஸ்தானம்

## தேர்த்திருவிழா

17.07.2005 ஞாயிற்றுக்கிழமை
அபிஷேகம் - காலை 8 மணி
பூசை
வசந்த மண்டபப்பூசை - காலை 10.30 மணி
தேரில் ஆரோகணித்தல் - நண்பகல் 12 மணி
பச்சை சாத்துதல் - மாலை 4.30 மணி
தேர் இருப்பிடம் வந்தடைந்ததைத் தொடர்ந்து மகேஸ்வரப்பூசை நடைபெறும்.

தர்மகர்த்தா சபையினரும்
தேர்த்திருவிழா உபயகாரரும்.

விளம்பர அனுசரணை:
அம்பாள் களஞ்சியம் அன்
கிறைன்டிங் மில்
அம்மன் கோயிலடி
சுதுமலை. (37843)(38-11-18)

## நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன், சினேகா,கிரண், வடிவேல் நடித்த

### சின்னா (ரீல்ஸ்)




கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி-43363)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

ஷாம், லைலா, அஸின், பூஜா நடித்த

### உள்ளம் கேட்குமே (ரீல்ஸ்)



காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே).

## ராஜா யாழ்ப்பாணம்

விக்ராந்த், லட்சுமிராய், வடிவேல் நடித்த

### கற்க கசடற (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

## ஏலவிற்பனை

எப்போது - 2005.07.24

எவ் வகைப் பொருள் -
இலத்திரனியற் பொருள்கள்
மின்னியற் பொருள்கள்
ஊர்தி உதிரிப்பாகங்கள்
புடைவை வகை
அழகுசாதனப் பொருள்கள்

எங்கே ......
நாளை எதிர்பாருங்கள். (44213)(38-11-12)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கமலாதேவி நாகராசா



தாவடியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி கமலாதேவி நாகராசா 15.07.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் நாகராசா (தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - பார்பதிப்பிள்ளையின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்துவின் அருமை மருமகளும் கந்தராசா (ஆஸ்திரேலியா), யோகராஜா (ஜேர்மனி), திருமதி ப்ா.ராஜரஞ்சினி (கனடா), தேவராஜா (கனடா), திருமதி ரா.ராஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி க.கிருபாநந்தி (ஆஸ்திரேலியா), திருமதி யோ.தர்ஷிகா (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (கனடா), திருமதி தே.ரேகா (கனடா), விக்கினராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரணவன் (ஆஸ்திரேலியா), மதுஷன், மிதுரா (ஜேர்மனி), மைலோன், ஓவியா (கனடா), ஸ்ருதிகா, ஆருகன் (கனடா), ராகவி, தரனியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் கொழும்பு), இராஜலஷ்மி (லண்டன்), இரத்தினேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்) மற்றும் சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவபுஸ்பம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சங்கரசிவம்பிள்ளை மற்றும் நாகேஸ்வரி (லண்டன்), நாகேஸ்வரன் (வழக்கறிஞர் லண்டன்), மனோகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சுகிர்தாம்பிகை (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொரன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
தூ.நாகராசா (கணவர்) *கனடா-0019052014785),*
சி.சிவசுப்பிரமணியம் (சகோதரன்)
*கொழும்பு-0112591017.*
(37848)(38-11-12)

## திருமதி பரதராசா சரஸ்வதி (பூவதி)



வடலியடைப்பு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வலந்தலையைப் வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் வசித்தவருமான பரதராசா சரஸ்வதி (பூவதி) அவர்கள் (14.07.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரதராசாவின் மனைவியும் பொன்ராசா (ஜேர்மனி), தில்லேஸ்வரி, பேரின்பநாதன் (சுவிஸ்), அருளேஸ்வரி (லண்டன்), அருளேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வரதலக்சுமி (ஜேர்மனி), சிவனேசராசா,விக்னேஸ்வரி (சுவிஸ்), மகேந்திரம் (லண்டன்), அருந்தா (ஜேர்மனி), கிரிசாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபி, மயூரி (ஜேர்மனி), சாந்தரூபி, பிரியதர்சினி, மயூரன் , அஸ்வினி, ஆதவன் (சுவிஸ்), ஆரணி,ஆரணன், ஆரணியன் (ஜேர்மனி), ஷாம், ஸ்ரிவ் (லண்டன்), நவீன், சாணு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
இந்துக் கல்லூரி வீதி,
வடலியடைப்பு,பண்டத்தரிப்பு. (37867)(38-11-12)

## வைத்திலிங்கம் - பசுபதிப்பிள்ளை



### (வர்த்தகர் - நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் - பசுபதிப்பிள்ளை (வர்த்தகர்) 15.07.2005 வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் கணவரும் சந்திராதேவி (தவம் - இந்தியா) அவர்களின் தந்தையாரும் மகாலிங்கம் (லிங்கம் லண்டன்) அவர்களின் மாமனாரும், அபி, ரஜி, துசி,மதுரா, அருள்,அஸ்வரியா, அபிக்குமார் ஆகியோரின் பேரனும் காமாட்சி (மல்லாவி), கற்பகம் (லண்டன்), காலஞ்சென்ற பூரணம் (விநாயகபுரம்) மற்றும் செல்லம்மா (கனடா), காலஞ்சென்றவர்களான தனுக்கோடி (வட்டக்கச்சி), கணபதிப்பிள்ளை (இராமநாதபுரம்) மற்றும் தில்லையம்பலம் (K.T.C. கிளிநொச்சி), இராசம்மா (கனடா), வள்ளிப்பிள்ளை (இராமநாதபுரம்),கோவிந்து (மல்லாவி), காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.07.2005) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நெடுந்தீவு மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை.தில்லையம்பலம் (தம்பி).
(K.T.C கிளிநொச்சி)
இரண்டாம் வட்டாரம்,
நெடுந்தீவு மேற்கு. (37862)(38-11-12)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு உடனடி நியமனம் வழங்கமுடிவு

கொழும்பு,ஜூலை17

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் 180 நாள்கள் பணிபுரிந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அனைவரும் உடனடியாக நிரந்தர சேவைக்குள் உள்ளடக்கப்படவிருக்கின்றனர்.

இதற்கான பணிப்புரையை மத்திய கல்வியமைச்சுச் செயலாளர் தாரடி மெல் மாகாணக் கல்வியமைச்சுக்கு நாளை அனுப்பவிருக்கின்றார்.

இத்தகவலை கல்வியமைச்சு அதிகாரிகள் நேற்றுத்தம்மிடம் தெரிவித்தனர் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாக மாகாணக் கல்வியமைச்சு சமர்ப்பித்த கோரிக்கையின் பேரில் இந்த நியமனம் வழங்கப்படவிருக்கின்றது என்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

(3)

# ஆழிப்பேரலையால் முஸ்லிம்களுக்கே கூடுதல் பாதிப்பு என மதிப்பீடு

## ஆரம்பகட்ட அறிக்கை வெளியிடப்பட்டது

கொழும்பு, ஜூலை17

ஆழிப்பேரலையால் ஏற்பட்ட அழிவுகளில் முஸ்லிம் மக்களுக்கே கூடுதலான இழப்புகள் ஏற்பட்டுள்ளன என முஸ்லிம் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் விவரங்களை அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல்களின் அடிப்படையில் சேகரித்த இந்த நிறுவனம் அறிக்கை வடிவில் அதை வெளியிட்டுள்ளது.

அழிப்பேரலையால் மொத்தமாக நாட்டில் ஏற்பட்ட அழிவுகளில் கூடுதலான பாதிப்பு முஸ்லிழ் சமூகத்துக்கே ஏற்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

. மொத்த மரணங்களில் 41 சதவீதம் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் -

காயமடைந்தவர்களில் 49 சதவீதம் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் - அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சேதங்கள் குறித்து மாவட்ட ரீதியாகத் திரட்டப்பட்ட தகவல்கள் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. (3)

## தெல்லிப்பழைக்கு நேற்று ஆளுநர் வருகை

# உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் சிகிச்சைப் பிரிவுகள் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை17

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு என்பன நேற்று வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று இவற்றை வைபவ ரீதியாகத் திறந்துவைத்துப் பணிகளைத் தொடக்கிவைத்தார்.

உலக வங்கியின் அனுசரணையுடன் 'நீர்ப்' திட்டத்தின் கீழ் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலையைத் திறந்து வைப்பதில் பல்வேறு தடைகள் ஏற்பட்டிருந்தன. எனினும் பல்வேறு தரப்பினரும் எடுத்த முயற்சிகளையடுத்து இந்த வைத்தியசாலை நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ வைத்தியசாலையின் பிரதான கட்டடத்தின் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து, நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இதன்பின்னர் அங்கு சமயப் பெரியார்கள் ஆசியுரைகளை வழங்கினார்கள்.

இதனையடுத்து புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவையும் ஆளுநர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். அதன்பின் வைத்தியசாலையின் உள்ளக நிலைமைகளை அவர் பார்வையிட்டார். பின்னர் அங்கு இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் ஆளுநர் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா, சுகாதார அமைச்சின் ஆலோசகர் டாக்டர் ஜெகநாதன், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சின் ஆலோசகர் எஸ்.சிவதாசன், யாழ்.மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், படை அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நேற்றைய வைபவத்தில் கலந்துகொள்ள வந்திருந்த ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. பலாலி பெருந்தளத்தில் இருந்து அவர் பலத்த பாதுகாப்புடன் தெல்லிப்பழைக்கு அழைத்துவரப்பட்டிருந்தார். (ஐ-8-7-51)

# அரச அதிபர்கள் வவுனியாவில் சந்திப்பு

வவுனியா,ஜூலை17

புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் ஹரீம் பீரிஸ், ஆழிப்பேரலைக்குப் பின்னர் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக அமைக்கப்பட்ட செயலணியின் தலைவர் மனோ தித்தவெல ஆகியோர் நேற்று வவுனியாவில் வடக்கு - கிழக்கு மாகாண அரச அதிபர்களைச் சந்தித்தனர்.

வவுனியா அரச செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஆழிப்பேரலை அனர்த்த, புனர்வாழ்வு, மீள்கட்டுமானப் பணிகள் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட நவடிக்கைகள் பற்றி அரச அதிபரிகளுடள் இவர்கள் இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

ஹரீம் பீரிஸூம் மனோ தித்தவெலவும் வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் விஜயம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## வந்தாறுமூலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுவிட்டுத் தப்பிவிட்டார் என்றும் -

ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

· மட்டக்களப்பு மாவட்டத்தில், இராணு வக் கட்டுப்பாட்டுப் பகுதியில் சமாதான காலத்தில் இடம்பெற்ற படையினருக்கு எதி ரான முதலாவது தாக்குதல் சம்பவம் இது என்று கூறப்பட்டது. (ஐ-3-13)

## கருணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்றவர் எனக் கருதப்படும் நபர் ஒருவரைப் பொலீஸார் பின்னர் பஸ் ஒன் றில் பயணம் செய்யும்போதுகைது செய்தனர் என்றும் - அவரிடமிருந்து பிஸ்டல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பொலீஸார் கைதுசெய்த நபர் இன்று அல்லது நாளை நீதிவான் முன் ஆஜர்செய்யப்படுவார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ-3)

## பொது அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளையும் சார்ந்த பிரதிநிதிகள் இந்த ஒன்றுகூடலுக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

சகல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் இந்த ஒன்றுகூடலில் பங்குகொள்ளுமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புக் களின் ஒன்றியம் கேட்டிருக்கிறது. (ஐ)

# உளவளத்துணை அபிவிருத்தி உதவியாளராக 12 பேர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூலை17

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 12 பேர் உளவளத்துணை அபிவிருத்தி உதவியாளர்களாக (Counselling Development Assistant) பட்டதாரி தரத்தில் நியமனம் பெற்றுள்ளார்.

01.07.2005 முதல் பெண்கள் வலுவூட்டல் சமூக நலத்துறை அமைச்சினால் மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் உள்ள பிரதேச செயலகங்களில் மேற்படி நிரந்தர நியமனம் பெற்றவர்களின் பெயர்களும் பிரதேச செயலர் பிரிவுகளும் வருமாறு:-

எஸ்.அபிராமி (பிரதேச செயலகம் - நல்லூர்), திருமதி ரி.சுதாகரன் (பிரதேச செயலகம் - கோப்பாய்), எஸ்.சிவாஜினி (பிர தேச செயலகம் - உடுவில்), எஸ்.பிறேம லோஜி (பிரதேச செயலகம் - சங்கானை), எஸ்.சுரேஷ் (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), என்.உதயகுமார் (பிரதேச செயலகம் - தெல்லிப்பழை), ஏ.அருமைத்துரை (பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), கே.மதிவதனன் (பிரதேச செயலகம் - மட்டக்களப்பு), ஏ.பாரூக் (பிரதேச செயலகம் - நாவக்கபிட்டி), எம்.ஆர்.எம்.நலீம் (பிரதேச செயலகம் - பலாங்கொட), எம்.ஐ.எம்.ஜஸ்மி (பிரதேச செயலகம்- மூதூர்), எம்.எவ்.எம்.அசார் (பிரதேச செயலகம் - கல்பிட்டி).

(எ-185)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்குத் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் நடமாடலாம். ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அவர்கள் ஆயுதங்களுடன் பிரவேசிக்கமுடியாது.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் இருப்பதை இராணுவம் ஒருபோதும் அனுமதிக்காது. இதையும் மீறி இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நுழையும் பட்சத்தில் யுத்த நிறுத்த உடன் படிக்கையின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் - என்றார் அவர்.

(ஐ-3-13)

## மருந்து விற்பனையாளர் விசேட கலந்துரையாடல்

தமிழீழ சுகாதார சேவையினர் மருந்து விற்பனை உரிமையாளர்கள் மற்றும் பொறுப்பு வைத்தியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை லங்கா ஆயுள்வேத சித்த மருத்துவக்கல்லூரி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளனர்.

இன்று நண்பகல் 12 மணிக்கு தனியார் ஆங்கில மருந்து விற்பனை உரிமையாளர்களுக்கான ஒன்றுகூடலும் -

பிற்பகல் 2 மணிக்கு தனியார் சுதேச மருத்துவ நிலைய உரிமையாளர்கள், பொறுப்பு மருத்துவர்களுக்கான ஒன்றுகூடலும் -

பிற்பகல் 4 மணிக்கு தனியார் ஆங்கில மருந்து சேவைகள் உரிமையாளர்கள், பொறுப்பு மருத்துவர்களுக்கான (ஆய்வு கூடம், பற்சிகிச்சை, கண்சிகிச்சை பொதுமருத்துவம், ஆலோசனை நிலையங்கள்) ஒன்றுகூடலும் நடைபெறவுள்ளன.

(எ-202)

ஐடியல் அக்கடமி
67/5, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
தரம் 9 முதல் O/L வரை
சகல பாடங்களும் ஆரம்பமாகின்றது.
ஆரம்பம் 18.07.2005 திங்கள் மாலை 4.00 மணி
கணித ஆசிரியரும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்
ஆசிரியர்கள் விவரம் நாளைய உதயனில்
(37864) (38-11-45)

அதிரடி விலைக் கழிவில்
10500/=
வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் G.S.M, மொபிரெல் G.S.M மேசைத் தொலைபேசிகள் பூட்டித் தரப்படும்.
டயலொக் 500/=, மொபிரெல் 300/= பைக்கேச் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.
தொடர்புகளுக்கு:
பவர் செலூலர் டிரேடிங் கம்பனி
Office 185, முதலாம் மாடி கஸ்தூரியார் வீதி,
(வின்சர் தியேட்டர் எதிராக)
Shop: 205/01 கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
T.P.: 0712 - 399220, 0714 - 182500
(C-43663) (38-11-45)




EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஆழிப்பேரலை நிவாரணத் திட்டங்களுக்கு மைக்ரோசொவ்ட் நிறுவனம் நிதியுதவி

உலகளாவிய கணினி மென்பொருள் உற்பத்தி நிறுவனமாகிய மைக்ரோசொவ்ட் நிறுவனம் 2 கோடி ரூபா பெறுமதியான இரு நிதி உதவிகளை இரண்டு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது.

மகளிர் அபிவிருத்தி சம்மேளனத்திற்கு ஒருகோடி 20 லட்சம் ரூபாவும், அர்த்தாச்சார்ய மன்றத்திற்கு 80 லட்சம் ரூபாவும் வழங்கப்படுகிறது. இது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சமூகங்களைக் கட்டியெழுப்ப மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் சமூக விவகார நிகழ்ச்சித்திட்ட முயற்சிகளில் ஒரு பகுதியாகும்.

இக்குறிப்பிட்ட நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் இவ்வுதவியைக்கொண்டு ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறு தாபனங்களுக்கும், குடும்பங்களுக்கும் கடன் வசதி தந்து உதவுவதன் மூலம் உள்ளூர் சமூகங்களை மீளக் கட்டியெழுப்ப பெரும் பங்காற்றிட முடியும். மேலும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வு, புனர்நிர்மாணமும் முன்னேற்றமடைய இம்முதலீடுகள் உதவும்.

மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் தென்கிழக்காசிய பொது முகாமையாளர் பேகல் புஷ்லெகம் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் ஆழிப்பேரலை ஏற்பட்ட பகுதிகளில் புனர் நிர்மாணத்தை மேற்கொள்ள வசதிகளும் உதவிகளும் தருவதை மைக்றோசொப்ட் தனது இலக்காகக் கொண்டிருக்கிறது.

இதனால் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்த முடியும் என நாம் நம்புகிறோம். மக்களுக்கான இவ்வுதவி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிலுள்ளோருக்கு மிக விரைவில் வழங்கப்பட்டு நிவாரண நடவடிக்கைகளை அந்நிறுவனம் மேற்கொள்ள முடியும். இந்நிதியை நன்கு தாபிக்கப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களாகிய மகளிர் அபிவிருத்தி சம்மேளனம் மற்றும் அர்த்தாசார்ய மன்றம் ஆகியவற்றின் ஊடாக உதவுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர்களுக்குச் சிறுநிதி உதவித்துறையில், குறிப்பாக பெண்கள் முன்னேற்றத்திலும், வறுமையொழிப்பிலும் பத்து ஆண்டுகளுக்கும் மேலான அடிமட்ட அனுபவம் இருக்கிறது. அத்தோடு அவர்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களில் செயலூக்கத்துடன் பணிபுரிகின்றார்கள். எதிர்வரும் ஐந்தாண்டுகளில் நாம் இச் சிறு நிதி உதவியைப் பெற்று பயனடையக்கூடிய 45, 000 பேர்களை நேரடியாகத் தொடர்புகொள்ள் திட்டமிட்டிருக்கின்றோம்.

மகளிர் அபிவிருத்தி சம்மேளனமானது (WDF) சிறு நிதியுதவியை மையமாகக் கொண்டதொரு அரசசார்பற்ற நிறுவனமாகும். இது 1989 ஆம் ஆண்டு கிராமிய மட்டத்திலான ஜனசவிய வறுமையொழிப்புத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும்.

பெண்கள் தாமாகவே இதை நிர்வகித்துக்கொள்ளும் இந்நிறுவனத்தில் 32,000க்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர். சேமிப்பை ஊக்குவித்து கடன் வசதிவழங்குவதே இதன் பிரதான குறிக்கோளாகும்.

இதற்கென உருவாக்கப்பட்ட 72 ஜனசக்தி வங்கி சபைகளின் ஊடாக தற்போது இது துடிப்பாகச் செயல்படுகின்றது. இவ்வங்கிச் சபைகள் வங்கிகளைப் போலவே செயலாற்றி தொழில் முயற்சிகளுக்குக் கடன் வழங்கக்கூடியவையாயிருக்கின்றன.

மகளிர் அபிவிருத்தி சம்மேளனத்தின் பொதுமுகாமையாளர் எஸ்.பி.சிரியானி மங்கலிக்கா கூறுவதன்படி, ''நாம் இலங்கையில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றிலிருந்து வருகிறோம். எமது மூலவளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் எமது நடவடிக்கைகள் பெண்களை முன்னிலைப்படுத்தி உறுதியாக்கி வறுமையை ஒழிப்பதுமாகும்.

மைக்ரோசொவ்ட் போன்ற நிறுவனங்கள் சமூகத்தின்பால் தாம் கொண்டுள்ள அதே பொறுப்புணர்வைக் கொண்டிருப்பது எம்மைப்போன்ற கிராமிய அரசசார்பற்ற நிறுவனங்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது.

இத்தொகையானது எம் சமூகத்தின் 32,000 குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை, குறிப்பாக ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களது வாழ்க்கையை உயர்த்த மிக உதவியாக இருக்கும்'' - என்றார்.

அர்த்தாச்சர்ய மன்றம் (AF) வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களது வறுமை நிலையைக் குறைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் அரசசார்பற்ற நிறுவனமாகும். இது 120 கிராமிய அடிப்படையிலான வங்கிக் கட்டமைப்பின் வழியாய் தென்னிலங்கையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயங்குகின்றது.

வறுமையைக் குறைத்து சமூகத்தில் வெகுவாக ஒதுக்கப்பட்ட வறியவர்களை ஊக்கப்படுத்தியும், செயற்படுத்தியும் ஒரு சிறு நிதிய கலாசாரத்தை அவர்களில் தோற்றுவிப்பதையே AF தனது செயற்பாட்டுத் திறமையாகக் கொண்டிருக்கின்றது. சிறு நிதியமானது சேமிப்பின் பல்வேறு பலாபலன்களைப் பயன்படுத்தி உறுப்பினர்கள் தமக்கிடையிலேயே கடன் வசதி பெற்றுக்கொள்வதை AF பயன்படுத்தி உதவுகின்றது.

மைக்ரோசொவ்டின் இப்பரோபகார சமிக்ஞையைப் பற்றி கருத்து தெரிவிக்கும் அர்த்தாச்சார்ய மன்ற நிறைவேற்று இயக்குநர் சதீஸ் டி மெல் கூறுகிறார். ''ஆழிப்பேரலைப் பேரழிவின் பின்னர் உடனடியாகவே மக்கள் தம் ஜீவனோபாயத்தை மீண்டும் கட்டியெழுப்பக் கடன் தேவைப்பட்டவர்களாயிருந்தனர். ஆனாலும், சிறுநிதி நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவத் தயங்கி நின்றன.

பெற்ற கடனைத் திருப்பித் தர அவர்களால் இயலாது போய் விடுமோ என அஞ்சினர். இதன் காரணமாக ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கு இனிமேல் கடனுதவி தரப்பட மாட்டாது என்ற அறிவிப்பும் வெளியிடப்பட்டது. உதவி அதிகமாகத் தேவைப்பட்ட ஒரு காலகட்டத்தில், மற்ற தாபனங்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ மறுத்தவேளையில், மைக்ரோசொவ்ட் நிறுவனம் முன்வந்து மிக தேவைப்பட்டதாயிருந்த நிதியைத் தந்தது. மைக்ரோசொவ்டிற்கு நன்றி.

மேலும், இதையிட்டு இலங்கை மைக்ரோசொவ்ட் நிறுவனத்தின் தேசிய முகாமையாளர் சிறியான் டி சில்வா விஜேரட்ன கூறுகையில் :-

இந்நிதியுதவியானது முற்றுமுழுவதுமான மான்யங்களாக இருப்பதாகவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இவற்றை சிறு நிதியுதவிக்காக மாத்திரமே பயன்படுத்த முடியும் என்றும் கூறினார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறு கைத்தொழில்களை ஆதரிப்பதென்ற மைக்ரோசொவ்ட் நிறுவனத்தினது முடிவிற்கான காரணம் இச்சமூகங்கள் தங்கள் வாழ்வை இவ்வழியினால் மட்டுமே மீளக்கட்டியெழுப்பி அபிவிருத்தி செய்ய முடியும் என்பதே.

இது ரொக்கப் பணம், கணினி மென்பொருள், ஆலோசனைச் சேவை, அன்றாட மனிதாபிமான சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இம் முயற்சிகள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் ஒன்றிணைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டவையாகும்.



அண்மையில் PC House Optoma Projector களை அறிமுகம் செய்துவைத்தது. கொழும்பு பிளாஸா ஹோட்டலில் நடைபெற்ற இதன் அறிமுக விழாவின்போது Optoma Corporation நிறுவனத்தின் ஆசிய பிராந்திய உதவி முகாமையாளர் ஹுவார்ட்டிங் உரையாற்றுவதையும், PC House இன் சந்தைப்படுத்தும் பிரிவின் தலைவர் ரிஸ்வான் அனீஸ், பொதுமுகாமையாளர் சாலிய விமலரட்ண, தலைவர் எஸ். எச். எம். ரிசான், Optoma Corporation இன்ஆசிய பிராந்தியத்திற்கான உற்பத்தி முகாமைத்துவ திணைக்களத்தைச் சேர்ந்த சென் யூசியாங் மற்றும் PC House இன் உற்பத்தி முகாமையாளர் சந்தமாலி பிரமதிலக ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.


நல்ல தொழில்
வாய்ப்புகளைப் பெற
CIMA சிறந்த வழிகாட்டியாகும்.

CIMA ஒரு பட்டப்படிப்பிற்குச் சமமான கல்வித்தகைமையைக் கொண்டதாகும். இது மாணவர்களுக்கு தொழிற்துறை சார் நிபுணத்துவத்தை வழங்குவதால் அவர்கள் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சிறந்த தொழில்வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மேலும் CIMA மாணவர்களிடம் இருக்கும் தகைமைக்கு மேலதிகமாக பல்வேறு வகையான திறமைகளையும், பயிற்சிகளையும் அவர்களுக்கு வழங்குகிறது. அத்துடன் மாணவர்களுக்கென கடன் திட்டத்தையும் அது கொண்டுள்ளது. அனுமதிகள் இப்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அழையுங்கள் : 2503880

LEO BURNETT

CIMA

# விளையாட்டு வீரர்களுக்குப் புதிய ஊட்டச்சத்து Astron மற்றும் Power World அறிமுகம் செய்கின்றன

பவர்வேள்ட் பிட்னெஸ் நிலையங்கள் மற்றும் அஸ்ட்ரன் லிமிட்டெட், சக்தி மற்றும் நல்லாரோக்கியத்தை வழங்கும் எனேர்ஜி எட்ஜ், சிலிம் எட்ஜ், பவர் எட்ஜ், மஸில் எட்ஜ், றிக்கவறி எட்ஜ் ஆகிய ஐந்து உற்பத்திகளின் விற்பனையை இலங்கையில் ஆரம்பித்து வைக்கின்றன.

இவை இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்துகின்றன. வாடிக்கையாளர்களிடையே இவற்றுக்கு நல்ல வரவேற்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த உற்பத்திகள் யாவும் பவர்வேள்ட் பிட்னெஸ் நிலையத்தின் தலைவர் தலாவு அலைலிமாவாவினால் உருவாக்கப்பட்டது.

இவர் தேசிய விளையாட்டுகள் சபையின் முன்னாள் அங்கத்தவரும், தற்போதைய இலங்கைச் சாதனையாளரும் மற்றும் தேசிய மெய்வல்லுநர் உடல்வலிமை, ஊட்டச்சத்து, விளையாட்டு ஆலோசகருமாவார்.

இந்த உற்பத்திகளைத் தயாரித்த பவர்வேள்ட் பிட்னேஸ் சென்டர் எட்ஜ் உற்பத்திகளை உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும், விநியோகிக்கவும் இலங்கையில் நிரூபிப்பதற்காக அஸ்ரன் மூலப்பொருட்களை அமெரிக்காவிலிருந்தும், இயற்கை உணவு மூலகங்களிலிருந்தும் இறக்குமதி செய்கின்றது. உயர்ந்த தரமுடைய ஊட்டச்சத்துகள் கொண்ட உபஉணவு வரிசையாக எட்ஜ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞான ரீதியான கொள்கைகளின் அடிப்படையில் ஊட்டச்சத்தை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதே எட்ஜ் உற்பத்திகளாகும். சரியான நேரத்தில் தேவைப்படும் சரியான வகைச் சக்தியை வழங்குவதன்மூலம் உடம்பின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவுசெய்வதற்காகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இந்த உற்பத்தி வரிசைகளின் உயர் தரத்தையும், பாதுகாப்பு நியமங்களையும் உறுதிப்படுத்தும் வகையில் முறைப்படி தயாரிக்கப்பட்டு நன்கு பரிசோதிக்கப்பட்டுள்ளது.

இந்த எட்ஜ் உற்பத்திகளை உடற்பயிற்சியுடன் இணைத்து சரியாக உபயோகிக்கும்பொழுது இந்த உற்பத்திகள் தசைநார்களுக்கு ஊட்டச்சத்துகளை வழங்குவதுடன் அதனைக் கட்டியெழுப்பும் வல்லமையையும் கொண்டுள்ளது. அத்துடன் மேலதிக கொழுப்பைக் குறைப்பதற்கும் அல்லது கட்டுப்படுத்துவதற்கும் போட்டியின்போது மிகச் சிறந்த வல்லுநரை வெளிக்கொணரவும் உடம்பில் ஏற்படும் வலி போன்றவை விரைவில் குணமடையவும் இது உதவுகின்றது.

இந்த ஐந்து உற்பத்திகளும் நியாயமான மற்றும் யாராலும் வாங்கக்கூடிய விலைகளில் கிடைக்கின்றன. இந்த உற்பத்திகள் பவர்வேள்ட் பிட்னெஸ் நிலையங்களிலும், தெரிவுசெய்யப்பட்ட மருந்துக் கடைகள் மற்றும் ஊட்டச்சத்து, உடல்நல உற்பத்திகளை விற்பனைசெய்யும் ஏனைய நிறுவனங்களிலும் சாசெற் பக்கெட்டுகளில் வசதியான விலைகளில் விற்பனையாகின்றன.

### எனேர்ஜி எட்ஜ்

இது பயிற்சிக்காலத்தின்போது குறிப்பாக தசைநார்களுக்கு சக்தியை வழங்கக் கூடியது. அத்துடன், இது சரிசம அளவிலும் தொடர்ந்து தங்கியிருக்கக்கூடிய வகையிலும் உடலுக்கு சக்தியை வழங்கக்கூடியது. இது எலக்ரோலைட் (Electrolyte) - சரிசமமான பானமாக இருப்பதால் உடம்பினால் சரியான முறையில் உறிஞ்சப்படக் கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது. நடத்தல், துள்ளுதல், விளையாட்டுகள் அல்லது கடினமான பயிற்சிகள் போன்ற எந்த வகையான நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிப்பட்டவர்களும் இதனை உபயோகிக்கமுடியும்.

எட்ஜ் உற்பத்தி வரிசைகளைக்கொண்ட ஒவ்வொரு சாசெற் பக்கெட்டுகளும் 150 கிலோ ஜூலஸ்களுக்கு (Kilojoules) இடையிலும் 37.5 கலோரிகளுக்கு (Calories) இடையிலும் உருவாக்கப்படுகின்றன.

இந்தச் சக்தியும் சேமிக்கப்படும் கலோரிகளும் மல்தோடெக்ஸ்ரின் புருட்டோஸ் போன்ற காபோஹைதரேட்ஷ் மூலம் கிடைக்கின்றன. இந்த உற்பத்திகள் அங்கீகரிக்கப்பட்ட உணவு நிறங்கள், வாசனைகள், உப்பு மற்றும் எலக்ட்ரோலைட்ஸ் என்பவற்றைக் கொண்டுள்ளன.

### சிலிம் எட்ஜ்

இது சக்தியின் ஆரம்பமாக உபயோகிக்கப்படுகின்றதும், தசைநாரில் அமைந்துள்ளதுமான மித்தோசொன்டிரியா (Mitochondria) (செல்களின் வெப்பமான பகுதி)வுக்குள் கொழுப்புக் கலங்களைச் செலுத்துகின்றது.

உண்மையில், இந்த உற்பத்தியின் அதியுயர் செறிவு உடற்பயிற்சி செய்யும்பொழுது பெருமளவிலான உடற் கொழுப்பு சக்தியாகப் பாவிக்கப்படுகிறது. ஒரு சாசெற் பக்கெட்டில் உள்ள சிலிம் எட்ஜில் அடங்கியுள்ள உட்பொருட்களாக ஒரு கலவையில் எல்- கானிட்டின் (LCarnitine) 1,000 மில்லி கிராம்களையும் நிரப்பியுடன் அங்கீகரிக்கப்பட்ட உணவு வாசனைகளையும் கொண்டுள்ளது.

இந்த உற்பத்தி அதிகமான நிறையுடையவர்களுக்கும், சகித்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

### பவர் எட்ஜ்

இது உயிர்வளியற்ற சக்தியைப் பாவித்து உருவாக்கப்பட்டது. இது தசைநார்கள் விரைவாக சுருங்க உதவுகின்றது. இது தனிப்பட்டவர்கள் தூக்குவதற்கும், எறிவதற்கும், தொடக்க நிலையிலிருந்து ஓடுதல் போன்ற செயற்பாடுகளுக்கும் வசதியளிக்கின்றது.

ஒவ்வொரு சாசெற் பக்கெட்டுகளும் 2,000 மில்லிக்கிராம் சிறியேட்டின் மோனோஹைதிடிரோறைக் (Creatine Monohydrate) கொண்டுள்ளது. அத்துடன், இது நிரப்பிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உணவும், நிறங்கள் மற்றும் வாசனைகளையும் கொண்டுள்ளது.

வேகமாக ஓடுதல், பாரம் தூக்குதல், இடைத்தூரம் ஓடுதல் மற்றும் எறிதல் போன்ற தீவிர செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களின் தேவையைக் கருதி இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

### மஸில் எட்ஜ்

தசைநார் திசுக்களைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான போஷாக்குகளை இது உடலுக்கு வழங்குகின்றது. அதேநேரம், ஹோமோன் மற்றும் செல்லூலர் ஆகிய இரண்டினதும் செயற்பாடுகளை மேலும் உயர்த்துகின்ற நோயாளர் பாதிக்கப்படாத முறைமையை மேலும் வளர்க்கும் செயற்பாடுகளிலும் இது ஈடுபடுகின்றது.

இது 7 கிராம் பாற்புரதத்தைக் கொண்டுள்ளதுடன் மேலும் முக்கியமாக நிரப்பிகள் அங்கீகரிக்கப்பட்ட வாசனைகள் மற்றும் நிறங்கள்உட்பட பலபொருட்களால் உருவாக்கப்பட்டது. இந்த உற்பத்திப் பலத்தையும், தசைநார்களின் அளவையும் அதிகரிப்பதற்காக பாரம் சம்பந்தமான பயிற்சிகள் மற்றும் விளையாட்டுகள் மற்றும் அதிதீவிர பயிற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கும் இது மிகவும் உகந்தது.

### றிக்கவறி எட்ஜ்

இது தசைநார் விடுபடுதலை விரைவுபடுத்துதல், மெல்லிய தசைநார்களை அபிவிருத்தி செய்தல், நோய்களிலிருந்து பாதுகாக்கும் முறைமைகளின் செயற்பாடுகளை மேலும் அதிகரிக்க உதவுதல் போன்றவற்றிற்கு ஏற்றவாறு விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது கொழுப்பு இரசாயனங்களை உயர்த்துவதுடன் ஹோமோன் மட்டத்தின் வளர்ச்சியைக் குறைத்தல் என்பவற்றிற்கு உடம்பிற்கு உதவுகின்றது.

இது தசைநார் சிக்கல்களிலிருந்து விரைவாகவிடுபடும்சக்தியை அதிகரிப்பதற்கு உடம்பிற்குஉவுகின்றது.

இதில் 2,000 மி.கி எல் - குளுடேமின் (L-Glutamine) மற்றும் நிரப்பியுடன் அங்கீகரிக்கப்பட்ட வாசனைகள், நிறங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. தீவிர உடற்பயிற்சி, கடினமான விளையாட்டுகள் அல்லது பயிற்சி, காயத்திலிருந்து குணம் அடைதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த உற்பத்தி மிகவும் பொருத்தமானது.

இந்த எட்ஜ் உற்பத்திகள் வாடிக்கையாளர்களின் நலன்களை அதிகரிக்கும் முகமாக விரைவில் கரையக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நலன்கள் இந்த உற்பத்தியின் செறிவில் தங்கியுள்ளது. இந்தச் செறிவு 6 வீதத்திலிருந்து 8 வீதம் வரை உடம்பில் உள்ள காபோஹைதரேற் சேமிப்பை உயர்த்தும் அதேசமயம், வியர்வை காரணமாக இழக்கப்படும் திரவங்களை விரைவாக மீள் நிரப்புகின்றது. இது நடுத்தர மற்றும் நீண்ட தூர ஓட்டங்களுக்கும், குழு விளையாட்டுகளுக்கும் பாவிக்கச் சிறந்தது. ஹைபோரொனிக் மாற்றீடு (அதிகமான நீரைச் சேர்ப்பதன் மூலம் 2 வீதம் முதல் 5 வீதம் வரையிலான செறிவு) வெப்பமான காலநிலையில் பயிற்சியின் மூலம் உருவாகும் களைப்பைச் சமாளிப்பதற்கு மிகச் சிறந்ததாகும்.

இதேசமயம், ஹைபர்ரொனிக் பானம் (தண்ணீரைக் குறைப்பதன் மூலம் 9 வீதம் முதல் 15 வீதம் வரை செறிவு) நீண்ட தூர ஓட்டங்களின் போது தசைநார்களின் கிளைகோஜென் சேமிப்பை மீண்டும் வழங்குவதற்கு உதவுகின்றது. எனேர்ஜி எட்ஜ், சிலிம் எட்ஜ் மற்றும் பவர் எட்ஜ் சாசெற் பக்கெட்டுகள் தண்ணீரில் கரைத்து உடல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன் 30 முதல் 45 நிமிடங்களுக்கிடையில் இந்தப் பானத்தைக் குடிக்கவேண்டும். அதே சமயம், மஸில் எட்ஜ் மற்றும் றிக்கவறி எட்ஜ் ஆகியன உடல் ரீதியான நடவடிக்கைகளின் பின் உடனடியாக அருந்தவேண்டும்.

### அஸ்ட்ரன் லிமிட்டெட்

அஸ்ரன் லிமிட்டெட் இலங்கையில் உள்ள முன்னணி மருந்துப்பொருட்கள் உற்பத்தியாளராகும். முன்பு பிஷ்சர் லங்கா லிமிட்டெட் என அழைக்கப்பட்ட இக்கம்பனி இலங்கையிலும், மாலைதீவிலும் சகல விநியோகஸ்தர்களில் ஒருவராக இருந்துவந்தது.

உற்பத்தியில் இக் கம்பனி கொண்டுள்ள உயர் நியமங்கள் எட்ஜ் உற்பத்தி வரிசைகளுக்கு உயர்ந்த தரத்திற்கான உத்தரவாதத்தையும், இன்று இத்துறையில் காணப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மேலதிக உத்தரவாதத்தையும் வழங்குகின்றது. மேலும், அஸ்ட்ரன் லிமிட்டெட்டின் அபிவிருத்தி மற்றும் உற்பத்தி நிபுணத்துவம் சிறந்த சுவைகொண்ட உற்பத்திகளை உருவாக்க உதவியது.

அதேசமயம், வசதியான முறையில் பொதி செய்யப்பட்டுள்ள சாசெற் பக்கெட்டுகள் ஒவ்வொன்றிலும் அவற்றின் செயற்பாட்டுக்குத் தேவையான செறிவுடன் தொடர்பான ஊட்டச்சத்தின் துல்லியமான அளவை வழங்குகின்றது. அத்துடன், இந்நிறுவனத்தின் நாடுதழுவிய பலமான வலையமைப்பு இன்னொரு முக்கியமான சிறப்பாகும். இது அஸ்ட்ரன் லிமிட்டெட்டை இலங்கையின் முன்னணி விநியோகஸ்தர்களில் ஒருவராக திகழ வைத்துள்ளது.

### பவர் வேள்ட் பிட்னெஸ் சென்டர்

பவர்வேள்ட் பிட்னெஸ் சென்டர்கள் இலங்கை நல்லாரோக்கியத்துறையில் முன்னணி நிறுவனமாகும். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அத்தியாவசிய உடல்நலத்துறையில் உடற்பயிற்சிகள் மூலம் இலங்கையின் பொதுக் கல்வித்துறையில் காணப்படும் குறைபாட்டை நீக்குவதற்குத் தனியாக, பொறுப்பாக விளங்கியது.

அத்துடன் 40,000 அங்கத்தவர்களின் வாழ்க்கையையும் முன்னேற்ற உதவியது. இலங்கையில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மற்றும் உடல்நல தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்திகளைத் தயாரிக்கும் திறமை கொண்ட நம்பிக்கையான நிறுவனமாக பவர் வேள்ட் திகழ்கின்றது. இக்கம்பனி பாதுகாப்பான, பயனுள்ள, இலகுவாக வாங்கக்கூடிய உற்பத்திகளை வழங்கி வருகின்றது.


INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

UNIVERSITY OF WESTMINSTER

Walk into IIT on 16th & 17th July 2005
OPEN DAY
From 9.00a.m. to 5.00p.m.



*Sanjeev Jayaratnam*
*B.Sc (Hons), MBA, MBCS, Dip. M, C.Eng, CITP*
*General Manager | Sales & Consulting, IFS*
"I was at IIT (then IICS) from 1990-94 and graduated with 1st Class Honours from the first batch. The foundation and learning experience I received at IIT has been one of the main reasons for my continued career development in the last decade, for which I will always be grateful."

IIT, Sri Lanka's number one higher education institute, joins with the University of Westminster, UK to offer you enormous possibilities in spearheading tomorrow's technology.

- BSc (Hons) Software Engineering
- BSc (Hons) Internet Computing
- BSc (Hons) Information Systems
- BSc (Hons) Computing
- BSc (Hons) Information Systems with Business Management

Academic session 2005-2006. Enrol now!

INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY

For more information call Priyanka: 0722 727272 / 2360212 - ext 106

57 Ramakrishna Road, Colombo 06, Sri Lanka. Tel: 2360212, 2590714, 2361473. Fax: 2362305. E- mail: admissions@iit.ac.lk, http://www.iit.ac.lk

# அடுத்த தலைமுறை வலையமைப்பு தகவல் தொழில்நுட்பம் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கும் விஸ்தரிப்பு



தகவல் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் (Software) வழங்குநர்களான Millennium Information நிறுவனம் வடக்கு - கிழக்கில் 'Next Generation Network' என்ற புதிய தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்கிறது.

இப்புதிய தொழில்நுட்பம் மிகவும் மலிவானதும், விரைவானதுமானதாகும். இதன்மூலம் வடக்கு - கிழக்கு மாகாண தொடர்பாடல் சேவையில் பூரண அபிவிருத்தி அடையும் என Millennium Information Technologies நிறுவனம் அறிவித்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பம் பற்றியும் இதன் பிரயோசனம் பற்றியும் விளக்கம் அளித்துள்ளார் Millennium Inforomation Technologies நிறுவனத்தின் பணிப்பாளர் பீட்டர் அல்மீடா.

**கேள்வி** : Next Generation Network என்ற இந்தப் புதிய தொழில்நுட்பம் பற்றியும் அதன் பிரயோசனம் பற்றியும் விரிவான விளக்கங்களைத் தாருங்கள்.

**பதில்** : இதுவரை உள்ள தொழில்நுட்பங்களிலும் பார்க்க இந்தத் தகவல் தொழில் நுட்பம் வித்தியாசமானது. அதிநவீனமானது. காலத்திற்கு மிகவும் உகந்தது.

இத் தொழில்நுட்பம் மூலம் Voice, Data மற்றும் Vedio ஆகிய மூன்றையும் ஒரே கம்பியின் ஊடாக வழங்கமுடியும்.

இந்த வசதி வேறு எந்தத் தொழில்நுட்பத்திலும் இல்லை.

இவ்வாறான மூன்று முக்கிய தேவைகளும் ஒரே வலையமைப்பில் உள்ளதால் இந்த Next Generation Network மிகவும் பிரயோசனமாய் உள்ளதுடன் இன்றைய காலத்தேவைக்கு இதுவே உகந்தது என உணரப்பட்டுள்ளது.

**கே** : இந்த வலையமைப்பு நாட்டின் எந்தெந்தப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன?

ப :வடக்கு - கிழக்கு மாகாணத்தைத் தவிர நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இது வியாபிக்கப்பட்டுள்ளது. அதிக வரவேற்பையும் பெற்றுள்ளது.

**கே** : இப்போது, இந்த வலையமைப்பை வடக்கு - கிழக்கிற்கு விஸ்தரிக்க நீங்கள் எடுக்கும் முயற்சியின் நோக்கம்?

ப : இதுவரை காலமும் வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுவந்த யுத்தத்தின் காரணமாக தொடர்பாடல் ரீதியாக வடக்கு - கிழக்கு சிதைக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் தொடர்பாடலை மீளக்கட்டியெழுப்ப நாம் எண்ணினோம். அதன்படியே இந்த வலையமைப்பை அங்கு விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

**கே** : வடக்கு - கிழக்கில் இதை வியாபிப்பதன் மூலம் வடக்கு - கிழக்கு மக்கள் எவ்வகையான நன்மைகளை அடைவர். முழு நாட்டுக்கும் ஏற்படப் போகும் நன்மைகள் என்ன?

ப : வடக்கு - கிழக்கு மக்கள் தங்களின் அறிவை வளர்த்துக்கொள்ள இது பெரும் உதவியாய் அமையும்.

இனங்களிடையே நிரந்தர சமாதானத்தையும், புரிந்துணர்வையும் வளர்க்க இது உந்துசக்தியாய் விளங்கும்.

இந்த வலையமைப்பின் ஊடாக தங்கள் தங்கள் பிரதேசங்களில் இருந்தவாறே நாட்டின் எந்த மூலையிலும் உள்ளவர்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியும்.

வடக்கு - கிழக்கு மாணவர்கள் தங்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கொழும்புக்கு வரத் தேவையில்லை. அவர்களின் பகுதிகளில் இருந்தவாறே இந்த வலையமைப்பின் ஊடாகத் தாங்கள் விரும்பிய கல்வியைக் கற்க முடியும்.

மாணவர்களுக்குப் புதியபுதிய யோசனைகள் பிறக்கும். இதனால் அவர்கள் வாழ்க்கையில் ஓர் உயர்ந்த இடத்திற்குச் செல்வர்.

அது மாத்திரமின்றி வெளிநாடுகளுக்கு தொலைபேசி மூலம் பேசுவதாயின் அதிக செலவு ஏற்படுகிறது.

வடக்கு - கிழக்கில் இருந்து அநேகமானவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். இங்குள்ள உறவினர்கள் அவர்களுடன் உரையாட வேண்டும் என்றால் வெளிநாடுகளில் உள்ள அவர்கள் இவர்களுக்கு தெலைபேசி அழைப்பு எடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

அதற்குக் காரணம் தொலைபேசி இயக்குநர்கள் அறவிடும் அதிகூடிய கட்டணமே.

ஆனால், இந்த வலையமைப்பு நிறுவப்பட்டால் அப்படியானதொரு நிலை ஏற்படாது. வெளிநாடுகளில் உள்ள தங்களின் உறவினர்களுடன் வடக்கு - கிழக்கில் உள்ளவர்கள் நினைத்த நேரத்தில் உரையாடலாம்.

அந்த அளவிற்கு இதற்கான கட்டணம் மிகவும் மலிவானதாகும். அத்தோடு தெளிவு, வேகம் போன்றவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

தொலைபேசி இயக்குநர்கள் இந்த Next Generation Network ஐப் பயன்படுத்தி அதிக சேவைகளை வழங்க முடியும்.

**கே** : நீங்கள் எந்தெந்தத் தொலைபேசி இயக்குநர்களுக்கு உங்கள் தொழில் நுட்பத்தை வழங்குகிறீர்கள்?

ப: சன்டெல், ஸ்ரீ லங்கா ரெலிகொம், டயலொக் ரெலிகொம் மற்றும் மொபிடல் ஆகிய தொலைபேசி இயக்குநர்களுக்கும் நாம் எமது தொழில் நுட்பத்தை வழங்குகிறோம்.

இதுதவிர சம்பத் வங்கி, பாண் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் வங்கி, DFCC வங்கி, ஸ்ரீ லங்கா எயர்லைன்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கும் எமது தொழில் நுட்பம் வழங்கப்படுகிறது.

**கே** : உங்கள் நிறுவனத்தைப் பற்றி?

ப : எமது Millennium Information Technologies நிறுவனம் 10 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது.

நாம் இரண்டு வகையான வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

01.Software Development

02.Enterprise and Service provide

மென்பொருள் அபிவிருத்தி வர்த்தகம் உலகளாவிய ரீதியில் மிகவும் வெற்றிகரமாய் உள்ளது. மொரிஸ், காணா, கென்யா, நைஜீரியா, பொஸ்ட்டன் ஆகிய நாடுகளில் உள்ள பங்குச் சந்தைகளில் பட்டியல் இடப்பட்டுள்ளது.

'எண்டர்பிரைஸ் மற்றும் சேவை வழங்கல் வர்த்தகத்தை எடுத்துக்கொண்டால் இது தகவல் தொழில் நுட்பத்தையும் தொலைபேசி இயக்குநர்களுக்கு தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குகிறது.

அதேவேளை, Software வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படாமல் எம்மால் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. இது எமது வர்த்தகத்திற்குச் சிறப்பம்சமாகும்.

மாலபேயில் உள்ள எமது தொழிற்சாலையில் இந்த மென்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இலங்கையில் உள்ள பொறியியலாளர்களைக் கொண்டே இவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

சண் மைக்ரோ சிஸ்ட்டம், சிஸ்கோ சிஸ்ட்டம் மற்றும் ஒரோக்கா ஆகிய நிறுவனங்கள் எமது பங்கு நிறுவனங்களாகும். இந்த நிறுவனங்களுடன் இணைந்து நாம் மிகவும் சிறப்பானதாகவும் வெற்றிகரமாகவும் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறோம். - என்றார்.










# வெளிநாட்டில் தொழில் தேடும் மாணவர்களுக்கு

# Foundation Degree Programme - UK பாடநெறி

London Institute of Further Education (LIFE) நம் நாட்டு மாணவர்களின் எதிர்கால நலன்கருதி பிரித்தானிய பல்கலைக்கழகங்களின்




அங்கீகாரத்துடனும், வழிகாட்டுதலுடனும் Foundation Degree Programme for Higer Education/Career எனும் பாடநெறியினை வடிவமைத்துள்ளது.

இக்கற்கை நெறியில் தகவல் தொழில்நுட்பம் (Information Technology), ஆங்கிலம், ஆளுமை விருத்தி ஆகிய பாடப்பரப்புகள் போதிக்கப்படுகின்றன.

தகவல் தொழில்நுட்பத்தினைப் பொறுத்த வரையில் Programming Techniques, Website Development, Graphic Designing, Information Technology Theories, Internet-Email Applications, Operating Systems, MS OfficeXP, Hardware and Networking உள்ளிட்ட இன்னும் பல அலகுகளை உள்ளடக்கிய பாடத்திட்டம் கற்பிக்கப்படும்.

மேலும் ஆங்கிலத்தில் Reading, Writing, Speaking, Listening ஆகிய அடிப்படை அம்சங்களினூடாக விரிவான பயிற்சி வழங்கப்படு



வதனால் ஆங்கிலத்தில் மிகவும் பலவீனமாக காணப்படுகின்ற மாணவர்களும் கற்கை நெறி முடிவில் சிறந்த ஆங்கிலத் தேர்ச்சி கொண்டோராக மாறிக் கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது.

தகவல் தொழில்நுட்பம் (Information Technology), ஆங்கிலம் ஆகிய பாடப் பரப்புகளைப் பயிலும் நம் மாணவர்கள், தங்களது ஆளுமையினை வளர்த்துக்கொள்ளவும், தாம் பெற்ற அறிவினையும் ஆற்றல்களையும் வெளிக்கொணரவும் ஆளுமை விருத்தி (Personality Development) எனும் விசேட பயிற்சித் திட்டமொன்றும் இப்பாடநெறியில் உள்ளடங்குகின்றது.

இதன்மூலம் மாணவர்கள் தங்கள் ஆளுமையினை வளர்த்துக் கொள்வதோடு, எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்கள் திறமையினையும், ஆற்றல்களையும் தெளிவாக வெளிப்படுத்தும் திறனையும் அடைகின்றனர்.

Personality Development இன் மூலம் கிடைக்கின்ற அனுகூலங்களால் வாழ்வின் பல்வேறு சவால்களையும் தைரியத்துடன் எதிர்கொள்ளும் மனவலிமையினையும், எவ்வித சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் இலகுவாக வெற்றி கொள்ளும் தன்மையினையும் மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

எனவே, London Institute வழங்கும் Foundation Degree Programme மூலம் மிகக் குறுகிய காலத்தில் மாணவர்கள் தகவல் தொழில் நுட்பம், ஆங்கிலம் ஆகிய துறைகளில் பரந்த அறிவினைப் பெறுவதோடு, தங்கள் ஆளுமையினை சிறப்பாக விருத்திசெய்து கொள்ளும் சந்தர்ப்பத்தினையும் பெற்றுக் கொள்வதால் ஒரு புதிய மாற்றத்துடன் இக்கற்கை நெறியினை நிறைவு செய்து கொள்கின்றனர்.

இத்துடன் இப்பாடநெறி முடிவில் 4 சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அவையாவன:-

Diploma in Information Technology, Diploma in English Proficiency, International Computer Driving License (ICDL, UK), First Certificate in English (UK) இந்த சான்றிதழ்கள் நேரடியாக UK கல்வி நிறுவனங்களினால் வழங்கப்படுவதனால் இப்பாடநெறியின் அங்கீகாரமும், தரமும் அதி உயர்வாக காணப்படுகின்றதை மாணவர்களும், பெற்றோரும் உணர்ந்துள்ளனர்.

இதனால் உயர்கல்வியை வெளிநாட்டில் தொடரவிரும்புகின்ற மாணவர்களும், உடனடித் தொழில் வாய்ப்பினை நாடுகின்ற மாணவர்களும், இக்கற்கை நெறியில் இணைந்து கொள்கின்றனர்.

UK, Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர்வதற்காக Student Visa க்களைப் பெறவிரும்புகின்ற மாணவர்கள் Foundation Degree Programme இனை வெற்றிகரமாக நிறைவு செய்கின்ற போது அந்த வாய்ப்பினை இலகுவாகவே பெற்றுக் கொள்கின்றனர்.

Student Visa க்களுக்கு விண்ணப்பிக்கின்ற போது உயர்ஸ்தானிகராலயங்கள் நடத்தும் நேர்முகப்பரீட்சையை இலகுவாக எதிர்கொண்டு வெற்றிபெறுவதற்கு Foundation Degree Programme உதவி புரிகின்றது.

இந்த நேர்முகப் பரீட்சைகளில், அவர்கள் எதிர்பார்க்கின்ற ஆங்கில அறிவு மற்றும் சான்றிதழ்களின் தரம் ஆகியவற்றிற்கு Foundation Degree Programme தகுந்த பயன்பாட்டினைத் தருவதால் Student Visa க்களைப் பெற்றுக்கொள்வதில், இப்பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் எவ்வித சிரமங்களையும் எதிர்கொள்வதில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக London Institute, தமது சர்வதேச வலைப்பின்னலின் ஊடாக UK, Canada ஆகிய நாடுகளில் உள்ள அநேகமான பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் நம் நாட்டு மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பினை இலகுவாகப் பெற்றுத் தருவதால், மாணவர்கள் அதிக சிரமங்கள் இன்றி வெளிநாட்டு உயர்கல்வி எனும் கனவினை நனவாக்கிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கிறது.

மேலும் London Institute , வழங்கும் மாணவர்களுக்கான சேவைகளில் வெளிநாட்டு பல்கலைக்கழக அனுமதி முதல், Visa க்களைப் பெறும் வரையிலான அனைத்துப் படிமுறைகளிலும் பங்களிப்புச் செய்வதால் நமது மாணவர்கள் மிகக்குறுகிய காலத்தில் தங்கள் இலக்கினை அடைந்துகொள்ள வழிசெய்கின்றது.

அடுத்து தொழில் வாய்ப்புப்பற்றிச் சிந்திக்கும் மாணவர்கள் Foundation Degree Programme இல் மாணவர்கள் பயில்கின்ற தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடப் பரப்புகள் மிக விரிவான விடயங்களை உள்ளடக்கியுள்ளதால் அதன்மூலம் பெறப்படுகின்ற அறிவும், அத்துடன் சர்வதேச தரச்சான்றிதழ்களின் வலிமையும் எந்தவித தொழில் வாய்ப்பினையும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளத் துணை செய்கின்றன.

மேலும் தொழில் வாய்ப்புகளுக்கான நேர்முகப்பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றபோது, Foundation Degree Programme ஊடாக Personality Development எனும் ஆளுமை விருத்தி சிறப்பாக அமைவதன் காரணமாக நேர்முகப் பரீட்சைகளில் சிரமங்கள் இன்றி தெரிவு செய்யப்படுவதற்கும் வாய்ப்புண்டாகின்றது.

எனவே தற்போதைய சூழ்நிலையில் G.C.E. (O/L அல்லது G.C.E (A/L) பரீட்சையினை நிறைவு செய்துவிட்டு ஓய்வு காலத்தினை மிகப் பிரயோசனமான, சர்வதேச தரம் கொண்ட பாடநெறி



யொன்றின் மூலம் பயன்படுத்த விரும்புகின்ற மாணவர்களும், வெளிநாட்டில் உயர்கல்வி / தொழில்வாய்ப்பு பற்றி சிந்திக்கின்ற மாணவர்களும் Foundation Degree Programme இனை பயில்வதன் மூலம் குறுகிய காலப்பகுதியில் அதி சிறந்த விளைவினையும், அடைவுகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே தங்கள் எதிர்கால இலக்குகள் இலகுவாக எய்தப்படவேண்டும் என எண்ணுகின்ற மாணவர்கள் மூன்று மாத முழு நேர பாடநெறியாக கற்பிக்கப்படுகின்ற Foundation Degree Programme இல் இணைந்துகொள்வதன்மூலம் உங்கள் வாழ்வில் துரிதமான வெற்றிபெற வழி பிறக்கும் என்பது உறுதி.

திங்கள் முதல் வெள்ளிவரை நாள் தோறும் இடம்பெறும் இக்கற்கைநெறி குறுகிய காலத்தில் அதிசிறந்த பயன்களை வழங்குவதோடு கிடைக்கப்போகும் சான்றிதழ்களின் சர்வதேச அங்கீகாரமானது எப்போதும் எந்த இடத்திலும் உங்களுக்குப் பெருமை சேர்க்கும் என்பது இப்பாடநெறி மூலம் கிடைக்கும் அதி சிறந்த பயன்பாடாகும்.

எனவே, London institute of Further Education இல் இணைந்து Foudation Degree Programme இனைப்பயின்று நீங்களும் வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

இப்பாடநெறி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு, இல 25A ஹொஸ்பிட்டல் வீதி, தெஹிவளையில் அமைந்துள்ள London Institute இற்கு நேரடியாக விஜயம் செய்வதன் மூலமோ தொலைபேசி எண்களான 0777-715788, 0115-518666 ஆகியவற்றிற்கு தொடர்பு கொள்வதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ளமுடியும்.

## M.B.B.S கற்கை நெறிக்கான வாய்ப்பு

இலங்கையின் Medical Council னால் அங்கீகரிக்கப்பட்ட Crimea State Medical University ல் சேர்ந்து M.B.B.S கற்கை நெறியைப் பூர்த்தி செய்து மருத்துவராகுவதற்கான வாய்ப்பை தற்பொழுது கொழும்பில் இயங்கும் தலைசிறந்த கல்விசார் நிறுவனமான Scholars Information Centre ல் ஒழுங்கு செய்து கொடுக்கப்படுகிறது.

Crimea State Medical University யானது 1931ஆம் ஆண்டு அப்போதைய சோவியத் ரஷ்யாவில் உலகளாவிய அங்கீகாரத்துடன் நிறுவப்பட்ட ஒரு மருத்துவக் கல்லூரியாகும். தற்பொழுது இக்கல்லூரி புதிய குடியரசு நாடான யுக்கிரேனில் (Ukraine) உயர் தராதரத்துடன் இயங்கி வருகிறது.

பல மேற்கத்தேய நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்களை பீடாதிபதிகளாக கொண்டியங்கும் இக்கல்லூரி, தமக்கென போதனா வைத்தியசாலைகள், நவீன மருத்துவ சாலையில் ஆய்வுக்கூடங்கள் ஆகிய வசதிகளையும், வெளிநாட்டு மாணவர்கள் தங்குவதற்கான விடுதி வசதிகளையும் கொண்டது. மிகவும் சலுகை அடிப்படையான கட்டணத்தை அறவிடும் இக்கல்லூரியில் மலேசியா, இந்தியா, இலங்கை, ஜோர்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து மாணவர்கள் தற்பொழுது பாடநெறிகளை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றனர். G.C.E. (A/L) Bio, பாடநெறிகளை முடித்தவர்கள் நேரடியாக MBBS முதல் ஆண்டில் சேர்ந்து கொள்ள முடியும். G .C. E. (O/L) மட்டும் முடித்த மாணவர்கள் ஒரு வருட Pre Medical பாடநெறியை பூர்த்தி செய்து MBBSயை தொடர்வதற்கான வாய்ப்புகள் உண்டு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வருட ஆகஸ்ட் மாதம் இறுதியில் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் MBBS படிப்பதற்கு ஆர்வமுள்ள மாணவர்கள் 0777-767818 அல்லது 4512591 என்ற தொலைபேசி



இலக்கத்தில் Scholars Information Centre யை தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

17.07.2005

# போரைத் திணிக்க முயல்வது தப்புக் கணக்கின் காரணமோ...?

இலங்கைத் தீவில் மீண்டும் போர் மேகம் சூழ்ந்து கொண்டிருக்கின்றது. கடந்த சில வாரங்களாக இங்கு நடந்துகொண்டிருக்கின்ற சில சம்பவங்கள்– அசம்பாவிதங்கள்–யுத்தத்துக்குக் கட்டியம் கூறுவனவாகவே இருக்கின்றன.


போர்நிறுத்தம் முடிந்து போர் மீண்டும் வெடிக்கலாம் என்ற அச்சம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த சில நாள்களாக நடைபெறும் சம்பவங்களைக் கண்டு பொது மக்களும் ஏனைய தரப்பினரும் யுத்தத்தை எதிர்கொள்வதற்கு ஏற்றாற்போல தங்களுடைய செயற்பாடுகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நான்காம் கட்ட ஈழப்போர் இன்னும் சில வாரங்களில் – தினங்களில் – ஆரம்பிக்கப்பட்டு விடும் என்ற சாரப்பட பத்திரிகைகளில் செய்திகளும் கட்டுரைகளும் ஏராளமாக வெளிவந்துகொண்டிருக்கின்றன.

கடந்த மூன்று வருட காலங்களில் விடுதலைப்புலிகள் இயக்கம் பலவீனமடைந்துவிட்டது. எனவே இனி ஒரு யுத்தம் ஏற்பட்டால் இராணுவத்தினருக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்று இராணுவ உயர் வட்டாரங்கள் கணக்குப்போட்டு வைத்திருக்கின்றன என்றே தெரிகிறது. கிழக்கில் கருணா பிரிந்த கையோடு புலிகளின் பலம் பெருமளவில் குன்றி விட்டது என்றே படைத்தலைமை கருதுகிறது. மூன்றுவருட படைத்தரப்பு எதிர்பார்ப்பது போல பலவீனமான நிலையில் – எதிர்த்துப் போரிடவலுவற்ற நிலையில்தான் – புலிகள் இயக்கம் இருக்கிறதா என்பதை ஆழமான சிந்தனை ஓட்டத்துடன் – யதார்த்தமான புறநிலைகளுடன் – வாதப் பிரதிவாதக் கண்ணோட்டத்தில் – ஆராய்ந்தால் உண்மை என்னவென்பது துலாம்பரமாகத் தெரியும்.



புலிகளின் கிழக்குத் தளபதி கருணாவுடன் குறிப்பிட்ட சில நூற்றுக்கணக்கான போராளிகளையும் புலிகள் இயக்கம் இழந்துவிட்டது என்பது என்னவோ உண்மைதான். அது புலிகளுக்கு ஒரு பின்னடைவும் கூட. ஆனால் அந்தப் பின்னடைவைவிட மறுபுறத்தில் கடந்த 3வருடத்தில் புலிகள் படைபலம், ஆயுத போர்த்தளபாட வகையில் தங்களை அபிவிருத்தி செய்து கொண்ட அளவு மேலோங்கி உள்ளது.

'இரு தரப்பும் பை[illegible] சமநி[illegible]லையை பேணுதல்' (Balance of Mli[illegible]iry [illegible]ower) என்ற விடயம் புரிந்துணர்வு உடன்படிக்[illegible]யில் விளக்கமாக கூறப்பட்டிருக்கிறது. புலிக[illegible]ளா இராணுமோ தமது படைக்கு ஆள்சேர்ப்பதை[illegible]யோ அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதையோ உடன்ப[illegible]க்கை தடைசெய்யவில்லை.



அதற்கமைய எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்காக அமைதிக் காலத்திலும் புலிகள் தங்களை பலமாகவே பேணிவந்திருக்கின்றனர்.

சமாதான காலத்திலும் ஆள்சேர்ப்பு நடவடிக்கையில் புலிகள் தீவிரமாகவே செயற்பட்டு வந்திருக்கின்றனர். இதனை அனைவரும் நன்கறிவர். யுத்தகாலத்தில் இருந்த பயிற்சி முகாம்கள் அப்படியே இருக்க, அவற்றுடன் புதிதாக மேலும் சில பயிற்சி முகாம்கள், கல்லூரிகளையும் புலிகள் இப்போது அமைத்திருக்கின்றார் கள் என்று சிங்கள நாளிதழ் ஒன்று அண்மையில் செய்தி வெளியிட்டி ருந்தமையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும்.

போர்ப் பயிற்சி பெறுகின்ற போராளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றமையையே ஓடுபாதையையும் விமானங்களையும் இராணுவத்தின் குண்டு வீச்சு விமானங்கள் துவம்சம் செய்துவிடும் என்பது புலிகளுக்குத் தெரியும். அதனால் ஓடுபாதையைப் பாதுகாப்பதற்கு அவர்கள் முன்னேற்பாடு[illegible] செய்திருப்பர் எவரும் ஊகிக்கக் கூடிய ஒன்றே[illegible] புலிகளின் போரிடும் வலுவுக்கு அவர்களது விமா[illegible] உருவாக்கம் பெரியதொரு பலத்தைச் சேர்த்திருக்கிறது.

### அசைக்க முடியாத பொருளாதாரப் பலம்

கடந்த மூன்று வருட காலத்தில் புலிகள் தமது போர் ஆற்றலை பல்வேறுவழிகளிலும் வளர்த்துக்கொண்டதோடு மட்டுமல்லாமல் பொருளாதார ரீதியாகவும் உயர்ந்திருக்கின் றார்கள். வெளிநாடுகளில் திரட்டப்படுகின்ற நிதிகளும் உள்ளூர் நிதியீட்டங்களும் புலிகளுக்கு போதிய பொருளாதாரப் பின்பலத்தை தோற்றுவித்திருக்கின்றன.

முன்னர் வன்னியில் இருந்து படையினருடன் போரிட்ட காலத்தில் பொருளாதார, மருத்துவ பற்றாக்குறைகள், வசதியீனங்களை மக்கள் மட்டுமல்ல புலிகளும் எதிர்நோக்கினர். ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல பாரியளவிலான யுத்தத்தையும் – நெருக்கடிகளையும் எதிர்கொள்ளக் கூடிய அளவுக்கு பொருளாதார வளத்தில் அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள்.

போர்க்காலத்தில் காயமடைந்து உடலில் ஷெல்துண்டுகள், துப்பாக்கிச் சன்னங்களைக் காவிக்கொண்டு திரிந்த பலநூற்றுக்கணக்கான போராளிகள் அமைதிக் காலத்தில் நவீன சிகிச்சை முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பல கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து காயமடைந்த போராளிகள் குணப்படுத்தப்பட்டிருக் கின்றார். எனவே, அவர்களும் இப்போது சண்டைக்குத் தயாரான நிலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர்.

அமைதிக் காலத்தில் விடுதலைப் புலிகளின் போராளிகள் பலர் இயக்கத்தில் இருந்து விலகி பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கின்றார்கள் அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள் என்று இராணுவத்தலைமையகம் அண்மையில் வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புலிகள் பலவீனமடைந்திருக் கின்றார்கள் என்ற படைத்தலைமையின் கணிப்பீடே மீண்டும் போரைத் திணித்து ஆயுத ரீதியில் புலிகளை வென்றுவிடலாம் என்ற எண்ணப்பாட்டை அரசுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த மூன்று வருடங்களாக – புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாளில் இருந்து –புலிகளைச் சீண்டிப் பார்க்கும் நடவடிக்கைகளை படைத்தரப்பு மேற்கொண்டே வந்திருக்கிறது. எனினும் அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் புலிகள் நோர்வே அனுசரணையாளர்களிடமும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமும் முறையீடு செய்துவிட்டு, அதற்குத் தமது கண்டனங்களையும் தெரிவித்துவிட்டு பேசாமல் இருந்தனர்.

### தப்புக் கணக்கு

தங்களின் சீண்டல்களுக்குப் புலிகளிடமிருந்து தொடர்ந்தும் பொறுமைகாத்தலே – அமைதி பேணுதலே– பதிலாகவரும் என்று அப்போது படைத்தரப்பு நினைத்திருக்கவில்லை.

தொடர்ந்து போராளிகள் கொல்லப்பட்டு வந்ததையும், அவர்கள் மீதான தாக்குதலையும் சகித்துக்கொண்டு சமாதானம் சாகடிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகப் புலிகளின் தலைமை பொறுமைகாத்து வந்தது. சமாதானத் தின் மீது – அமைதி வழித் தீர்வின்பால் – கொண்டிருந்த பற்றுறுதி யினால் புலிகள் காட்டிய அளவுகடந்த பொறுமையை காலப் போக்கில் படைத்தரப்பு பலவீனத்தின் அடையாளமாகவே இனங் கண்டது – தப்புக்கணக்குப் போட்டது.

எதைச் செய்து பார்த்தாலும் – எப்படி வம்புக்கிழுந்தாலும் – புலிகள் பதிலுக்கு எதுவும் செய்யாமல் வெறும் வாய்ப்பேச்சுடன் இருப்பதனால் யுத்தத்துக்குச் செல்வதற்கான வலு அவர்களிடம் அற்றுப் போய்விட்டது என்று உறுதியாக நம்பிய படைத்தலைமை கருணாவின் பிரிவோடு மேலும் ஒருபடி குதூகலம் அடைந்து விட்டிருக்கிறது. அதனால்தான் இப்போது போரைத் தொடக்கி வெற்றி பெறலாம்– புலிகளை அழிக்கலாம் –என்ற இறுமாப்பில் அதற்கான நடவடிக்கைகளை – வம்புக்கிழுத்தல்களைத் தீவிரப்படுத்தி வருகிறது.

### விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டனரா?

இந்தப் பின்னணியில், மீண்டும் ஒரு போர் மூண்டால் இது கோடி காட்டுகிறது. புதிதாக இணைந்து பயிற்சி பெறுகின்ற போராளிகளைத் தவிர ஏற்கனவே இருந்த போராளிகளுக்கும் அமைதிக்காலத்தில் மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல்களும் அவ்வப்போது வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

### சமர் அணிகள் தயார் நிலையில்

இதனைவிட புலிகளின் அதிவேக மோட்டார் சைக்கிள் படையணி உட்பட வேறுசில தாக்குதல் அணிகளும் கடுமையான பயிற்சிகளுடன் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் படையணிகளின் உருவாக்கம் புலிகளின் படைபலரீதியான வளர்ச்சியையே பறைசாற்றுகிறது.

சாள்ஸ் அன்ரனி படையணி, சிறுத்தைப் படைப்பிரிவு, இம்ரான் பாண்டியன் படையணி, ஜெயந்தன் படையணி, விக்ரர் கவச எதிர்ப்பு அணி, குட்டிசிறி மோட்டார் அணி, கிட்டு பீரங்கிப் படைப்பிரிவு, ராதா வான் காப்பு அணி போன்ற சமர் அணிகள் புலிகளிடம் இருக்கின்றன. அந்தப் படையணிகளைச் சேர்ந்தவர்கள் வெளியில் வருவதோ வேறு வேலைகளில் ஈடுபடுவதோ கிடையாது. சண்டைக்கென்றே தயார்ப்படுத்தப்பட்ட அந்தப் பிரிவுகள் வன்னியில் காட்டுப் பகுதிகளுக்குள் இருக்கின்ற முகாம்களில் தொடர்ந்து பயிற்சிகளைப் பெற்றவாறு எதற்கும் தயாரான நிலையிலேயே இருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இவற்றை விட தலைவர் பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பில் 'சைபர் அணி' என்ற பெயரில் கட்டமைக்கப்பட்டுள்ள அதிவேக தாக்குதல் அணியும் இருக்கிறது. கரும்புலிகள் படைப்பிரிவும் கூட புலிகளின் பெரும் பலமாக இப்போதும் வளர்க்கப்படுகின்றது. வன்னியிலும் சரி,வேறு இடங்களிலும் சரி அரசியல் பிரிவு மற்றும் வேறு நிர்வாகப் பிரிவுகளில் பணியாற்றுகின்ற போராளிகளைப் பார்த்துவிட்டு 'புலிகளின் படைபலம் இவ்வளவு தான்' என்று படைத்தரப்பினர் 'மனப்பால்' குடிப்பது போரியல் ரீதியான அவர்களின் அனுபவக் குறைவன்றி வேறில்லை எனலாம்.

### தமிழீழ விமானப்படை புலிகளுக்கு தனிப்பலம்

அமைதி ஒப்பந்தத்துக்கு முன்னர் கடற்படை, தரைப்படை என்ற பிரதான பிரிவுகளைக் கொண்டிருந்த புலிகள் இயக்கம் அப்போதே வான் படையையும் உருவாக்கி வைத்திருந்தது. ஹெலிக் கொப்ரர்கள் மற்றும் சிறிய ரக தாக்குதல் விமானங்கள் என்பன புலிகள்வசம் இருப்பது ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படையாக்கப்பட்டிருக்கிறது. புலிகள் தமது விமான ஓடு பாதையைச் சுற்றி நவீன ராடர் கருவிகளையும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் பொருத்தி வைத்திருக்கின்றார்கள் என்று அண்மையில் 'சண்டேலீடர்' என்ற ஆங்கிலப் பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது.

மீண்டும் சண்டை தொடங்கினால் தம்மிடமுள்ள விமான

### சர்வதேச ஆதரவும் பெருகியிருக்கிறது!

இத்தகைய நிலையில் ஆயுத ரீதியாக, படைபல ரீதியாக பொருளாதார ரீதியாக புலிகள் இயக்கம் அசைக்கமுடியாத பலத்தை அடைந்திருக்கின்ற சூழ்நிலையில் புலிகள் மீதான சர்வதேச நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. அதாவது, முன்னரெல்லாம் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக நோக்கிய பல நாடுகள் இப்போது இந்த அமைதிக்காலத்ததில் புலிகளை நன்கு புரிந்து கொண்டுள்ளன. சர்வதேசப் பிரசாரங்களில் அரசுக்கு ஒருபடிமேலே சென்றுவிட்டனர் புலிகள்.

சந்திரமதனா

இலங்கைத் தீவிலே இனி ஒரு போர் தொடங்கினால் சர்வதேசம் தமிழர் தரப்புக்கு உதவிசெய்ய முன்வராவிட்டாலும் கடந்த காலங்களைப் போல உபத்திரவம் செய்யாமலாவது இருக்கும் என்று நம்பலாம். எனவே இதுவும் தமிழருக்கு – புலிகளுக்கு ஒரு பலம்தான். ஆக,ஒட்டு மொத்தத்தில் சகல வழிகளிலும் முன்னரைவிட இப்போது புலிகள் இயக்கம் பலம் பெற்றிருக்கிறது. இதனை உணராமல் புலிகள் பலம் இழந்து விட்டனர் என்று தப்புக் கணக்கு போட்டு புலிகள் மீது போரை வலிந்து திணிக்க முயல்கிறது அரசு. புலிகள் மீது போர் வலிந்து திணிக்கப்பட்டால் அதன் பாரிய விளைவுகளை இராணுவத்தரப்பு சந்திக்க நேரிடும் என்று நம்பலாம்.

கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக சமாதானத்தில் பற்றுறுதியுடன் செயற்பட்டுவந்த விடுதலைப் புலிகள், அரசின் யுத்த முஸ்தீபுக்கு முகம் கொடுக்கும் வகையில் அதிரடி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த அதிரடி நடவடிக்கைகளில் முதலாவது நடவடிக்கைதான் கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் அரசியல் பணிகளில் ஈடுபட்ட போராளிகளைத் தமது பகுதிக்குத் திருப்பி அழைத்தமை எனலாம்.



# மீண்டும் யுத்தமா? சர்வதேச சமூகம் என்ன செய்யப் போகிறது?

புலிகள் அடுத்து எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் நாட்டை யுத்தத்துக்குள் இட்டுச் செல்வதை உறுதிசெய்யுமா? அல்லது சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை முறையாகப் பேணுவதற்கு அரசு முன்வருமா?

இந்தக் கேள்விகள் இன்று சகலரின் மனங்களிலும் எழுகின்றன. தமிழர்தரப்பின் ஏகப்பிரதிநிதிகளான – அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளான – விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் சிங்களத் தரப்பில் அப்போது ஆட்சியில் இருந்த சிங்கள மக்களின் பிரதான கட்சிகளின் ஒன்றான ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த – 20 ஆண்டு கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த – புரிந்துணர்வு உடன்படிக்கை 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

அந்த உடன்படிக்கை ரணில் அரசு ஆட்சியில் இருக்கும் வரை செம்மையாகக் கடைப்பிடித்தது. அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட முக்கிய அம்சங்களான மக்களின் இயல்பு வாழ்க்கை, அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இணக்க நிலைகள் ஏற்படாதபோதும், யுத்தத்துக்கான புறச்சூழல் அப்போது உருவாகவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்து 17 மாதங்கள் கடக்கும் நிலையில் – முப்படைகளின் அதிகாரங்களையும் நிறைவேற்று அதிகாரங்களையும் தம்வசம் கொண்டுள்ள ஒருவரது ஆட்சிக்காலத்தில் – யுத்தத்துக்கான புறச்சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. எந்த வேளையிலும் யுத்தம் ஆரம்பிக்கும் அபாய நிலை தோன்றியுள்ளது – அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கிழக்குப்போராளிகள் வன்னி வந்து தலைமையுடன் கலந்தாலோசனைகளை நடத்த அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் விடயத்தில் இருந்தே முரண்பாடுகள் ஆரம்பித்துள்ளன.

கடந்த ஒரு வருட காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தம் ஒன்றை அரசின் ஆசீர்வாதத்துடன் புலனாய்வு அதிகாரிகளினதும் துணைப்படையாகச் செயற்படும் தமிழ்க் குழுக்களினதும் ஆதரவுடன் படையினர் மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிழல் யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள் கொல்லப்படுவது அதிகரித்துக் கொண்டுவந்தது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட நகர்வுகளின் பின் நிழல் யுத்தத்தைத் தொடர முடியாத இக்கட்டான நிலை படைத்தரப்புக்கு ஏற்பட்டது.

இதன் பின் போராளிகளின் போக்குவரத் தைத் தடைசெய்வது, அவர்களின் அரசியல் அலுவலகங்களைத் தாக்குவது போன்ற நடவடிக்கைகளை படைத்தரப்பு முன்னெடுத்தது.

கண்காணிப்புக் குழுவினரினது பிரசன்னத்துடன் வன்னியில் இருந்து கிழக்கு நோக்கிச் சென்ற 40 போராளிகள் பயணம் செய்த வாகனம் மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலால் சீற்றமடைந்த விடுதலைப் புலிகள் அனுசரணையாளர் களான நோர்வேயையும் கண்காணிப்பாளர்களான யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களையும் கடந்த மாதம் 30ஆம் திகதி வன்னிக்கு அழைத்தனர்.

நிலைமை மோசமாகிக் கொண்டு போகின்றது. இன்னமும் பொறுமை காக்க முடியாது என்று தெரிவித்து 14 நாள் காலக்கெடுவை விதித்தனர். போராளிகளின் சுதந்திரமான நடமாட்டத்துக்கான சில சிபார்களை அரசுக்கு அனுப்பினர்.

மாதம் இரு தடவைகள் போராளிகள் கிழக்கில் இருந்து வன்னி வந்து திரும்ப வழித்துணை வழங்க வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதி ஊடாக போராளிகள் சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக வாகனங்களில் கொண்டு செல்லப்படவேண்டும். அவ்வாறு செல்லும் போராளிகளுடன் படையினரும் ஒவ்வொரு வாகனத்திலும் செல்லவேண்டும். இவைதான் விடுதலைப் புலிகள் அரசுக்கு முன் வைத்த சிபார்சுகள் ஆகும்.

இந்தச் சிபார்சுகளை ஏற்க மறுத்த அரசு, மாதத்தில் ஒரு தடவையே போராளிகளுக்கு போக்குவரத்துக்கு அனுமதிக்க முடியும் என்றும்–

வாகனங்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தங்கியிருக்க வேண்டும் என்றும் –
யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலம் விடுதலைப் புலிகளுக்கு அறிவித்துள்ளது. அரசின் பதிலால் அதிருப்தியடைந்த விடுலைப் புலிகள் தமது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அரசுக்கும் நோர்வேக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் எந்தவகையில் போராளிகளின் போக்குவரத்துக்கள் அமைந்திருந்தனவோ அந்த வகையிலேயே இனிப் போராளிகளின் போக்கு வரத்துக்கள் ஒழுங்கமைக்கப்படும் என்ற அதிர்ச்சித் தகவல் விடுதலைப் புலிகளால் அரசுத் தரப்புக்கு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளுக்குத் தங்கள் கட்டமைப்பில் உள்ள தரைப்படை, கடற்படை, விமானப்படை போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்ற எச்சரிக்கையை விடுதலைப் புலிகள் அரசுக்கு ஏற்கனவே விடுத்திருந்தனர்.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஆயுததாரிகளாகப் போராளிகளின் போக்குவரத்துக்களை எவ்வாறு தாங்களே ஒழுங்கமைத்தார்களோ, அந்த வகையில் விடுதலைப் புலிகள் செயற்பட்டால், யுத்த நிலை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதே சகலரினதும் கணிப்பாகும்.

தமது போராளிகள் கொல்லப்பட்டபோதும் அலுவலகங்கள் தாக்கப்பட்ட போதும் பொறுமை காத்து வந்த விடுதலைப் புலிகள் இனியும் பொறுமை காப்பார்களா என்ற ஐயத்தை அரசினதும் படையினரதும் செயற்பாடுகள் தோற்றுவித்துள்ளன.

*சீண்டச் சீண்டப் பதுங்கும் புலிகள் பாயத்தான்* போகிறார்கள் என்பதற்குக் கட்டியம் கூறும் வகையில் தமது அதிரடி நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டனர்.

கிழக்கிலிருந்து போராளிகளை புலிகள் தமது பிரதேசத்துக்கு மீள அழைத்திருப்பது, தங்களது எதிர்காலச் செயற்பாடு எந்த வகையில் அமையும் என்ற மறைமுகமான செய்தியை படைத்தரப்புக்கு விடுப்பதாகவும் அமையும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரும் தமது நோக்கத்தை சர்வதேச உலகத்துக்கு அறிவிப்பதாகவும் அமையும். எதுவாக இருந்தாலும் புரிந்துணர்வு உடன்படிக்கை பெரும் இக்கட்டில் சிக்கியுள்ளது என்பதே யதார்த்தமாகும்.

சர்வதேசமயமாக்கப்பட்டுள்ள தமிழர் விவகாரத்துக்கு யுத்தத்தினால்தான் தீர்வு என்ற நிலைப்பாட்டைச் சர்வதேச சமூகம் ஆதரிக்கப் போகின்றதா? இல்லாவிட்டால் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி யுத்தநிலையைத் தவிர்க்கப் போகின்றதா?

அடுத்துவரும் நாள்களில் அனுசரணையாளரான நோர்வே சர்வதேச சமூகத்தின் ஆலோசனையுடன் நகர்த்தப்போகும் நகர்வுகள்தான் இந்த நாட்டின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றது.

எந்த நேரத்திலும் யுத்தம் வெடிக்கும் என்று தமிழ் மக்கள் மனங்களில் ஏற்பட்டுள்ள கிலேசத்துக்கு ஆறுதல் கிட்டுமா? அல்லது அவர்களும் இணைந்து சிங்கள அரசுக்கு எதிரான யுத்தத்தில் பங்காளிகள் ஆகப் போகிறார்களா? அடுத்துவரும் நாள்கள் முக்கியமாக அமையப்போகின்றன என்பது மட்டும் நிச்சயம்.

நோர்வேயின் ராஜதந்திரத்துக்கு இலங்கை விவகாரம் ஒரு தோல்வியாக அமையப் போகின்றதா? அல்லது மீண்டும் நோர்வே சமாதான முயற்சிகளைத் தொடர வாய்ப்புக்கிட்டுமா? அடுத்துவரும் நாள்களில் இதற்கான பதில் கிடைக்கும். அதுவரை பொறுத்திருப்போம்.

குகா

புதிய ஜனநாயகம்!!



## உடமைகளோடு

தெருவிலெடுத்த
'பச்சை நிறப் பெட்டி' நிறைய
கிழிந்த பழம் சேலைகள்,
வாலை ஆட்டியபடி
ஒரு குட்டி நாய்....!

குஞ்சுக்குடிசை;
கூரை செல்லரித்து
நீலம் தெரியும்
நீர் சேரும், மாரியினில்!
பட்ட கதிகால் சில
பழைய துருப்பேணிகள்,
ஊசித்துளைகளினால்
உருக்குலைந்த பழம்பானை,
போனமுறை ஓடித்
திரும்புகையில்

பல் விழுந்த வாயின்
புறுபுறுப்பு
'நான் சேர்த்ததுகள்
விட்டிட்டுப்
போகேலா
வாறது
வரட்டும்.....'

வே. சாரங்கன்

# பெண்களின் உரிமைகளை மறுக்கும் கொடிய உணர்வுகள்

பெண்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த கருவியே உரிமையாகும். ஆனால், பெண்களுடைய உரிமைகளை மழுங்கடிப்பதற்கு பல உள்ளங்களின் உணர்வுகள் கருவியாகப்




பயன்படுத்தப்படுகின்றன. திறமை என்னும் பொக்கிஷம் டிபண்ணில் புதைந்திருக்க எங்கள் மூதாதையர்களின் உள்ளங்களில் உதிர்ந்த கொடிய உணர்வுகள் பெண்களை இவ்வாறுதான் வாழ வேண்டும் என வரையறுத்தன.

பெண்கள் எந்தவொரு நன்மையான காரியங்களைச் செய்ய முனைந்தாலும் பெண்மையின் மெனமைக் குணத்திற்கு அப்பாற்றபட்டதென பெற்றோர்கள் உட்பட ஏனைய சமூகத்தவரின் உள்ளங்களில் உதிக்கின்ற உணர்வுகளால் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

பெண்கள் வெளியே போவது, எழுதுவது, தொழில் செய்வது எல்லாம் சரியா? இதனைத் தீர்மானிப்பது யார்? பெண்களா? சமூகமா? குடும்பமா? ஆண்களா? தீர்மானிக்கப்போகின்றார்கள்.

நிச்சயமாக பெண்களாக இருக்க முடியாது.

திரைப்படங்களில் கூட பெண்களின் உரிமைகள் மறைமுகாக மழுங்கடிக்கப்படுகின்றது. அம்மாவை வீட்டு வேலை செய்பவராகவும் அப்பாவைக் கதிரையில இருந்து பத்திரிகை வாசிப்பவராகவும் காட்டுகின்றது. இவ்வாறாக திரைப்பட இயக்குநர்களது உள்ளத்தில் தோன்றுகின்ற எண்ணங்களால் பெண்களின் உரிமைகள் ஒடுக்கப்படுகின்றன.

புன்னகையாலேயே புதுயுகம் படைக்கும் பெண்கள் குடும்பத்தில் தோன்றுகின்ற முரண்பாட்டால் குலைந்து போகின்றாள். ஆண்கள் மத்தியிலேயே பெண்களுக்கு எத்தனை எத்தனை கொடுமைகள். அலஙகாரம் அதிகமாக இருக்கே என சந்தேகக் கண்டு கொண்டு பார்ப்பவர்களும், பிறர் முன்னிலையில் மனைவியை கீழ்நிலைப்படுத்தி பேசுபவரும், தாங்கள் தவறும் பட்சத்தில் மனைவியை குறை கூறுவோரும் நம் நாட்டில் அதிகமாய் உள்ளனர். இக்கொடுமைகளைத் தாங்கும் மனபலம் படைத்த பெண்கள் குறைவாகவே உள்ளனர்.

பெண் விடுதலை இன்று சர்வதேச ரீதியில் முனைப்பு பெற்றபோதும் பெண் இனத்திற்கு முக்கியமாக மனைவி மாாகளுக்கு நம் வீடுகளில் இழைக்கப்பட்டு வரும் அநீதிகளுக்கும் அநியாங்களுக்கும் இன்றுவரை முற்றுப் புள்ளி வைக்கவில்லை என்றே கூறலாம். மனைவி பற்றி வியாக்கியானம் கேட்டால் அநேகமான ஆண்கள் எவ்வாறு விளக்கம் தருவார்கள் தெரியுமா? ஆண்களின் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்றும், பெண்கள் தமது உரிமைகளை அடைவதற்கு ஆண்கள் பாதிக்கப்படக் கூடாது என்றும், தங்களிற்குக் கீழ்ப்பட்டு வாழவேண்டும் என்று கூறுவார்கள்.

ஒரு பெண்ணிற்கு சுயமான விருப்பு வெறுப்பு இருக்கக கூடாதா? அவ்வாறு இருந்தால் அதனை நிறைவேற்றக் கூடாதா?

நாளாந்தம் கணவனின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டாள் மனைவி, எதிர்த்துப் பேசியதனால் கணவனால் கொலை செய்யப்பட்டாள் மனைவி, கணவனின் கொடுமைகளைத் தாங்காது சித்த சுவாதீனமுற்றாள் மனைவி என நாம் பத்தி ரிகை, தொலைக்காட்சி, வானொலிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறாக இன்னும் பலவிதமான சித்திரவதைகளுக்குத் தம்மனைவியரை உட்படுத்தும் பல வேடம் தாங்கும் கணவன்மார்கள் பலர் எம் சமூகத்தில் உள்ளனர். உண்மைச் சம்பவம் ஒன்றை உங்கள் நினைவிற்குக் கொண்டு வருகின்றேன்....

ஒரு பெண் கணவனினதும் அவன் சார்ந்த குடும்பத்தினரதும் கொடுமை தாங்காமல் தனக்குத் தானே எரியூட்டினாள். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அவள் வைத்தியரிடம் கூறியது வைத்தியர்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 'ஐயா, என்னைக் காப்பாற்றாதீர்கள். நான உயிர் தப்பினால் மீண்டும் பெருந்துன்பம் அடைய நேரிடும்' என்றாள்.

இநதப் பெண் தன்னுடைய விதியைத் தானே நிர்ணயிப்பதற்கு என்ன காரணம்? சீதனக்கொடுமையே காரணம்.

உயிர் வாழும் போராட்டத்தில் உணவுக்காக வாழாமல் உணர்வோடு போராடிச்சாதித்த பெண்கள் எம்மண்ணில் புகழ் பூத்தே வாழ்கின்றார்கள். உரிமைக்காகப் போராடிய பல பெண்கள் அழிந்தாலும் அழியாப்புகழோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

போர், இழப்புகள் என ஆண்களால் மட்டுமன்றி புறச சூழலாலும் பல துன்பங்களைப் பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

பெண்களைத் தொடர்ந்தும் வலு இழக்கச் செய்யும் சமூகக் கட்டமைப்புகளையும் கொடிய உணர்வுகளையும் நாம் எதிர்க்க வேண்டும், உரிமைக்காகவும் சமத்துவத் திற்காகவும் போராட வேண்டும்.

பெண்ணாய் இருந்தும் சமூகத் தடங்களின் மத்தியில் சாதனை படைத்த பெண்களை வழிகாட்டியாய்க் கொண்ட ஒவ்வாரு பெண்ணும் ஒவ்வொரு விடயத்திலும் உணர்வுடனும் உரிமையுடனும் போராடி சாதனை படைக்க வேணடும். தீய சக்திகளின் உள்ளங்களில் எழுகின்ற கொடிய உணர்வுகளை இனங்கண்டு அவற்றை அடியோடு அழித்து எமது உரிமையை வென்றெடுப்போம்.





*ஹாய் பிரியா,*



நீண்ட நாள்களுக்குப் பின் உன்னுடன் தொடர்பு கொள்கின்றேன். சில நாள்களாக நான் வெளியூா சென் றிருந்ததால் உனக்கு கடிதம் எழுத முடியவில்லை. ஆயினும் உன் நினைவுகள் என் நெஞ்சை விட்டு அகலவில்லை.

இந்தக் கடிதத்தில் நான் சொல்லப்போகும் விடயம் எது வென்று நீ உடனேயே சிந்திப்பது எனக்குப் புரிகின்றது. இதோ சுடச்சுட நான் கூறும் விடயம்...

இப்போதெல்லாம் பெண்கள் எந்தவேலையும் - அன்று பெண்கள் தங்களால், தங்கள் உடல் வலிமையால் செய்யமுடியாதென்று ஒதுக்கிய வேலைகளையும் - செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அதாவது தங்கள் வாழ்விற்குக் களங்கம் ஏற்படுத்தாத சகல வேலைகளையும் செய்வதற்குத் துணிந்து விட்டார்கள்.

சில காலத்துக்கு முன்புவரை (கனவான காலம்) சில தொழில்களும் சில விளையாட்டுக்களும் ஆண்களுக்கு மட்டுமே உரியவை என்று கருதப்பட்டு வந்தன. அவற்றில் கூட பெண்கள் தற்போது தாராளமாகப் பிரவேசிக்கத் தொடங்கி விட்டார்கள்.

உதாரணமாக பலவற்றை நாம் பார்க்கலாம், பத்திரிகைத்துறை, அரசியல், நீதித துறை என்பற்றுடன் தச்சுத்தொழில், மேசன் தொழில் என்பனவற்றில் கூட பெண்கள் நுழைந்துவிட்டார்கள்.

'ஆண்களுக்குச் சரிநிகர் சமமானவர்கள் பெண்கள்' என்னும் நிலை படுவேகமாக வந்துகொண்டிருக்கின்றது. (வந்துவிட்டது என்றே சொல்லலாம்)

இவ்வளவு மாற்றங்கள் பெண்களிடம் ஏற்பட்டாலும் 'பெண்மைக்கு அழகு செய் வது மென்மை' என்ற உண்மை இன்னமும் பொய்த்துப் போய்விடவில்லை.

ஓர் இல்லத்தலைவயின் - குடும்பத்தலைவியின் சிறப்பியல்புகளில் தான் அக்குடும் பத்தின் மகிழ்ச்சியும், உயர்ச்சியும் தங்கியுள்ளன.

ஒரு வீடு - ஒரு குடும்பம் சிறப்பாக இருக்கவேண்டுமா?

அது....

அந்தக் குடும்பத்தின் தலைவியின் கையில் தான் (சிறப்பில் தான்) தங்கியுள்ளது. இது உண்மை.

ஒரு குடும்பம் செம்மையாக இருக்கவேண்டுமானால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் எப்போதும் சுமூகமான உறவு இருக்க வேண்டும். இந்த உறவின் ஆழமே குடும்பத்தின் ஆணிவேராக - அடிநாதமாகத் திகழும்.

கணவன் - மனைவிக்கிடையில் ஆழமான அன்பும் பரஸ்பர நம்பிக்கையும் காத லும் நிறைந்திருக்க வேண்டும்.

தன் துணையின் அன்பையும் காதலையும் பெறுவதற்கும், பெற்றதை சீர்த்து வளர்ப்பதற்கும் பல காரியங்களைச் செய்ய வேண்டும்.

சில பெண்கள் இந்தக் கலையில் (கணவனின் அன்பைப் பெறுவதில்) கைதேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், பல பெண்களுக்கு இந்தக் கலையில் ஒரு சொற்ப விடயம் கூடத் தெரிவதில்லை. (கணவனுக்கும் தான்)

இதனால் குடும்ப உறவில் விரிசல் ஏற்படுகின்றது. பிள்ளைகள் பராமரிப்பில் சிக்கல் ஏற்படுகின்றது. இதனால், குடும்ப ஒற்றுமை சீர்குலைகின்றது.

இனி....?

கணவனது அன்பைக் கவர்ந்து குடும்பத்தைச் செம்மையாக நடத்துவதற்கு மனைவிக்கு சில ஆலோசனைகள் தேவை.

இந்த ஆலோசனைகளில் சிலவற்றை அடுத்த கடிதத்தில் எழுதுகின்றேன். எதிர்பார்த்திரு....

*பிரியமுடன் சந்தியா*

# மறக்க முடியாத அனுபவம்

நாவும் என் இரு நண்பிகளும் இணைந்து விவாகரத்துத் தொடர்பான ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவதற்குத் தீர்மானித்தோம். இதற்காகப் பலரிடமும் பேட்டியெடுத்தோம்.

அன்று ஒரு நீதிபதியுடன் கதைப்ப தறகு அவரிடம் போன் மூலம் அனுமதி எடுத தோம்.

அவரின் வீட்டு முகவரியைத் தெரிந்தவர் களிடம் கேட்டபடி சென்றோம். குறிப்பிட்ட வீதியில் இரண்டாவது ஒழுங்கையில் கடைசி வீடு அவருடையது என்று அறிந்து அங்கு சென்றோம்.



அந்த வீட்டின் கோலிங் பெல்லை அடித்ததும் ஒரு பெண்மணி வந்தார்.

நாம் நீதிபதயின் பெயரைக் கூறி "அவரிடம் நாங்கள் கதைத்தோம். அவர் தான் எங்களை வரச்சொன்னார்" எனறு கூறினோம். உடனே அவரும் "வாங்க வாங்க.. அக்கா சொன்னவதான் வெளியில் போனதும் கேர்ள்ஸ் சிலர் வருவினம் அவர்களிடம் நீ கொடுத்துவிடு என்று" என்றார்.

எங்களுக்கு எதுவும் புரியவில்லை எதைத தந்துவிடப் போகிறார். நாங்கள் வநதது பேட்டிக்குத்தானே என்று யோசித்தோம். எதற்கும் உள்ளுக்குள் போவோம் என்று ஹோலுககுள் போய் கதிரையில் இருக்க எத்தனித்தோம்.

உடனே அவர் "நீங்கள் சீக்கிரம் எடுத்துப் போனால் நல்லாயிருக்கும் நானும் வெளியில போக வேண்டும" என்றார். எங்களுக்குப் பதில சொல்வதற்குக் கூட அவகாசம் தராமல் பெட்ரூமிற்குள் நுழைத்தார்....

நாங்களும் ஒருவரையொருவர் கைக ளைப் பிடித்தபடி பெட்ரூமிற்குள் சென்றோம் அங்கே நிலம் பூராவும் நிறைய புத்தகங்களும் கொப்பிகளும் பரவிக் கிடந்தன.

"இவ்வளத்தையும் என்னெண்டு கொண்டு போகப் போறீங்க. பாக் எதுவும் கொண்டு வரவில்லையா" என்றார் அப்பெண்மணி. அதன்பிற கும் எங்களால் பொறுமையாய் இருக்க முடியவில்லை. "மிஸ் நாங்கள் நீதி பதியிடம் பேட்டியெடுக்கத்தான் வந் தனாங்கள். புத்தகங்கள் எடுக்க வர வில்லை" என்றோம்.

"ஐயோ நீங்கள் வேற ஆக்களா. நாங்கள் இந்த வீட்டுக்கு வந்து ஒரு கிழமைதான் ஆகுது. இதற்கு முதல் இங்க சில கம்பஸ் பெட்டைகள் தங்கியிருந்து படிச்சதுகளாம். அவர்களுடைய புத்தகங்கள்தான் இவை. இன்று அந்தப் பெட்டைகள் புத்தகங்களை [illegible]க வாறதாகப் போன் [illegible]னதுகள். அது தான் நீங்க [illegible]தும்..." என்று அவர் அசடு வழிய வார்த்தைகளை இழுத்தார்.

நாங்கள் மூவரும் திகைப்புமாறாமல் அந்த வீட்டை விட்டு வெளியில் வந்தோம். கேற்றைத் தாண்டியதும் ஒருவரையொருவர் பார்த்தோம். உடனே சிரிப்பு பீறிட்டு வந்தது. சிரிக்க ஆரம்பித்த நாம் கால் மணி நேரம் கழித்துத்தான் அந்த இடத்தை விட்டு அகன்றோம்.

அதன் பிறகுதான் எமக்குப் புரிந்தது நாம் சென்ற வீட்டுப் பெண்ணின் பெயரும் (வெளியில் சென்ற அக்கா) நாம் தேடிச் சென்ற நீதிபதியின் (பெண்) பெயரும் ஒன்று எபபதால்தான் இந்தத் தடுமாற்றம் என்று....

தீபா



# மர்மங்களை விடுவிக்கும்

# ஆழமான மோதல்

வான்வெளி அறிவியலில் மற்றொரு மைல்கல். ஜூலை 4ஆம் திகதி கலிபோர்னியா ஆய்வுகூடத்தில் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி முத்தமிட்டுத் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக்கொண்ட வான்வெளி ஆராய்ச்சியாளர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள்.

இந்தப் பிரபஞ்சம் எப்படித் தோன்றியது என்று வேதகாலத்தில் இருந்தே மனிதன் தேட ஆரம்பித்துவிட்டான். உபநிடதங்கள் பிரபஞ்சம் (உலகம்) பற்றியும் அதன் தோற்றம் பற்றியும் அதிகம் ஆராய்ந்துள்ளன. பல்வேறு கேள்வி, பதில் வடிவங்களில் இந்த ஆராய்ச்சி அவற்றில் உண்டு. அன்று தொடங்கிய மனிதனின் தேடுதல் இன்னும் முடிந்தபாடாக இல்லை. இடையில் கோடிக்கணக்கான ஆண்டுகள் கடந்துவிட்டன.

இருந்த இடத்தில் ஞானதிருஷ்டி மூலம் ஆராய்ந்தது அன்றைய அறிவியல். அதன் துல்லியத்தன்மை, நம்பகம் குறித்துக் கேள்விகள் எழுவது இயற்கை. ஆனால், இந்த அகண்ட வான்வெளிக்குள் ஊடுருவி ஒவ்வொன்றையும் துருவித்துருவி ஆராயுமளவுக்கு அறிவியல் இப்போது வளர்ந்துவிட்டது.

ஜூலை 4ஆம் திகதி வான்வெளியில் நிகழ்ந்த மோதல் அத்தகையதொன்றுதான். இந்த உலகம் பற்றிய, வான்வெளிபற்றிய, கோள்கள் பற்றிய, சூரியக் குடும்பங்கள் பற்றிய மனிதத் தேடலின் ஒருபகுதிதான்.

எமது பூமி அடங்கியுள்ள சூரியக் குடும்பம் தோன்றி 460கோடி ஆண்டுகள் கடந்துவிட்டன என்கிறது விஞ்ஞானம். ஆனால் இன்னும் அது எப்படித் தோன்றியது என்ற கேள்விக்கு விடை இல்லை. ஜூலை 4 மோதல் அதற்கு விடை தரும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாஸா கிட்டத்தட்ட6 மாதத்திற்கு முன்னர் அனுப்பிய விண்கலம் ஜூலை 4இல் வால்வெள்ளியில் மோதியது. அதன் மூலம்,கோடிக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் மனிதனின் தேடலுக்கு முடிவு வந்து விடும் என்பது விஞ்ஞானிகளின் நம்பிக்கை,எதிர்பார்ப்பு.

அகண்ட வான்வெளியில் ஆயிரக்கணக்கான சூரியன்கள், அவற்றைச் சுற்றிக்கோள்கள், எண்ணிலடங்காத தூசுத் துணிக்கைகள்,கற்கள் என ஏராளமானவை உண்டு. வால்வெள்ளிகளும் அவற்றில் ஒருவகை.

சற்றே ஒளிரும் தன்மையுடன் இந்த வால்வெள்ளிகள் வெளியில் அநாதரவாககச் சுற்றித்திரிகின்றன. அவற்றுக்கு சுயமான ஒளிரும் தன்மை இல்லை. எனினும் ஒளிர்ந்தபடியே அவை பயணிக்கின்றன. விண்ணில் காணப்படும் தூசுத் துணிக்கைகள் ஒன்று சேர்ந்து நீண்ட வால்போன்று தெரிவதால் இவற்றை வால்வெள்ளிகள் என்கிறார்கள்.

அவ்வப்போது இந்த வால்வெள்ளிகள் பூமிக்கு மிக நெருக்கமாகவும் வந்து செல்கின்றன. வான்வெளியில் மிக வேகமாகப் பயணிக்கும் இந்த வால்வெள்ளிகளால் சில சமயங்களில் பூமிக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற அச்சமும் ஒரு புறத்தே இருக்கிறது. டெம்பிள்-1என்று பெயரிடப்பட்ட வால்வெள்ளி அவற்றில் ஒன்று. அதில் மோதலை ஏற்படுத்தி ஆராய்ந்து பார்ப்பதற்கு நாஸா தீர்மானித்தது.

இந்த டெம்பிள் -1 வால்வெள்ளி மணிக்கு 37,000 கிலோ மீற்றர் வேகத்தில் வான்வெளியில் பறந்து கொண்டிருக்கிறது. தூசுத் துணிக்கைள் அடங்கிய ஐஸ்கட்டியான நீண்ட வால் அதற்கு. அதை மோதிப் பிளப்பதன் மூலம்,கிரகங்கள்,கோள்களின் தோற்றம் எப்படி நிகழ்ந்தது என்பதை அறிந்து கொள்ள நாஸா திட்டமிட்டது.


இதற்காக, 'ஆழமான மோதல்' என்று அர்த்தப்படுத்தக்கூடிய 'டீப் இம்பக்ட்' என்ற விண்கலம் ஒன்றை 6 மாதங்களுக்கு முன்னர் அது அனுப்பியது. அதன் உள்ளே வால்வெள்ளியுடன் மோதுவதற்கான 'மோதல்' என்ற அர்த்தத்திலான 'இம்பக்ட்' என்ற தாக்கு கலம் ஒன்று இருந்தது.


ஜூலை 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை திட்டமிட்டபடி 'டீப் இம்பக்ட்' விண்கலம் தனது பாதையில் டெம்பிள் -1 வால்வெள்ளியை நெருங்கியது. அன்றே தன்னுள்ளிருந்த தாக்குகலமான 'இம்பக்டை' இது வெளியே விடுவித்தது.


தாய்க் கலத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட 'இம்பக்ட்' சுமார் 24 மணி நேரப் பயணத்தின் பின்னர் ஜூலை 4ஆம் திகதி திங்கட்கிழமை டெம்பிள் -1வால்வெள்ளியைச் சந்தித்தது; மோதியது. அதன் ஒரு பகுதியைச் சிதைத்தது.

தாய்க்கலமான 'டீப் இம்பக்ட்' பாதுகாப்பாக 500 கிலோ மீற்றர் தூரத்தில் பயணித்தபடி மோதலைப் படம் பிடித்தது. இதற்காக அதி சக்திவாய்ந்த இரு கமெராக்கள் அதில் பொருத்தப்பட்டிருந்தன. நாஸா விஞ்ஞானிகள் திட்டமிட்டபடி அனைத்தும் கனகச்சிதமாக நடந்தன.

'இம்பக்ட் கலம்' 370 கிலோ கிராம் நிறைகொண்டது. கிட்டத்தட்ட உடுப்புத் துவைக்கும் 'வோஷிங் மெசின்' ஒன்றின் அளவானது. ஆனால் அது வால்வெள்ளியில் மோதியதன் மூலம் அதில் கால்பந்தாட்ட மைதானம் அளவான பெரிய துவாரம், ஓட்டை ஏற்பட்டது. இரண்டு முதல் 14 மாடிகளைக் கொண்ட ஒரு மாடித்தொடர் நீளமான ஆழத்தை இந்த மோதல் ஏற்படுத்தியது.





'இம்பக்ட்' மோதிய வேகத்தில் வால் வெள்ளியில் இருந்து சிதறல்கள் நாலாபுறமும் பறந்தன.

கலிபோர்னியாவில் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்த விஞ்ஞானிகள் முகத்தில் பெருமை, பூரிப்பு, மகிழ்ச்சி. அனைவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி சந்தோஷத்தைப் பகிர்ந்துகொண்டனர். திட்டமிட்டபடி அனைத்தும் கனகச்சிதமாக முடிந்ததில் அவர்களுக்கு அளவிடமுடியாத குதூகலம்.

**நோக்கம்**

டெம்பிள் - 1 வால்வெள்ளியின் வெளிப்புறத்தை, அதன் தோலை ஊடறுத்து அதனுள்ளே என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்பதே இந்த மோதலின் நோக்கம். 'இக்பக்டின்' மோதல் மூலம் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வான்வெளி பற்றிய பல்வேறு தகவல்களை அறிந்துகொள்ள இது உதவும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.


"நாங்கள் எங்கே மோதவேண்டும் என்று நினைத்தோமோ அங்கேயே மிகச் சரியாக மோதியது. மோதல் நான் எதிர்பார்த்ததைவிடப் பெரியது ஏன்? இங்கே எங்களில் அனேகர் எதிர்பார்த்ததை விடவும் மிகப் பெரியது. நாங்கள் எதைக் கேட்டோமோ அவற்றுக்கான அனைத்துத் தகவல்களும் கிடைத்துள்ளன. சூரியக் குடும்பங்கள் பற்றிய ஆராய்ச்சிக்கு இது புதிய வாசலைத் திறந்து விட்டுள்ளது" -என்கிறார் நாஸா விஞ்ஞானியான டாக்டர் டொன் ஜியோமான்ஸ்.


இந்த மோதலின் மூலம் கிடைத்த தகவல்களைக் கொண்டு டெம்பிள்-1 வால்வெள்ளியின் உட்புறம் பற்றிய தகவல்களைச் சரியாகப் பெறமுடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அதிலிருந்து இந்த அகண்ட பிரபஞ்சத்தின் உண்மையான முகத்தைப் பற்றிய புதிய தகவல்கள் அவர்களுக்குக் கிடைக்கும்.


பூமியில் எப்படி உயிரினங்கள் உருவாகின என்பதற்கும் வேறு கிரங்களில் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் பற்றிய கேள்விகளுக்கும் இந்த ஆய்வு விடைசொல்லக்கூடும்.

**சறுகல்**

மோதல் கனகச்சிதமாக நிகழ்ந்த போதும்








வால்வெள்ளியில் ஏற்பட்ட பள்ளத்தை,ஓட்டையை தாய்க் கலமான 'டீப் இம்பக்டி' னால் நேரடியாகப் படம் பிடிக்க முடியவில்லை. இது விஞ்ஞானிகளுக்கு சிறிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சிறிய சறுகலில்,வால்வெள்ளியில் மோதலால் ஏற்பட்ட பாதிப்பை மிகத்துல்லியமாக அளவிடமுடியாது போயுள்ளது. எனினும் தங்களிடம் இருக்கும் வசதிவாய்ப்புக்களைப் பயன்படுத்தி நாஸா விஞ்ஞானிகள் அதனைக் கணக்கிட்டுள்ளனர்.

மோதலின் பின்னர் வெளியே தெறித்த சிதறல்களின் அளவுகளைக் கொண்டு பள்ளத்தின் கனபரிமாணம் துல்லியமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

வால்வெள்ளியில் ஏற்பட்ட பள்ளத்தை 'டீப் இம்பக்ட்' நேரில் அவதானித்திருந்தால், டெம்பிள்-1இன் உட்கட்டுமானம் பற்றிய மேலதிக தகவல்கள் கிடைத்திருக்கும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

எனினும் நேரடியல்லாத முறைகள் மூலம் அவர்கள் டெம்பிள் -1வால்வெள்ளியின் மேற்பரப்பின் தடிப்பு, மோதலினால் ஏற்பட்ட ஆழம் மற்றும் பள்ளத்தின் ஆரை என்பவற்றைத் துல்லியமாகக் கணித்துள்ளனர்.

என்றாலும் அதனை (பள்ளத்தை) பார்ப்பதன் மூலமும் அளப்பதன் மூலமும் கிடைக்கும் திருப்தி இதில் இல்லை என்றார் டாக்டர் ரொச்சி. இந்தத் திட்டத்தில் பங்கெடுக்கும் மற்றொரு விஞ்ஞானி அவர்.

படங்களைக் கொண்டு கணிப்பிடும் மென்பொருள்கள் மூலமும் வால்வெள்ளியில் ஏற்பட்ட பள்ளத்தை கணிப்பிடுவதற்கான நடவடிக்கைகளையும் நாஸா மேற்கொண்டுள்ளது.

மோதலின் பின்னர் வான் வெளியில் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கும் டெம்பிள் -1 வால் வெள்ளியில் இருந்து தொடர்ந்தும் சிதறல்கள் வெளியாக்கிக்கொண்டே இருக்கின்றன.

தொலை நோக்கிகள் மூலம் விஞ்ஞானிகள் அதனைத் தொடர்ந்த வண்ணம் இருக்கிறார்கள். மோதலின் பின்னர் டெம்பிள் -1இன்னும் பிரகாசமாக ஒளிர்கிறது என்று கூறுகிறார் டாக்டர் ரொச்சி.

இப்போதுவரை அதிலிருந்து (வால்வெள்ளி) பொருள்கள் வெளியே தள்ளப்படுகின்றன. மோதலுக்கு முன்னர் இருந்ததைவிட டெம்பிள்-1இப்போது மேலும் பிரகாசமாக இருக்கிறது. ஓட்டையின் (மோதலால் ஏற்பட்ட தூவாரம்) ஆழத்தைப் பொறுத்து சிதறல்கள் இன்னும் சில வாரங்கள் வரையிலோ மாதங்கள் வரையிலோ வெளியேறிக் கொண்டே இருக்கலாம்- என்று தெரிவித்தார் அவர்.

மோதலின்போது தெறித்த தூசுத் துணிக்கைகள் சிதறல்களைக் கொண்டு வால்வெள்ளியின் மேற்பரப்பின் தடிப்பு, அதன் கட்டமைப்பு என்பவற்றை முதலில் ஆராய்வதற்கு விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

கிடைத்துள்ள தகவல்களை ஆராய்ந்து முடிவுக்கு வருவதற்கு இன்னும் பல மாதங்கள் செல்லலாம். அவற்றை முழுதாக ஆராய்வதற்கு 6மாதங்கள் முதல் ஒரு வருடகாலம்வரை கூடச் செல்லலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அந்த ஆய்வுகளின் முடிவுகள் வெளிவரும்போது அகண்ட வான்வெளியின் பல மர்ம முடிச்சுக்கள் அவிழ்க்கப்படும்.



– பிரேம்

# யாழ். பயணம்



அது 1990ஆம் ஆண்டு.

அரச ஊழியன் என்பதால் வவுனியாவில் கடமையாற்ற வேண்டியிருந்தது. மனைவி, பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில்.

வசிப்பிட வசதியின்மை, பிள்ளைகளின் கல்வி வசதி - இவைகள் காரணமாக இரண்டு தோணியில் கால் வைத்த நிலை.

யாழ்ப்பாணப் பெற்றோர் பெண் குழந்தை பெற்றால், செலவுகளைச் சுருக்கி சீதனம் சேர்க்கத் தொடங்கிவிடுவர் என்ற கருத்து முன்னர் ஒரு காலகட்டத்தில் வழங்கி வந்ததுண்டு. காலப்போக்கில் அக்கருத்து மாறி, பிள்ளைகளின் கல்வி உயர்ச்சிக்காக அவர்கள் பல தியாகங்களைச் செய்ய முன் வருவதாகக் கூறப்படலாயிற்று. அந்த வகையில், நானும் பிள்ளைகளின் கல்வி உயர்ச்சிக்காக சிரம வாழ்க்கைக்குச் சித்தமாகியிருந்தேன்.

நாட்டில் அந்த வேளையில் தமிழின விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றிருந்தது. அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் - பதுங்கித் தாக்கும் கெரில்லாப் போர் உத்தியில் - ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசைத் திணறடித்த கால கட்டமது. கெரில்லாப் போர் உத்திக்கு முகங்கொடுக்க இயலாத அரச இயந்திரம், எந்தவித பாகுபாடுமின்றி ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தின் மீது பொருளாதார, எரிபொருள் தடைகள் விதித்து வாட்டி வதைத்தது. அவற்றின் தாக்கத்தையும் சிரமத்தையும் அன்றைய சிறிசுகளான, இன்றைய இளம் சமூகம் அனுபவித்து உணரும் வாய்ப்பு ஏற்பட்டதில்லை. விருத்தெரியா வயதில் அவர்களைப் பொத்திக் காத்து வளர்த்து கல்வி அறிவூட்ட நாம் பட்ட சிரமங்களை அவர்களுக்கு விளக்கிக் கூற நாம் தவறியிருக்கிறோம்.

இரண்டு தோணியில் கால்வைத்த நிலையில், மாதமொரு தடவையாகிலும் வீதித்தடைச் சோதனைகள் தாண்டி, துவிச்சக்கர வண்டிப் பயணத்தில் வீட்டுத் தேவைக்காய் அத்தியாவசிய உணவுப் பொருள்களும், 'பிளாஸ்ரிக் கானில்' விளக்கெரிக்க மண்ணெண்ணெய்யுமாய், கொம்படியும் சங்குப்பிட்டியும் தாண்டி யாழ்ப்பாணம் வந்து போவதென்றால் போதும் போதும் என்றாகிவிட்டிருந்த கால கட்டம் அது. ஒரு தடவை, இரு தடவை என்றல்லாது வருடக் கணக்காய் இவ்விதம் பயணம் மேற்கொண்டு மனைவி, பிள்ளைகளுடன் விடுமுறை நாள்களைப் போக்கிய யாழ்ப்பாணத்து அரச ஊழியர் ஒரு சிலரல்லர்; பல பேர்.

இயலாத் தன்மையால், மனவிரக்தியுடன் இயங்கியவேளை கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி இளைப்பாறும் வேளைக்கு முன்னரே இளைப்பாறி, சொந்த மண்ணில் நிலையாய் தங்கி விட்டவர்களில் நானும் ஒருவன்.

இடையில் ஓய்வூதிய அலுவலாய் கொழும்பு சென்று அலுவல் முடியும் வரை ஒரு மாத காலம் தங்க நேர்ந்ததும் ஒரு வாழ்க்கை அனுபவமே. 'செல்'லடிக்கும் 'பொம்பர்' தாக்குதலுக்கும் அகப்படாது கொழும்பு சென்றடைந்ததைக் குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவே அரை மாத காலம் ஆகியது. அண்மையில் ஆனையிறவு தாண்டிப் பயணிக்க நேர்ந்தவேளை இத்தனைக்கும் காரணமான அந்தத் தடைமுகாமும் அதனை அழித்தொழித்து விடுவிக்க உயித்த தியாக தீபங்களின் நினைவும் மனதில் நிழலாடியது.

சரி, இப்போது நேரடியாகவே விஷயத்துக்கு வந்து விடுகிறேன்.

கொழும்பில் தங்கி உயர் கல்வி கற்கும் மகன் அண்மையில் வாய்த்த 'வெசாக்' விடுமுறையைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம் வந்திருந்தான். விடுமுறை முடிவடைவதற்கு இரண்டு நாள்கள் முன்பாகவே கொழும்புக்குத் திரும்பிச் சென்று விடுமாறு பெற்றோர் நாம் கேட்டுக் கொண்டோம். இங்கிருந்து போக்குவரத்துச் சபை பஸ் மூலம் வவுனியா சென்று, அங்கிருந்து வழமையான பிரயாணத்தில் ஈடுபடும் மினி பஸ் மூலம் கொழும்புக்குச் சென்றால் செலவைச் சுருக்கிக் கொள்ளலாம் என்பது நான் முன்வைத்த கருத்து. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் தனியார் சொகுசு பஸ்ஸில் பயணம் செய்தால் சிரமம் எதுவுமற்ற பயணமாய் அமையும் என மகன் அபிப்பிராயப்பட்டான். அவனது விருப்பப்படியே மறுநாளுக்கான பயண ஒழுங்குகளைச் செய்துகொடுத்தேன். மறுநாள் பயணம் மேற்கொள்ளாது அதற்கடுத்தநாள் பயணம் மேற்கொள்ளப்போவதாக அன்றிரவு தாயாரிடம் - எனது மனைவியிடம் - தெரிவித்தானாம். ஏற்கனவே பணம் செலுத்தி இருக்கைப் பதிவு செய்திருந்ததால் குறிப்பிட்ட தினத்தன்றே பயணம் செய்யுமாறு வற்புறுத்தினோம். வேண்டாவெறுப்பாக எமது பேச்சை ஏற்று அன்றைய தினமே கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றான்.

அன்றைய தினம் மாலை நான்கு மணியிருக்கும். தொலைபேசி மணி அழைத்தது. மறுமுனையில் மகன் தொடர்பு கொண்டு பேசினான்.

'அதற்குள் கொழும்பு போய்ச் சேர்ந்து விட்டானா?' மனது ஆச்சரியப்பட்டது.

தனது கையடக்கத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசுவதாகவும், தான் பயணிக்கும் பஸ் அப்போது சிலாபம் பகுதியில் சென்று கொண்டிருப்பதாகவும் தெரிவித்தான்.

'போயும் போயும் இதற்காக இப்படியொரு தொலைபேசித்தொடர்பு அவசியம்தானா?' மனது சலித்துக் கொள்கிறது.

தொடர்ந்த அவனது பேச்சு எனக்கு ஆச்சரியத்துக்குப் பதில் பெரும் மனக்கவலையைத் தந்தது.

"அப்பா! இப்போது 'ஸ்கோர்' என்ன? இப்போது யார் துடுப்பெடுத்தாடுகிறார்கள்?"

அன்று இலங்கை - ஆஸ்திரேலியா இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கண்டியில் இடம்பெறுவதும், அதனைத் தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்புவதும் அப்போதுதான் எனக்கு ஞாபகத்துக்கு வந்தன. அது மட்டுமன்றி, கொழும்புக்கான அன்றைய பயணத்தை எனது மகன் தவிர்க்க விரும்பியமைக்கான காரணமும் எனக்குப் புரிய ஆரம்பித்தது.

இன்றைய யாழ்ப்பாணத்து இளம் சமூகத்தின் மனப்போக்கு இது.

நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலை மனதுக்குத் திருப்தி தருவதாக இல்லை. ஏமாற்றமுயலும், புறக்கணிப்பு நிலையால் அரசின் திட்டமிட்டுத் தமிழ் இனத்தைப் பலவீனப்படுத்த முயலும் செயற்பாடுகளால், தமிழ் இனத்தின் ஆத்திரமும், அதிருப்தியும் புதிய, சிரமங்கள் மிக்க பாதைக்கு மாற்றமுறத்தக்க சாத்தியங்கள் தென்படுகின்றன.

அவ்விதம் அமைதி நிலை குலைந்து, நாட்டில் மீண்டும் போர் மேகம் சூழக் கூடாதே என எண்ணி மனது ஆதங்கப்பட்டுக் கொள்கிறது.

திரண்டு வரும் மழை மேகம் எப்போது மழையாகப்பொழியும் என்பதைக் கூற இயலாதது போல, அமைதி நிலை குலைந்து நாட்டில் மீண்டும் உரிமைப் போர் எப்போது வெடிக்கும் என்பதையும் எதிர்வு கூற இயலாதுள்ளது.


அப்படியொரு சூழ்நிலை உருவாகுமானால், இன்றைய இளம் சமுதாயத்தால் அதனை இலேசில் ஜீரணிக்க இயலாது போய் விடும்.

காரணம் அன்றைய சிறிசுகளுக்கு நேரடி அனுபவம் கிட்டியிருக்காது விடினும் அனுபவ பாடம் படித்துள்ள நாம் எமது அனுபவங்களை அவர்களுக்கு உணர்த்தத் தவறியுள்ளோம்.

**பொன்வேளன்**

## அன்றும் இன்றும்

## அப்புச்சி



அலுமினிய வல்லூறெம்
தலை தாண்டிப் போயிற்று!
அயல் வீட்டுக்காரர்கள்
அவசரமாய்க் கடந்தார்கள்!
அதிர்வுகளின் தூரத்தை
அனுமானம் செய்து சொன்ன
ஆறேகால் வயதுத் தம்பியனின்
அரைக்களிசான்
ஈரஞ் சுவற்றிற்று!

அடுக்காமல் அடைந்துவைத்த
உடுப்புகளின் பொட்டலத்தை
எடுத்துப் புறப்பட்டோம்.

'அப்புச்சி வாறியளோ?'
அறுபத்து நான்கும் கடைசியுமாய்க் கேட்டேன்!
உறுதி தளர்ந்து அவர் 'ஓ'மென்று சொல்வாரோ?
இறுதித் தடவையும் ஓர் நப்பாசை!

ஓரிரண்டு நாள்முன்பே சொல்லிவிட்டார்!
'போவதெனில் ஓடுங்கள்
உயிர் இருக்குமட்டும்
ஓரடியுங் கால் நகரேன்! - ஊருக்குள்
சாவதெனில் என்
ஆத்மா சாந்தி பெறும்'

உயரே, வெறுவானில்
ஊர்ந்த கரும்புகையில்
விழி ஒட்டி வெறித்து நின்ற
அப்புச்சி விடை தந்தார்!

நடை வலுத்து ஓடிச்
சனப் பெருக்கில் நெரிவுண்டு
மடை திறந்த வெள்ளம் போல்
மாற்றூரிற் குடி கொண்டம்!

அரையாண்டின் அஸ்தமிப்பில் -
உச்சி வெயில் சுட்டெரிக்கும்
ஓர் நாளில் மீண்டும் எம்
ஊர் புகுந்தோம்!

மூன்று அடி உயர
முட்பற்றை மூடிநின்ற
முற்றங் கடந்தெம்
முன் வாசலில் நடந்தம்!
சிதைந்து பரந்திருந்த சிமெந்துக் கற்குவியல்
எட்டி விலக்க எலும்புகளின் சொச்சங்கள்!

சின்னி விரல் மேலிருந்த
சிவப்பு றப்பர் மோதிரமும்
செம்மஞ்சட் கற்பதித்த
சின்னக் கடுக்கன்களும்
அப்புச்சி தானென்று அடையாளங் காட்டிற்று!

உலர்ந்திருந்த கண்பரப்பில்
ஈரம் பிசுபிசுக்க
உமிழ்நீரில் சிறிதாக
உப்புக் கரித்திற்று!

என்றாலும்
எங்கள் அப்புச்சியின் ஆத்மா
சாந்தியடைந்திருக்கும்
என்ற நினைவில்தான்
என் உள்ளந் தேறிற்று!

ஜெ.பிறேம்குமார்

## பறவைகளோடு இனிமேல் நாமும் பறக்கலாம்




எமது ஓய்வு நேரங்களில் பறவைகளைப் போன்று சுதந்திரமாக வானத்தில் பறந்து செல்ல முடியுமானால்....

இவ்வாறு மனித மனங்களில் உதிக்கும் கணக்கிலடங்காத கற்பனைகளுக்கு உயிர் கொடுக்கும் நவீன தொழிநுட்பங்கள் இந்த விஞ்ஞான உலகில் உயிர் பெற்றிருப்பது உவகையளிப்பதாகவே உள்ளது.

அண்மையில் முற்றிலும் (E-FLYING) தொழில்நுட் பத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ள 'பராஜெற்' (PARAJET) பறக்கும் இயந்திர உபகரணம் அத்தகைய கற்பனையொன்றுக்கு உயிர் கொடுத் துள்ளது. பாரமற்ற மிக இலேசான இந்த இயந்திர உபகரணத்தைத் தேவையேற்படின் எமது தோள்களில் கூட ஏந்திச் செல்லலாம் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த E-FLYING PARA JET இயந்திர உபகரணத் தின் மூலம் 2500 மீற்றர் (8000 அடிகள்) வரையில் மேலெ முந்து 75கி.மீ வேகத்தில் மணிக்கு 160 கி.மீ வரையில் பறந்து செல்ல முடியும். எமது வசதிக்கேற்றவாறு கையாண்டு இலகுவாக இயக்கக்கூடிய விதமாக இந்த இயந்திர உபகரணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திர உபகரணத்தை Remote - Control என்றழைக்கப்படும் கட்டுப் படுத்தும் சாதனம் மூலமாகவும் இயக்க முடியுமாதலால், ஆபத்தான கட்டங்களைத் தாண்டிப் பாதுகாப்பாகத் தரையிறங்கவும் முடியும்.

சாா

## அம்மா கிடைக்குமா.....

கடுக்கதை



அகதிகள் எல்லோருமே நான் முந்தி நீ முந்தி என முண்டியடித்துக் கொண்டு வரிசையிலே நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்காக நின்றனர்.

இவர்களுக்கெல்லாம் மாறாக சந்தியா மட்டும் அங்கிருந்த மரநிழலொன்றிலே சிந்தனையுடன் இருந்தாள்.

'ஏய். சந்தியா! இங்க வா, வந்து எனக்கு முன்னுக்கு நில். அங்கே என்ன செய்கிறாய்? நீயும் ஒரு தனிக்குடும்பம் தானே.... உனக்கும் பொருள்கள் கிடைக்கும்' என அதட்டலாகக் கூப்பிட்டார் சந்தியாவின் உறவினர் ஒருவர்.

வெறுப்புடனே எதுவும் பேசாது எழுந்து வந்து பொம்மைபோல சொன்ன இடத்திலே நின்றாள் சந்தியா.

ஒவ்வொருவராகப் பொதிகளைப் பெற்றுச் சென்று கொண்டிருந்தனர். சந்தியாவின் முறையும் வந்தது. சந்தியா, ஒரு தீர்மானத்தை எடுத்தவளாகப் பொதிகளை வழங்கும் பெரியவரைநோக்கி 'இதிலுள்ள எந்தப் பொருளுமே எனக்கு வேண்டாம். எனக்கு என் அம்மா வேண்டும் தருவீர்களா? சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன தேவையாக உள்ளது என அறிந்துதானே இந்தப் பொதிகளைக் கொண்டு வந்தீர்கள்.

அதனால.... நா..... என் அம்மா எப்படி இருப்பா எண்டு என்று முன்கூட்டியே சொல்றன். நீங்கள் எனக்கு அதேபோல அம்மாவைப் பெற்றுத்தருவீங்கள் தானே' எனக் கூறத்தொடங்கினாள்.

'என் அம்மா சுனாமி அலை எழுவதற்குமுன் காலை எட்டு மணியிருக்கும்போது என்னைப் பாடசாலைக்கு தயார் பண்ணி உணவூட்டி முத்தமிட்டு சந்து! கவனமாக அப்பாவோட பள்ளிக்குப் போ.... பள்ளி விட்டதும் நான் வராம நீங்க தனியா வரக்கூடாது. நான் பன்னிரண்டு மணிக்கு வந்திடுவேன் என அன்பாக அறிவுரைகூறி அனுப்பினார்.

'இப்படியான அன்பான, அக்கறையான கண்ணியமான அம்மா எனக்கு வேண்டும். உங்களால தரமுடியுமா?' என விம்மி அழுதவளைப் பார்த்து ' பொதிகளை வழங்கிக் கொண்டிருந்த பெரியவர் செய்வதறியாது திகைத்து நின்றார்.

*எஸ்.வி.கீதா மானிப்பாய்.*

# சிலந்தி, தன் வலையில் சிக்காதது ஏன்?



சிலந்தி வலை விந்தையான ஒரு பொருள். இந்த வலையை விட விந்தையானது சிலந்து. இந்தப் பூச்சி மழை, வெயில், குளிர் போன்ற எல்லாப் பருவ காலங்களிலும் நீர், நிலம் மற்றும் நிலத்தினடியில் வாழ்கிறது.

சின்னஞ்சிறு புள்ளி வடிவத்திலிருந்து 7 சென்ரி மீற்றர் அகலம் வரை பல்வேறு உருவங்களில் சிலந்திகள் உள்ளன.

சில வகைச் சிலந்திகள் ஒரு வருட காலம் வரை நீரின்றி வாழக்கூடியவை. 'டார்ன்டுலா' என்ற சிலந்தி பறவையைக் கூடத் தின்னும். இச் சிலந்தி 15 வருடங்கள் வரை வாழக் கூடியது. எட்டுக் கால்களும், எட்டுக்கண்களும் உள் ள இந்தச் சிலந்தி களுக்குத் தலையும், உடலும் அடங்கிய இரு உறுப்புகளே உள்ளன.

சிலந்தி, வலை பின்னப் பயன்படுத்தும் பொருள் அதன் வயிற்றிலுள்ள சுரப்பிகளிலிருந்து உற்பத்தியாகிறது. இதன் வயிற்றின் முனையில் அமைந்துள்ள சிறு துவாரத்திலிருந்து திரவப் பொருள் மெல்லிய நூலிழை போன்று வெளிவருகிறது. காற்றுப்பட்டதும் இந் நூலிழை வலிமையானதாக மாறிவிடும்.

இந்த நூலிழைகள் பல வகையில் காணப்படுகிறது. சில பசை போல ஒட்டிக் கொள்ளும் மற்றும் சில மிருதுவானதாக இருக்கும். இவற்றுள் ஒட்டிக் கொள்ளும் நூலிழை இரையைச் சிக்க வைக்கும் பணியைச் செய்யும். ஈக்கள், மற்றும் பூச்சிகள் இந்த நூலிழையின்மீது பட்டதும் வலையில் சிக்கிக் கொள்ளும். பின்னர் இவற்றை சிலந்தி தனக்கு இரையாக்கிக் கொள்ளும்.

சிலந்தி தன்னுடைய வலையில் தான் ஏன் சிக்கிக் கொள்வதில்லை என்று தெரியுமா? சிலந்திக்கு எந்தெந்த நூலிழைகள் ஒட்டக் கூடியவை என்று தெரியும். அதனால், ஒட்டும் நூலிழைகளில் சிக்காது மிருதுவான நூலிழைகளின் மீது ஊர்ந்து சென்று தனது காரியங்களைச் செய்யும்.


சிலந்திகள் பல வகையான வலைகளைப் பின்னும். இவற்றுள் சக்கரம், புனல் போன்ற அமைப்புகள் பார்க்க அழகாக இருக்கும்.

**கவிதா**

# கூடாதவர் நட்பு

ஒரு காட்டில் எருது ஒன்று வாழ்ந்து வந்தது. அந்தக் காட்டின் ஒரு பகுதியில் பச்சைப் பசேல் என்று புல் முளைத்துக் கிடந்தது. எருதுக்குத் தான் இருக்கும் இடத்தில் கிடைத்த புல் போதுமானதாக இருந்தது. எனினும் தூரத்திலே மிகவும் அழகாக புல் முளைத்துக் கிடந்த பகுதியை நோக்கிப் புறப்பட்டது.

புறப்பட்ட எருதை மரம் ஒன்றில் இருந்த கிளி கூப்பிட்டது. 'எருதாரே! எங்கே போகிறீர்கள்? எனக் கேட்டது. எதிரில் அழகான புல்வெளி ஒன்று உள்ளது. அதைச் சாப்பிடப் போகிறேன் என்றது எருது.



'ஐயோ! அங்கே போக வேண்டாம். புலி இருக்கிறது. உம்மைக் கொன்று தின்றுவிடும்' என்று எச்சரித்தது கிளி.

அந்த வழியால் வந்த நரி இதனைக் கவனித்தது. அது கிளியைப் பார்த்து ஒருவர் ஒரு வேலையாக போகும் போது எங்கே போகிறீர் எனக் கேட்டதே தவறு. அது மட்டுமன்றி எருது புல் தின்னப் போவதை எப்படித் தடுக்கலாம். அங்கே புலி இருக்கிறது என்று சொல்லி அவரைப் பயமுறுத்துவது தவறு. புல் வெளியிலே எப்படிப் புலி இருக்கும். அப்படிப் புலி இருந்தாலும் புலி புல் தின்னாது என்று உமக்குத் தெரியாதா? அப்படித் தான் புலி வந்தாலும் எருது தன் கொம்புகளால் அதன் உடலைக் கிழித்துக் கொலை செய்யாதா? எருதை எப்படி நீ மட்டமாக நினைக்கலாம்' என்று கேட்டது.

நரியின் பேச்சைக் கேட்ட எருதுக்கு கிளியின் மேல் கோபம் வந்தது. அதனை உதாசீனப்படுத்திவிட்டு தன் வீரத்தைப் பாராட்டிய நரியோடு புல்வெளிநோக்கிச் சென்றது.

எருது அங்குள்ள பசும் புல்லை இன்பமாக மேய்ந்து கொண்டிருந்த போது நரி அங்கிருந்து மெதுவாக நழுவிச்சென்றது.

புல்லின் சலசலப்பை உணர்ந்த பசியோடிருந்த கிழட்டுப் புலி எருதின் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது. எஞ்சியதை நரியும் தின்று மகிழ்ந்தது.

சாகும் போது தான் எருதுக்கு அறிவு வந்தது. கிளியின் எச்சரிக்கையை பொருட்படுத்தாது நரியின் நய வஞ்சகத்திற்கு இரையானதை எண்ணி வருந்தியது.

*'கூடாதவர் நட்பு கெடுதலையே தரும்'*

- அப்பம்மா

## விடுகதைகள்

- அந்தரத்தில் ஆடுவான். ஆனந்தம் தருவான். அவன் யார்?

  *ஊஞ்சல்*
- உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அது என்ன?

  *பாய்*
- பார்த்தால் ஐந்து கால். எண்ணினால் நான்கு கால் அது என்ன?

  *யானை*
- எத்தனைதரம் திறந்து மூடினாலும், சத்தமே வராத கதவு அது என்ன?

  *கண்மடல்*
- மின்னல் வேகத்தில் மின்னியதைப் பிடித்து வைப்பான் அவன் யார்?

  *புகைப்படக் கருவி*
- உணரத்தெரிந்தவனைக் கண்ணால் காண முடியாது. அவன் யார்?

  *காற்று*
- கையில் அடங்கும் பிள்ளை. கதை நூறு சொல்லும் பிள்ளை அது என்ன?

  *புத்தகம்*
- ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக் கை. அவன் யார்?

  *குடை*

- **ஸ்ரீமோகனா குவாரகன்,** தரம் -5, அரியாலை.

## புதைந்துள்ள புதையல்கள்

| பு | தை | ய | ல் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |

- *மாதுவின் மறுபெயர் - 234*
- *மிருகத்தின் தீனி - 14*
- *துரும்பாய் எதையும் அள்ளிச் செல்லும் - 134*
- *தோண்டி எதையும் போட்டு மூடுவது - 12*
- *இவற்றுள் புதைந்து கிடப்பது - 1234*

*தயாரிப்பு: சி.விரமதீபன்*

*யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.*

## தெரிந்து கொள்ளுங்கள்

- பிறந்ததிலிருந்து அசையாத உயிர்

  *முட்டை*
- நின்ற படி தூங்கும் விலங்கு

  *குதிரை*
- மிகபெரிய நூதனசாலை

  *பிரிட்டிஷ் நூதனசாலை*
- மிகவெப்பமான இடம்

  *அஸ்ஸியா*
- ஆறுகள் இல்லாத நாடு

  *சவுதிஅரபியா*
- அதிக முட்டை இடும் உயிரினம்

  *கறையான்*
- மிகபெரிய பீடபூமி

  *திபெத்*
- எதிர்கட்சி இல்லா நாடாளுமன்றம்

  *சிங்கப்பூர்*
- உலகில் உள்ள ஒரே இந்து மதநாடு

  *நேபாளம்*
- ஆசியாவில் உள்ள ஒரே கிறிஸ்தவ நாடு

  *பிலிப்பைன்ஸ்*

- **தெ.பிரசாந்தன்,** மாதிப்பாய்.



*செல்வி . கி.சுவர்ணா*

## உலக நாடுகளின் தேசியச்சின்னம்

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | - | தங்கத்தடி |
| ஆஸ்திரேலியா | - | கங்காரு |
| பிரான்ஸ் | - | அல்லி மலர் |
| பிரித்தானியா | - | ரோஜாமலர் |
| கனடா | - | வெள்ளைமலர் |
| இந்தியா | - | சிங்கத்தின் தலை |
| ஈரான் | - | ரோஜாமலர் |
| ஈராக் | - | சிவப்பு ரோஜா |
| ஜப்பான் | - | கூட்டுப் புழு |
| பாகிஸ்தான் | - | பிறை |

**சரீவினா,** நவாலி.




**தம்பி, தங்கைகளே!**

'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.



**பூக்கள்**

வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்
எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
தினமும் மலரும் பூக்கள்

மஞ்சள் சிவப்பு நீலமென
வண்ணமலர்கள் பலவகை
வாடி உதிர்ந்து விழுந்தாலும்
வாழ்வின் தத்துவத்தை உணர்த்திடும்

- தயா

# செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்....-06

செல்லையாத் தாத்தாவைக் கண்டதும் பிள்ளைகள் ஓடி வந்தனர். தாத்தாவைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். 'தாத்தா! பிரியன் கையை மடித்து மாதுங்களில் வரும் நாள்களைச் சொல்கிறான். அது சரியாய் இருக்குமா?' என்று கேட்டாள் சாந்தி.

'ஓம் பிள்ளை! கையை மடக்கி கைவிரல்கள் பிரியும் மொழியில் மிதப்பாக இருக்கும் இடங்களை 31 நாள்களாகவும், தாழ்வாக இருக்கும் இடங்களை 30 நாள்களாகவும் கொள்ள வேணும். கடைசி விரல் உள்ள மொழியில் இரண்டு முறை எண்ண வேணும் அது ஜூலை, ஓகஸ்ட் மாதுங்களைக் குறிக்கும். அதே போல பெப்ரவரி மாதம் வரும் பள்ளமான பகுதியில் 28 நாள்கள் எனக் கொள்ள வேணும்'

'அப்ப சுட்டு விரல் மொழியிலை இருந்து மாதுங்களை எண்ணி சின்னி விரலிலை இரண்டு முறை எண்ணி அதிலிலையிருந்தே திரும்பி என்ன வேணுமோ?'

'ஓமோம். சௌரமானக் கலண்டரின் படி 365 நாள்கள் இருக்க வேணும். பூமி நீள் வட்டப் பாதையிலை சூரியனைச் சுத்தி வருகுதல்லே. அப்பிடி அது சுத்தி வர $365\frac{1}{4}$ நாள்கள் எடுக்குது. 365 நாளைக் கலண்டர் நாளாகப்போட்டிருக்கு. அந்தக் கால் நாளைச் சேர்த்து நாலு வருடங்களுக்கு ஒருக்கா 366 நாள்கள் கொண்ட லீப் வருடம் வரும். லீப் வருடத்திலை பெப்ரவரி மாதம் 29 நாள்கள் இருக்கும்'

'அப்ப பெப்ரவரி 29இலை பிறந்த ஆக்களுக்கு நாலு வருடத்துக்கு ஒருக்காத்தான் பிறந்தநாள் வருமோ?' என்று கேட்டான் இனியன். 'ஓம்! வடிவாய்க் கொண்டாடலாமல்லே' என்று சொல்லிச் சிரித் தார் தாத்தா. பிள்ளைகளும் சிரித்தனர்.

'தமிழ் மாதமெண்டு சொல்லிப் பஞ்சாங்கத்திலை போட்டிருக்கிறதைப் பாத்திருக்கிறீங்களே?' தாத்தா கேட்கவும்.

'ஓ... கலியாண வீடு, வீடு குடி புகுதல், கோயில் திருவிழாக்கள் எல்லாம் தமிழுக்கு என்று போட்டுத்தானே நோட்டீஸ் அடிக்கிறவை' என்றான் கண்ணன்.

'இதைச் சந்திர மாதம் என்கிறோம். ஒரு அமாவாசை திதியிலிருந்து அடுத்த அமாவாசை திதி வரை 29.5 நாள்கள் உள்ளது. அதை



அண்ணளவாக 30 நாள்கள் எனக்கொண்டு சந்திர மாதம் கணிக்கப்படுகிறது. ஆனால், ஆங்கில வருடத்திலையிருந்து தமிழ் வருடத்திலை 11 நாள்கள் குறைவு'

'அப்பிடியெண்டால் கணக்குப் பிழைக்குமே!'

'எங்கடை பண்டிகைகள் திருவிழாக்கள் எல்லாமே பருவகாலங்களை அண்டித்தான் அமைந்திருக்கு. வயலிலை அறுவடை முடிஞ்சு, உழைச்சுக் களைச்சுப் போய் இருக்கிற மக்களுக்கு மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தாறதுக்குத்தான் இதெல்லாம் ஏற்படுத்தப்பட்டன. இந்தச் சந்திரமாதக் கணக்குப் படி பார்த்தால் மூண்டு வருடத்திலை 33 நாள்கள் பிந்திப் போகும். இப்பிடியே போனால் வருடப் பிறப்போ, தீபாவளியோ கூட வேற வேற பருவகாலங்களிலை ஏற்பட்டுப் போகும்'

'அப்பிடியெண்டால் கடும் கோடையிலை தீபாவளியும், மாரியிலை வருடப் பிறப்பும் வந்திடுமல்லோ தாத்தா' என்றான் அகிலங்கன். 'வந்திடும். ஆனா அப்பிடி வராமல் எங்கடை பஞ்சாங்கங்களிலை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கு. பூமி சூரியனைச் சுத்தேக்க சூரியன் ஒவ்வொரு விண்மீன் கூட்டத்தையும் கடந்து போகுது எண்டு கணிக்கிறார்கள். அப்படி இந்த விண்மீன் கூட்டத்தை ஒவ்வொரு ராசிகள் என்று கருதி, சூரியன் ஒரு ராசியைக் கடந்து செல்லும் காலம் 30 நாள்கள் எனக் கணிக்கப்படுகிறது. சூரியன் எப்ப ராசியைக் கடக்கேல்லையோ அது கூடுதலான மாதம் எண்டு கணிக்கப்படுது' என்றார் தாத்தா.

'சில காலத்திலை இப்பிடி 13 மாதம் வந்து உண்மையான ஆங்கில வருடத்தோடை சமப்படுகுதா தாத்தா?' என்றான் கண்ணன்.

'இல்லை. பன்னிரண்டு மாதங்களுக்குள் ஆங்கில மாதத்தைப் போல இருக்கக் கூடியதாக தமிழ் மாதத்தையும் எங்கடை பஞ்சாங்க கணிதர்கள் சமப்படுத்தியிருக்கினை. பஞ்சாங்கத்தைப் பார்த்தீங்களெண்டால் 32 நாள்கள் இருக்கிற மாதங்களை நீங்கள் காணலாம்' என்றார் தாத்தா.

'தாத்தா ஒரு கதை. பிளீஸ்' என்றான் இனியன்.

'முல்லாக் கதையைச் சொல்லட்டோ?'

'ஓம்.... ஓம்....' என்றனர் பிள்ளைகள்.

'முல்லாவைப் பார்ப்பதற்காக அவருடைய நண்பரொருவர் வந்திருந்தார். வீட்டு விறாந்தையில் அமர்ந்து இருவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். இடையிலே 'உங்களது வயது என்ன?' என்று முல்லாவைப் பார்த்துக் கேட்டார் அவருடைய நண்பர்.

'என்னுடைய தம்பியை விட எனக்கு மூன்று வயது அதிகம்' என்றார் முல்லா.

நண்பருக்கோ ஆச்சரியாமாக இருந்தது. 'போன வருஷம் நான் கேட்ட போது உங்கள் தம்பியை விட இரண்டு வயதுதான் அதிகம் என்றீர்களே......? இப்போது மூன்று வயது அதிகம் என்கிறீர்கள்' என்று கேட்டார் நண்பர்.

'ஆம்.... அப்படித்தான் சொன்னேன். அதற்குப் பிறகு ஓராண்டு அதிகமாகியிருக்கிறதல்லவா' என்றார் முல்லா.

நண்பருக்குக் குழப்பத்தில் தலை சுற்றத் தொடங்கிவிட்டது. சமயோசிதமாகவும், விகடமாகவும் பேசுவதில் முல்லா கெட்டித்தனமானவர் என்பது இக்கதையில் இருந்து விளங்குகிறதல்லவா? என்றார் தாத்தா. 'ஓம்....ஓம்...என்றனர் சிறுவர்கள். தாத்தா எழுந்தார். தோளில் துண்டைப் போட்டுக் கொண்டு நடந்தார். சிறுவர்களும் சேர்ந்து புறப்பட்டனர்.

(தாத்தா மீண்டும் வருவார்)

**பாபு அண்ணா**

# வெளிநாட்டுப் பணப் புழக்கத்தால் யாழ்ப்பாணம் இன்று....

கல்விசார் தேவைகளுக்காகப் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளுக்கு எம்மவர்கள் சென்ற நிலை மாறி உயிர் பிழைப்பதற்காகவும் பொருள் தேடுவதற்காகவும் அங்கே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எண்பதுகளின் தொடக்கத்துடன் ஆரம்பமாகியது. பெரும்பாலும் யாழ்ப்பாணத்தில் மையம் கொண்ட போர்ச் சூழலும், பொருளாதாரக் காரணிகளும் இளைஞர்களை வெளிநாடுகளுக்கு உந்தித்தள்ளியமை வியப்பான விடயமல்ல.

அங்கு செல்லும் எம்மவர்கள், கடும் பனியிலும், கண் விழித்தும் மேற்கொள்ளும் கடும் உழைப்புப்பற்றிக் கதை, கதையாக எங்களால் அறிய முடிகின்றது. இப்படித் தோன்றிய புதிய நிலைமையின்பால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டுள்ளன. விடுதலைப் போராட்டம் எழுச்சியும் வீச்சும் பெற்றது என்பது ஒரு புறமிருக்க யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலைமைகளிலும் பாரிய மாற்றங்கள் உண்டு பண்ணிவிட்டுள்ளது. ஒரு வகையில் பார்க்கப் போனால் பழைய சாதியமைப்புகள் சிதைவடைந்து புதியதொரு சமுதாய அமைப்பின் எழுச்சிக்கு இப் பணவருகை வித்திட்டது. அதாவது சாதிய ரீதியில் கடந்த காலத்தில் நிலவிவந்த ஏற்றத் தாழ்வுகள் நீங்கி எல்லோரும் சமனானவர்கள் என்ற நிலையைக் கொண்டுவருவதற்கு எல்லாரிடமும் ஓரளவு சமனாகப் பகிரப்பட்டுள்ள வெளிநாட்டுப் பணம் ஒரு காரணியாக இருக்கின்றது என்பதில் இருவேறு கருத்துக்களிற்று இடமிருக்க முடியாது.

ஆனால், இதே வெளிநாட்டுப் பணம் எவ்வாறு யாழ்ப்பாணக் கட்டமைப்பைச் சிதைக்க முற்படுகின்றது என்பது ஆராயப்பட வேண்டிய ஒரு வினாவாகவுள்ளது. காலத்திற்குக் காலம் உலகில் மாற்றங்கள் ஏற்படுவதென்பது ஒன்றும் புதுமையான விடயமல்ல.

### எதை உள்வாங்குவது?

அந்த வகையிலான மாற்றங்களை ஏற்றுக்கொள்வது அவசியமானதும் தவிர்க்க முடியாததும் கூட. சமூகத்தின் வளர்ச்சிக்கும் அதன் எதிர்காலத்திற்கும் அவசியமான மாற்றங்கள் உள்வாங்குவதில் எவருக்கும் எந்தவிதமான சிக்கல்களும் இருக்கப்போவதில்லை. மாறாகச் சமூகத்திற்கு அவசியமற்ற, இயற்கைக்கு விரோதமான, கலாசாரத்திற்கு முரணான பல சம்பவங்களை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தவறென்று உணர்ந்தோ அல்லது உணராமலோ இவை தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

நாவலர் கலாசாரத்தை, பாரம்பரியங்களைக் கொண்ட பிரதேசம், பண்பாட்டு நகரம் என்று பேசிக்கொண்டிருப்பதால் மட்டும் யாழ்ப்பாணத்தின் எதிர்காலம் ஒளிமயமானதாகி விடாது. இது பல வரலாற்றுப் பெருமைகளையும் சாதனைகளையும் வேதனைகளையும் கொண்ட மண் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமிருக்கமுடியாது. அவற்றைப் பேணிப் பாதுகாப்பதுடன் அவற்றின் பெறுமதியை இளைய சமுதாயத்தினருக்கு உணரச் செய்வதிலும் தான் யாழ்ப்பாணத்தின் வெற்றி தங்கியுள்ளது.

### தங்கியிருப்போர் வீதம்

சுதந்திர, சமத்துவம், சகோதரத்துவம் என்பன ஜனநாயகத்தின் அடிநாதங்கள். ஒற்றைக் கடுக்கன்களுடன் சந்திகளில் நின்று சினிமாப் பாணியில் பல்வேறு சில்மிஷங்கள் புரிவோரையும், அரைகுறை ஆடைகளுடன் மேற்கத்தேயப் பாணியில் வலம் வருவோரையும் எந்தப் பண்பாட்டைச்சேர்ந்த பிரஜைகள் என்று அடையாளம் கண்டு கொள்வதில் சிக்கலாகவுள்ளது. வெளிநாட்டிலிருந்து இங்கு வரும் பணமானது யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர், யுவதிகளில் கணிசமானோரின் 'தங்கியிருப்போர்' வீதத்தை உயரச் செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றது. பெருந்தொகைப் பணத்தைச் சிம்பிளாகக்கொடுத்து இவர்கள் வாங்கும் மோட்டார் சைக்கிளுடனும், கைத்தொலைபேசிகளுடனும் இவர்களது பெரும் பொழுதுகள் கழிகின்றன. புதிது புதிதாக முளைவிட்டிருக்கும் மதுபானக் கடைகளின் கதவுகளும் இவர்களுக்காகத் திறந்தேயுள்ளன. போதாக்குறைக்கு குழுச் சண்டைகள், வாள் வெட்டுக்கள் என்பன யாழ்ப்பாணத்தின் அன்றாடச் செய்திகளாவதற்கும் இப் பணம் ஒரு காரணமாயுள்ளதோ எனச் சந்தேகிக்கத் தோன்றுகின்றது. ஆனால், யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்புகள் எதுவுமே இல்லையா? எனக் கேள்வி எழுப்பினால் பல வேலைகளுக்கு ஆள்பற்றாக்குறை நிலவுவது புலப்படும். பெரும் வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய மேசன் வேலை, தச்சு வேலை என்பவற்றுக்கு ஆள்களைப் பிடிப்பது என்பது பெரும்பாடாகவுள்ளது. விவசாயம் வழக்கொழிந்து போகின்றது. இவை மட்டுமன்றி வேறுபல தொழில்களுக்கு ஆள்பற்றாக்குறை. இவற்றை முறையே பயின்று திறம்பட உழைத்தால் சிறப்பாக முன்னேற வழியுண்டாகும். ஆனால், வெளிநாட்டு பக்க பலத்தின் காரணமாகவும் 'கோழி மேய்த்தாலும் கவுண்மேந்துப் பண்ணையில் மேய்க்க வேண்டும்' என்ற சித்தாந்தத்தைக் கொண்டும் இவற்றை இன்றைய இளைஞர்கள் நாடுவது குறைவு.

### செயற்கை மோகம்

அடுத்து, யாழ்ப்பாணத்தை இன்று படிப்படியாக ஆட்கொள்ளும் 'செயற்கை மோகம்' வெளிநாட்டுப் பணத்தின் வருகை காரணமாகவும், பொருளாதாரத் தடை நீக்கத்தின் காரணமாகவும் ஏற்பட்ட வியாதி இது. புதிய தாவரங்களை நடுகை செய்யும் சிந்தனையை யாழ்ப்பாணத்தவரிடம் இன்று காண முடியவில்லை. வீதிகளின் இரு மரங்கிலும் கதியால்கள் அணிவகுத்து நிற்க அதன் நிழலில் பயணிப்பதென்பது தனி சுகமானது. ஆனால், இக்கதியால்கள் யாவும் அழிக்கப்பட்டு மதில்கள் எழுப்பப்படுகின்றன. இது போன்ற பிற செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. புவியின் தாவரப் போர்வையைக் குறைப்பதனால் பின்வரும் விளைவுகள் ஏற்படுகின்றன.

1. சூழல் வெப்பம் அதிகரிக்கின்றது.
2. ஒட்சிசன் குறைவடைகின்றது.
3. மழைவீழ்ச்சி குன்றுகின்றது.
4. மண்ணரிப்பு ஏற்படுகின்றது.

இவ்வளவு காரணங்கள் இருந்தும் முன் சொன்னவாறான சம்பவங்கள் நிகழ்வதை அன்றாடம் காணக் கூடியதாகவுள்ளது. நேர்த்தியாக வரியப்படும் பனைமட்டை வேலிகளும், அழகான வேலைப்பாட்டுடன் கூடிய தென்னோலை வேலிகளும் அழகற்றதாக எமது சமூகத்திற்குத் தெரியத் தொடங்கியதன் பின்னணி என்ன?

கடின உழைப்பும் விடாமுயற்சியும் கொண்ட எமது சமூகத்தின் கட்டமைப்புத் தளர்ந்து போகத் தொடங்கியதற்கான முதற்படிகள் இவையெனக் கொள்ளலாமா? இவை மட்டுமா? பிளாஸ்ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் வாளிகள், பொலித்தீன்கள், பிளாஸ்ரிக் பாய்கள் என்று மேற்கின் முக்கிய சந்தையாக இன்று யாழ்ப்பாணம் மாறிவிட்டது. இவ்வாறான சூழற் கழிவுகளைக் கடைசியில் என்ன செய்யப்போகின்றோம்? இவற்றால் ஏற்படப் போகும் சூழற் பாதிப்புக்களின் தன்மை குறித்து விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் குறைவாகவுள்ளன.

### விளம்பர மோகம்

மற்றது, இங்கு காணப்படுகின்ற விளம்பர மோகம். போரின் வடுக்கள் பதிந்த போரின் வரலாறுகள் பதியப்பட வேண்டிய இடங்களில் பாரிய விளம்பரக் 'கட்டவுட்டுகள்' நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கைதடியூடாக யாழ்ப்பாணத்துள் நுழைவோரைக் கவரும் விதத்தில் இவை அமைக்கப்பட்டுள்ளன. கைதடியில் பிள்ளையார் கோயிலடியில் நிறுவப்பட்ட 'கட்டவுட்டின்' படம் சமூக நன்னோக்கு உடையவர்களால் அண்மையில் கிழிக்கப்பட்டமை வாசகருக்கு நினைவிருக்கலாம். இது மாதிரியான 'கட்டவுட்டுகள்' குடாநாட்டில் பல பாகங்களையும் நிறைத்துள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக இவ்வாறான இடங்கள் பாரிய வரலாறுகளைக் கொண்ட, அவை பாதியப்பட வேண்டிய, அவை தொடர்பான நினைவுச் சின்னங்கள் பாரியளவில் எழுப்பப்பட்ட வேண்டிய இடங்களாகவும் உள்ளன. வேண்டுமானால் அந்த வேலையை இந்த நிறுவனங்கள் பொறுப்பேற்றுச் செய்திருந்தால் சமுதாயத்தின் ஆரோக்கியத் திற்குப் பயனுடையதாக அமைந்திருக்கும்.

எனவே, இவ்வாறான இன்னோரன்ன விடயங்கள் மீதும் கவனத்தைக் குவிக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. சமூகப்பெரியோர்களும், கல்வியியலாளர்களும், அரசியலாளர்களும் ஒருமித்து இந்த நிலைமைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டும். வெள்ளம் வரத் தொடங்கிவிட்டது. இனியும் தாமதிப் போமானால் அனைத்தும் வீணேதான்.

- பாலசிங்கம் செல்வேள்

---

# "...பக்தி என்பது இன்று ஆடம்பரமான ஒன்றாகிவிட்டது.."

## தெய்விகப் பாடல் கலைஞர் சண்முகபாலனின் ஆதங்கம்

யாழ்.- திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளியம்மன் மீது பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு 'சிற்பிகள் நாயகி பாமாலை' என்னும் பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தப் பாமாலைகளைப் பாடியவர்களில் ஒருவர் எஸ்.சண்முகபாலன் பாடல்களை இயற்றிய வரும் அவரே.
இந்தக் கலைஞரின் கலை உலக அனுபங்கள் இங்கே செவ்வி வடிவில் விரிகின்றன.

✧ **'சிற்பிகள் நாயகி' என்ற பாமாலை மூலமாகவே உங்களை அறிந்துள்ளோம். இந்நிலையில் உங்களது இளமைக்காலம் பற்றி கூறுங்களேன்.**




★ எனது பெயர் சண்முகம் சண்முகபாலன். எனது பள்ளிக்காலம் இனிமையானது. சிறிய வயதில் பாடசாலை விழாக்களில் பங்குபற்றி பாடி, ஆடி, நடித்ததுண்டு. அதைவிட எமது ஊரில் இடம் பெறுகின்ற 'காத்தவராயன்' சிந்து நடைக்கூத்து போன்ற நாடகங்களில் பங்கு கொண்டு பாடி, நடித்ததுண்டு.

✧ **'சிற்பிகள் நாயகி' என்ற இசைத்தட்டை வெளியிட்டு இருக்கிறீர்கள். இதற்கு பாடல் எழுத வேண்டுமென்ற எண்ணம் எப்படிக் தோன்றியது?**

★ முதலாவது பாடல் எழுதுகின்ற வரையில் இப்படி ஓர் எண்ணம் எனக்கு இருக்கவில்லை. கற்பனையில் கூட இதுபற்றி எண்ணியதில்லை. ஒரு நாள் எனக்கு ஏற்பட்ட சிறிய மனத்தாக்கம் தான் 'யாழ் பாடிப்பெயர் பெற்ற திருநாடு – மூன்று ஆழ் கடலால் சூழ்ந்திருக்கும் தமிழ்நாடு' என்ற பாடல் உருவாகக் காரணம். ஏதோ ஒரு சக்தி என்னைத் தூண்டிவிட்டது. காரியம் இனிது நிறைவு பெற்றிருக்கிறது.

✧ **ஆரம்பத்தில் கவிதை எழுதிய அனுபவங்கள் உண்டா?**

★ கவிதை எழுதும் ஆர்வம் எனக்கில்லை. ஆனாலும் எதுகை மோனை பொருந்த என்னால் இயன்ற வரை பாடலை எழுதியிருக்கிறேன். எனது சிறு வயதில் அன்றைய காலத்தில் வெளிவந்த ரி.எம். சௌந்தராஜனுடைய பாடல்களை விரும்பிப் பாடுவதுண்டு. அன்றிருந்த பெரியவர்கள் கூட என்னை அழைத்து உட்கார வைத்து என்னைப் பாடச் சொல்லி கேட்டு என் பாடலை ரசிப்பதுண்டு.

✧ **பாடல்களை வெளிநாட்டில் எழுதிப் பாடும் போது இருந்த உணர்வலைகளுக்கும், இங்கு வந்து ஆலயத்தைத் தரிசித்து பாடும்போது உள்ள உணர்வலைகளுக்கும் ஏதாவது வித்தியாசத்தை உணர்கிறீர்களா?**

★ உண்மையிலே அது வித்தியாசமானது. பாடல்களை எழுதிப்பாடும் போது பக்தி உணர்வு பொங்கவே பாடினேன். அதை இங்குவந்து தேவியினுடைய வாசலில் ஏறி உச்சரிக்கும் போது என் மேனியெல்லாம் பக்தியால் சிலிர்த்தது.

✧ **தங்களுடைய ஆதர்ஷகுருவாக யாரை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்?**

★ ஆதர்ஷ குருவாக தென்னிந்தியாவின் பிரபல சினிமாப் பாடகர் ரி.எம். சௌந்தராஜனையே ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஏனென்றால் அவருடைய பாடல்களைக் கேட்டு ரசித்து, அதனையே பாடித்திரிந்ததன் பயன்தான் இந்த இறுவட்டுக்குரிய பாடல்களை எழுதிப்பாட எனக்கு உறுதுணையாய் அமைந்தது. 'சிற்பிகள் நாயகி' பாமலைப்பாடல்களை பாடுவதற்கு முன்பு இந்தியாவிலே ரி.எம். சௌந்தராஜனுடைய வீட்டுக்குச் சென்று அவரிடம் ஆசி பெற்றுவிட்டுத்தான் பாடல்களைப் பாடினேன்.

✧ **பாடல்களுக்குரிய இசையமைப்பு தங்களுடைய பாடல் வரிகளுக்கு வலிகளை ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் ஏதும் உண்டா?**

★ பாடல்களுக்குரிய 'மெட்டை' நான் தான் போட்டேன். அதற்குரிய இசையை தென்னிந்தியப் பாடகரும் இசையமைப்பாளருமாகிய மாணிக்க விநாயகம் தான் வழங்கியிருக்கிறார். மிக அருமையாக இசைத்தட்டுக்குரிய பணியை ஆற்றியிருக்கிறார். என்னுடைய மெட்டை மாற்றாமல் ஒவ்வொரு வரியையும் நுட்பமாக அணுகி உயிரூட்டியிருக்கிறார். வரிகளை மாற்றவோ முறித்துப்பாடவோ முயற்சிக்கவில்லை.

✧ **தங்களுடைய பக்திப்பாடல் இறுவட்டுக்கு 'சிற்பிகள் நாயகி' என்ற பெயரைக் சூட்ட காரணம் ஏதாவது உண்டா?**

★ ஆம். எங்களுடைய ஊர் திருநெல்வேலி. இங்குதான் எமது பத்திரகாளி அம்மன் கோயிலும் உண்டு. இந்த ஆலயத்தைச் சூழ சிற்பம் செய்யும் இடமுண்டு. குறிப்பாகச் சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தில் சிற்பத்துக்கு பெயர் போன இடம் திருநெல்வேலி என்ற எமது ஊர்தான். அதன் காரணத்தால்தான் இந்த இறுவட்டுக்கு 'சிற்பிகள் நாயகி' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தேன்.

✧ **இறுதியாக எமது இளம் கலைஞர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

★ பக்தி என்பது இப்போ ஆடம்பரச் சொல்லாகிவிட்டது. இந்த நிலையை நாம் எல்லோரும் மாற்ற வேண்டும். அதற்காக இறை பக்தி, தேசபக்திப் பாடல்களை இறுவட்டுக்கள் மூலம் வெளிக்கொண்டு வாருங்கள். இளம் சந்ததியினரால் முடியாதது எதுவுமில்லை. இத்தகைய மாற்றத்தின் மூலம் நாம் நல்ல பயனை அடைய வாய்ப்புண்டு.

செவ்வி : சுதேசிகன்

# பொது இடங்களில் சுத்தம் பேணுவதில் கரிசனை கொள்வதில் தயக்கம் ஏனோ?

சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஒரு நாடகம் மேடையேற்றப்பட்டது. அதன் பெயர் 'மலநீக்கம்' – அதனை நெறியாள்கை செய்தவர் ரதீதரன். இதற்கு முன்னரும் அண்டவெளி போன்ற நாடகங்களை இயக்கி, கணிப்புப் பெற்றவர் அவர்.

மலநீக்கம் நாடகம் மலங்கழிப்பது தொடர்பான சில விடயங்களை வெளிப்படையாகவும், நம்மிடமிருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்று இந்துமதம் சுட்டும் மும்மலங்கள் குறித்தும் உள்ளார்ந்து பேசியது. ஆசாடபூதித் தனங்களையும் சாடியது அந்த நாடகம். பின்னர் பல்கலைக்கழகத்தால் தடை செய்யப்பட்டது. மலங்கழிப்பது பற்றிய 'அமங்கல' வார்த்தைகள் அதில் அடங்கியிருந்ததாகவோ, பேசக் கூடாத விடயத்தை 'அது' பேசுவதாகவோ கருதி பல்கலைக்கழகம் அதனைத் தடைசெய்திருக்கலாம். கந்தபுராண கலாசாரம் நிலவிய மண்ணில் இது என்ன 'கதை' என்றும் கருதியிருக்கலாம்.

மலங்கழிப்பதென்பது ஜீவராசிகள் எல்லாவற்றினதும் செயற்பாடுகளில் ஒன்றுதான். மனிதர்களின் காலைக் கடமைகளில் அதுவுமொன்று. அன்றியும்,எந்த நேரத்திலும் மலங்கழிக்கவும் சலங்கழிக்கவும் உறுத்தல் ஏற்படும். அதைச் செய்து முடிக்கும் வரை அவஸ்தையாகவே இருக்கும். மலசலம் நீங்கியதும் நாம் பெறுகின்ற உணர்வும் ஒருவகை மகிழ்ச்சியே.

கிராமப் புறங்களில் மலசலகூடப் பாவனையில்லை. அவர்கள் பற்றைக் காடுகளுக்குள் சென்றே மலசலம் கழிப்பர். அதனால்தான் 'காட்டுக்குப் போதல்', 'வெளிக்குப்போதல்', 'அடிவளவுக்குப் போதல்' (வரணிபோன்ற பகுதிகளில் இச் சொல்பயன்படுகிறது) போன்ற மங்கலமான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவர்கள் மலசலகூடங்களை அமைத்துப் பயன்படுத்த விரும்புவதும் குறைவு.

1990களின் ஆரம்பத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்ட போதும், பலரும்அதைப் புறந்தள்ளி வெளியில் 'இருந்து' சுகாதாரத்தைப் பேணாத நிலைமை எதிர் கொள்ளப்பட்டது கூட அனுபவம்.

**இந்தியப் படையினர் சொன்னது**

மலசல கூடமென்பது சுகாதாரமான இயற்கைக் கடன் கழிப்பதற்கு அவசியமானது. நமது பிரதேசத்தில் வீடும், கிணறும், மலசல கூடமும் பொதுவாகவே அமைக்கப்பட்டிருக்கும். 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை யடுத்து இங்கு வந்த இந்தியப் படையினர் 'ஒவ்வொரு வீட்டிலும் கிணறும் மலசலகூடமும் இருக்குது. இதைவிட வேறையென்ன வேண்டும்? உங்களுக்கெதற்கு தனிநாடு?' என்று கேட்டார்கள்.

உண்மைதான்! இந்த அத்தியாவசிய கட்டமைப்புகள் இல்லாமலே பெருமளவில் இந்தியர்களின் வாழ்க்கை இருக்கிறது. நமது

## யாரோடு நோவோம்...?

சமூகத்தில் சுகாதார விழிப்புணர்வு அதிகமிருந்ததால் திட்டமிட்டு வீடு,கிணறு,மலசலகூடம் ஆகிய கட்டமைப்புக்களை உருவாக்கினர். யுத்தமும். அதன் வழியான இடப்பெயர்வும்,அது ஏற்படுத்திய நலன்புரி நிலையமெனப்படும் அகதிமுகாம் வாழ்க்கையும் இந்தக் கட்டமைந்த வாழ்க்கையைத் தகர்த்து, புதியதொரு நெருக்கடி மிகுந்த வாழ்க்கைக்குள் தள்ளிவிட்டன.

மலசலகூடங்களைச் சரிவரப் பயன்படுத்துவது – அவற்றைச் சுத்தமாகப் பேணுவது தொடர்பில் நமது அக்கறைகள் குறைவு என்றே கூறவேண்டும். பொது இடங்களிலுள்ள மலசல கூடங்களைப் பயன்படுத்துவதில் சுத்தம் பேண வேண்டுமென்ற அக்கறையோ, மற்றவர்களும் பயன்படுத்த வேண்டிய இடம் என்ற கரிசனையோ பலரிடம் இருப்பதில்லை. அதனால் தினமும் மருத்துவமனை, சந்தை, பஸ்நிலையம், பெரிய அலுவலகங்கள், பாடசாலைகள், இடம்பெயர்ந்தோர் முகாம்கள் என்பவற்றில் மலசலகூடங்கள் மற்றவர்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு அசிங்கப்படுத்தப்படுகின்றன. கழிவகற்றிய ஒருவர் தன்னைச் சுத்தப்படுத்துவதில் கொள்ளும் கரிசனையை மலசலகூடத்தின் மீதும் கொண்டால் போதுமானது. அதுவே, மலசல கூடத்தின் சிறப்பான பயன்பாடெனவும் கொள்ளலாம்.

**மலசலகூடங்களில் பிறக்கும் எழுத்துக்கள்**

மேலை நாடுகளில் மலசல கூடங்களை சாதாரண அறைகளை விட மேலாகக் கருதி, அலங்கரித்திருப்பார்கள். பல படைப்பாளிகள் தமது படைப்புக்களை மலசலகூடத்தில் இருந்தே எழுதியுள்ளார்களாம். மலசலகூடம் ரம்மியமான அருவருப்பற்ற சூழலில் இருக்கும் போது இவ்வாறு படைப்புக்கள் உருவாகுவது சாத்தியமே. துர்நாற்றமும் அருவருப்பும் மிக்க சூழலெனில் 'அப்பாடா,இதைவிட்டு எப்போது போவோம்' என்ற மனநிலையே தோன்றும்.

மலசலகூடத்தின் சுத்தத்தைப் பேணுவ தென்பது அதைப் பயன்படுத்தும் ஒவ்வொரு வரின் பொறுப்பாகும் . இதில் கௌரவம் பார்ப்பது தேவையற்றது.

சில மாதங்களுக்கு முன்னர் பாடசாலை யொன்றில் மாணவர்கள் மலசல கூடச் சுத்தி கரிப்புக்குப் பயன்படுத்தப்படுவது தொடர்பான புகார்கள்– குற்றச்சாட்டுக்கள்– வந்திருந்தன – மாணவர்களோ, ஆசிரியர்களோ அது எவராயினும் தாம் பயன்படுத்திய மலசல கூடத்தை பாதுகாப்பான ஏற்பாடுகளோடு சுத்தம் செய்யலாம். அதில் அகௌரவமடையத் தேவையில்லை. அதேபோல சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் கடமைதானே என்ற மனோநிலையில் வாளாவிருப்பதும் நன்றல்ல. பல இடங்களிலும் –குறிப்பாக பொதுக் கழிப்பறைகளில் – சுத்திகரிப்புத் தொழிலாளர் களை எதிர்பார்த்திருந்து, அவர்கள் கடமையைச் செய்யாத நிலையில், அதனைப் பயன்படுத்திய வர்களும் தமக்கான பொறுப்பைத் தட்டிக்கழித்த நிலையில், மலசல கூடங்கள் துர்நாற்றம் வீசிச் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் நிலைமையே காணப்படுகிறது.

**[illegible] மருத்துவமனையில் வெளிநாட்டவர் புகட்டிய பாடம்**

குடாநாட்டின் ஒரு மருத்துவமனையில் இவ்வாறு மலசலகூடங்கள் சரிவரப் பயன்படுத்தப்படாமல் சுகாதாரச் சீர் கேட்டுடன் காணப்பட்ட போது, இங்கு கடமை புரிந்த வெள்ளையின தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் மருத்துமனை நிர்வாகத்திடம் சுட்டிக்காட்டினார். சுத்திரிகரிப்புத் தொழிலாளரின் ஏனோதானோவென்ற போக்கு, மாற்று வழி தேட முடியாத மருத்துவமனை நிர்வாகத்தின் நிலைமை என்பன காரணமாக சீர்கேடு நிவர்த்திக்கப்படவில்லை. ஒரு நாள் கையுறை, சைக்கிள்கம்பிகளைத் தீட்டி உருவாக்கப்பட்ட உபகரணங்கள் சகிதம் குறித்த வெள்ளையின அலுவலர் மலசல கூடங்களை சுத்திகரித்துப் பளிச்சிட வைத்தார். எல்லோரும் மூக்கில் விரலை வைத்ததுதான் மிச்சம்!

குறித்த வெள்ளையர் கௌரவம் பார்க்காமல் அதைத் தனது கடமையாகக் கொண்டதாலேயே இதனைச் செய்தார். நகரத்துக்கு வரும் பயணிகள் பலரும் மலசலகூடம் இல்லாமல் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இப்போது பலராலும் முன் வைக்கப்படுகிறது. நகரத் தேவைகளுக்காக வருபவர்கள் மட்டுமன்றி, தூரப் பிரதேசத்திலிருந்து வந்து இன்னொரு தூரப் பிரதேசத்திற்குச் செல்வதற்காகத் தரித்துச் செல்பவர்களும் இதில் அடங்குகின்றனர்.

எனவே, பொது மலசலகூடங்கள் அதிகளவில் இருக்க வேண்டியதும், அவற்றைப் பராமரிப்பதற்கான ஓர் ஆளணி அமைப்பும் அவசியமாகும். முன்னர் இருந்தது போல கட்டணம் செலுத்தும் மலசலகூடங்களைக் கூட நிறுவலாம். யாழ்.மாநகர நிர்வாகத்தின் ஒழுங்குக்கு–நேர்த்திக்கு கட்டியம் கூறும் விடயமாக மலசலகூட நிர்மாணங்களைக் கூறலாம். மாநகர நிர்வாகம் இந்த நல்ல கைங்கரியத்தை மேற்கொள்ளும் என நம்புவோம். இது ஏனைய உள்ளூராட்சி அமைப்புகளுக்கும் பெரிதும் பொருந்தும்!

**ஏகலைவன்**

# குறுகிய கால யுத்தம் தவிர்க்க முடியாததா?

புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் முழுவதுமாக வந்துவிட்டார்கள். அவர்களுக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள இந்த நிலையிலேயே போர் பற்றிய பேச்சுகள் பொதுமக்களிடம் அடிபடத் தொடங்கியிருக்கிறது.



ஜூலை மாதம் என்பது தமிழ் மக்கள் வாழ்வில் என்றும் அச்சத்தை ஏற்படுத்திய வரலாறாகிவிட்டது. 'கறுப்பு ஜூலை' என்ற அடைமொழியோடு சொல்லுமளவுக்கு சோகங்களைச் சுமந்த மாதம் இது. இந்த ஆண்டு என்னவாகும்....?

மீண்டும் போரா.....? அதைத் தாங்கும் சக்தி இன்னமும் தமிழர்களிடம் மிச்சமிருக்கிறதா....? போரில் இருந்து கொஞ்சம் கொஞ்மாய் ஏதோ ஒரு நம்பிக்கையில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த வாழ்வுகள் மீண்டும் கேள்விக்குறியாகுமா? கிடைத்த சின்னச் சின்ன சந்தோஷங்களும் முற்றுப்புள்ளிகளுக்கு வருகின்றனவா? என்று தமிழர்கள் அந்தரிக்க, மீண்டும் தமிழ் மக்கள் மீது போரைத் திணிக்க தென்னிலங்கை அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன. ஏற்கனவே உருவாகியிருந்த போருக்கான சூழலை ஆழிப்பேரலையின் தாக்கம் சற்றுப் பின்ன நகர்த்தியிருந்தது என்பது தெரிந்ததே. இன்று மீண்டும் புலிகளைச் சீண்டி போருக்கு அறைகூவல் விடுக்கும் விஷமத்தனமான செயல்களில் அரசும் அதன் இராணுவ இயந்திரமும் செயற்படத் தொடங்கியிருக்கின்றன.

கடந்த மாதம் ஊரணியில் விடுதலைப் புலிகள் பயணம் செய்த பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலைக் கண்டித்த புலிகள், போக்குவரத்தில் தமக்கான பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அரசைக் கோரி இரண்டு வார அவகாசத்தையும் வழங்கியிருந்தார்கள்.

ஆனால், இந்தக் காலக்கெடு முடிவடைவதற்கு சில மணித்தியாலங்கள் இருந்த வேளையில், அரசியல் நடவடிக்கைகளுக்காகத் திருமலையில் இராணுவக்கட்டுப்பாட்டில் அமைந்துள்ள புலிகளின் அலுவலகத்தில் தங்கியிருந்த கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் டிக்கானும் பயிற்சியாளர் ஒருவரும் நாட்டுப்பற்றாளர்கள் இருவரும் கோரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நான்கு பொதுமக்களும் இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

பகல்வேளையில் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் துணிகரமாக இத்தாக்குதலைச் செய்யக் கூடியவர்கள் யார்? அத்தோடு இராணுவ – பொலீஸ் காவலரண்கள், சோதனைகளுக்கு மத்தியில் இராணுவ சீருடையணிந்து விசேடமாக 'ஹைஏஸ்' வான் ஒன்றில் ஏழுபேர் வந்தால் அவர்களை இனம் காணும் சக்தி இராணுவத்துக்கு இல்லாமல் போயிருக்குமா?

அத்துடன் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்செல்லும் போது அங்கிருந்த பொதுமக்கள் கண்டுள்ளார்கள். அவர்கள் வந்த வாகனம், மேல் மாகாணத்துக்குரியது என்றும் 'WP 2049' என்ற இலக்கமுடையது என்றும் கூறி 48 மணிநேரமாகியும் பொலீஸாரினால் அந்த வாகனத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது எவ்வளவு பொருத்தமானது? அதுமட்டுமன்றி அந்த வாகனத்தை மறித்த பொலீஸாரை அங்கிருந்த இராணுவத்தினர் தடுத்திருக்கின்றனர். இந்த நிலையை நோக்கும்போது உண்மையில் இது இராணுவ புலனாய்வுத்துறையினரின் குள்ளத்தனமான செயற்பாடுகளில் ஒன்றே எனலாம். புலிகளைச் சீண்டி போருக்கு விடுக்கும் ஓர் அழைப்பாகவே இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஏனெனில் ஏற்கனவே இக் கொலைகளை செய்வதாக இராணுவம் புலிகளுக்குச் சவால் விட்டுக் கூறிய பின்பே இதனைச் செய்திருக்கிறது.

இவ்வாறு போர் ஒன்றை உருவாக்குவதற்கான தேவை இன்று அரசுக்கும் இனவாதக்கட்சிக்கும் பௌத்தத்தின் பேரால் மதத்தைக் கொச்சைப் படுத்தும் தேரர்களுக்கும் இருக்கிறது.தமது அரசியல் நலன்களுக்கும் பணம் சம்பாதிக்கும் நோக்கத்திற்கும் நாட்டு மக்களைக் குழப்பி போரை ஆரம்பிக்கும் தேவை அவர்களுக்கு இருக்கிறது.

ஆழிப்பேரலை நிவாரணப்பணிகளுக்காக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பும் நடைமுறைச் சாத்தியமின்றி அந்தரத்தில் நிற்கிறது. இப்போது புலிகளுக்கு ஏற்பட்டுள்ள உயிராபத்துகள் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஐயத்திற்கு உள்ளாகியுள்ளது.

எப்போதும் போர் ஒன்றே தென்னிலங்கைக்குப் புரியும் மொழியாக இருந்து வருகிறது. அன்பும் கருணையும் புத்தரின் வழியில் நிற்பவர்களுக்கே புரியாத விடயங்களாகிவிட்டன. எனவேதான் இது வரை நிழல் யுத்தமாக இருந்து வந்த நிலைமை நிஜயுத்தம் ஒன்றிற்குத் தூபமிடும் சாத்தியத்தை ஏற்படுத்திவிட்டிருக்கிறது.

ஆனால், அத்தகையதொரு யுத்தம் மூளுமானால் அது சிங்கள மக்களும் இனவாத பிக்குகளும் கனவு காண்பது போல காடுகளுக்குள் நடைபெற வாய்ப்பில்லை. மாறாக கட்டடங்கள் நிறைந்த தென்பகுதிகளுக்குள் நடைபெறும் வாய்ப்பே அதிகமுள்ளது என்பது அவதானிகளது கருத்தாக இருக்கிறது. எனவே, யுத்தத்தின் கோரமுகத்தை சிங்கள மக்களும் அறியும் வாய்ப்பு அப்போது உருவாகலாம்.

இதுவரையும் இறந்த வீரர்களில் சிலரது உடல்களில் தேசியக் கொடியைப் போர்த்தியபடி செல்லும் மரண ஊர்வலங்களை மட்டுமே போரின் பாதிப்பு என்று எண்ணியிருக்கும் சிங்கள சமூகத்தினரும் நான்காம் ஈழப்போரின் போது போரின் வடுக் களை அறியும் நிலை உருவாகும். அப்போது அவர் களும் 'அகதி' ஆகும் நிலை உருவாகி தம்மை 'இடம் பெயர்ந்தோர்' என அழைக்கும் கௌரவத்தைப் பிடித்துக் கொள்ளக்கூடும்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய சமாதானப் பேரவையின் தலைவரும் ஊடகவியலாளருமான ஜெகான் பெரேரா கருத்துக் கூறுகையில் – 'யாழ்.மக்கள் குறுகிய கால யுத்தம் ஒன்றை உடனடியாக விரும்புகின்றனர்' என்றிருந்தார்.

உண்மையில் தமிழ்மக்கள் தமது சுயநிர்ணயத்தை விட்டுக்கொடுக்கத் தயாரில்லை. அதற்கான அரசியல், இராணுவபலம் விடுதலைப் புலிகளிடம் மட்டுமே இப்போது உள்ளது. அவர்களே ஒட்டு மொத்த தமிழர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்கின்றனர்.

எனவேதான் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் நடைபெறும் அத்துமீறல்களை இன்னமும் பொறுத்துக்கொள்ள முடியாமல் போரைத் தொடங்கி குறுகிய காலத்துள் தமிழர் தாயகப் பிரதேசங்களில் உள்ள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என மக்கள் விருப்பக் கொண்டுள்ளனர். உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடக்கி வைக்கப்பட்டுள்ள பூர்வீக விளைநிலங்களையும் வளமான கடற்பிரதேசங்களையும் மீளப் பெறுவதில் உள்ள ஆர்வமே மக்களை அவ்வாறு பேச வைக்கிறது.

**சிவசைலஜா**

(கொழும்பிலிருந்து)